ஓம்

# கொவன்றி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்

# COVENTRY SHRI SIDHI VINAYAGAR DEVASTHANAM

## மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்

## 2012



# KUMBHABHISHEKAM SOUVENIR

08.07.2012

# DRINKZ CASH AND CARRY




WHOLESALE

Unit3 Buckingham Close, Nuneaton CV10 7JT.

# கும்பாபிஷேக

## மலர் சிறக்க

### வாழ்த்துக்கள்..

உங்கள் கொள்வனவுகள் கடைக்கு இலவச விநியோகம் செய்யப்படும் (நிபந்தனைக்கு உற்பட்டது)

email: drinkz.cash.carry@gmail.com
Tel: 02476951234




உ

சிவமயம்

குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

முதலாவது குருமஹா சந்நிதானம்

ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

ஸ்தாபிதம் : 1966

021 222 2870

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.




21/04/2012

## அருளாசிச் செய்தி

விநாயகர் அடியார்களுக்கு,

இலண்டன் கொவென்ட்ரி நகரில் இருந்த அருளாட்சி புரியும் விநாயகப் பெருமானுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. புலம்பெயர் சைவத் தமிழ் மக்களின் பண்பாடு விழுமியங்களைப் பேணும் வகையில் வாழுகின்ற இடமெல்லாம் ஆலயம் அமைத்து தாங்களும் வாழ்ந்து மற்றவரையும் வாழ வைப்பது அனைவருக்கும் மகிழ்வைத் தருகிறது.

மகத்தான மனித வாழ்வை மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு இறைவனுடைய அன்பு தேவை. அந்த அன்பைத்தருவதற்கு இறைவன் ஆலயங்களில் எழுந்தருளுகின்றான். இதனையே நம் சைவ மக்கள் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்றும் நித்தலும் எம்பிரானுடைய கோவில் புகு என்றும் கோவில் இல்லா ஊர் அழகில்லா ஊர் என்றும் நம் சமயம் எடுத்து காட்டுகின்றன. இதனை உணர்ந்த கொவென்ட்ரி ஊர் மக்கள் வேண்டுவர் வேண்டுவதை ஈகின்ற விநாயகப் பெருமானுக்கு ஆலயம் அமைத்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு வழி சமைத்திருப்பது மகிழ்வைத் தருகிறது.

இவ் ஆலயத்தினை நிர்வகிப்பவர்களையம் சிற்பக்கலைஞர்களையும் இவ் ஆலயத்தினை நிர்வகித்து அறப்பணியையும் ஆன்மிகப் பணியையும் ஆற்றிக் கொண்டிருக்கும் அன்புள்ளங்களையும் ஆலய பூஜை கடமைகளை ஆற்றி இருக்கும் சிவாச்சாரியார்களுக்கும் விநாயக பெருமானின் ஆசி கிடைக்க பிரார்த்திக்கிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு!

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**

**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**

## 10 DOWNING STREET
### LONDON SW1A 2AA

12th July 2012

Mr. Kumar Chinnaswamy
Trustee
Coventry Shri Sidhi Vinayagar Devasthanam
Coventry

***Dear Mr. Chinnaswamy***

*We are happy to be able to congratulate you and the executive committee on the opening of your new temple in Coventry.*

*We recognise and value the enriching contribution that the Hindu community has made and continues to make to all aspects of life in Britain, through its generosity, hard work and successful integration with the diverse population of our country.*


*We are very proud to offer you our very best wishes on the Maha-Kumbhabhishekam & Prana-Prathistthapana of your temple.*

*Yours sincerely*

**The Rt Hon David Cameron MP**
**Prime Minister**



**The Rt Hon Nick Clegg MP**
**Deputy Prime Minister**






**SIVASRI. K. PITCHAI GURUKKAL**

*Chief Priest, Sri Karpaga Vinayakar Temple,*
*Principal, Karpaga Vinayakar Veda Agama Vidhyalayam*
*Founder, Sivaneri Kazhakam*
*Secretary, Karpaga Vinayakar School,*
*Pillayarpatti – 630207 Sivaganga District, Tamilnadu, South India.*


உ

ஸ்ரீ குருப்யோ நம:

# வாழ்த்துரை

**நம:ச்வேதாபிதாநாய நாநாகமவிதாயினே !**

**கைவல்ய கல்பதரவே கல்யாணகுரவே நம: !!**

ஆலயம் தொழுவது சாலவும் நன்றென்று மொழின்று, கோயிலில்லா ஊரில் குடி இருக்கவேண்டாம், என்பது போன்ற பழமொழிகள் ஆலயவழிபாடு அவசியம் என்பதை வலியுறுத்துகின்றன. அக்கருத்தினை மெய்ப்பிக்கும் வண்ணமாக கடல்கடந்து வாழ்கின்ற நம் மக்கள் தாங்கள் சென்ற நாடுகள் அனைத்திலும், ஆலயங்களை எழுப்பி வழிபாடுகளைச் சிறப்பாகச் செய்து வருகின்றார்கள்.

சிங்கப்பூர், மலேஷியா, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து போன்ற பலநாடுகளில் விநாயகப்பெருமான் திருக்கோயில் கும்பாபிஷேகங்களைச் செய்துவைக்கக் கூடிய பெரும்பேறு நமக்குக் கிட்டியதில் அளவுகடந்த மகிழ்ச்சி. அவ்வகையில் ப்ரித்தானியா, பெர்மிங்ஹாம், கொவன்றி என்ற இடத்தில் எழுந்து அருள்பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் ஆவர்த்தன அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகப் பெருவிழா வருகின்ற ஆனிமாதம் 25ஆம் நாள் 08.07.2012 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற இருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி.

விநாயகப்பெருமான் உலகெங்கனும் பரந்து விரிந்து விளங்குகின்ற ஓர் அற்புதமான தனித் தெய்வம். அவரது வழிபாடும் நம் மக்களன்றி அனைத்துத் தரப்பு மக்களாலும் செய்யப்படுவதை நாம் காணமுடிகிறது. உலகின் பலநாடுகளிலும் விநாயகப் பெருமானுக்கு தனிக் கோவில்கள் கட்டப்பட்டு வழிபாடுகள் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

அதுபோல இத்திருக்கோயிலும் மேன்மேலும் வளர்ந்து எண்ணற்ற மக்களின் வாழ்க்கைக்குத் துணைசெய்யும் வண்ணமாக அமையவும், நூல்வெளியீடு சிறக்கவும் எல்லாம்வல்ல கற்பகவிநாயகப் பெருமான் திருவருளைப் போற்றி வணங்கிப் பிரார்த்திக்கிறோம்.

பேரன்புடன்

K. Pitchai


Ph: 0091 (0)4577-264275. H/P: 00919443362320 / 9842462320

**Website: www.pitchaianna.com / e-mail: pitchaianna@gmail.com**

# அருளாசியுரை

'சித்திவிநாயகனை சிந்தையில் நினைக்க செயல்கள் யாவும் சித்தியாகும்' என்கின்ற வாக்கிற்கு இணங்க எம்பெருமான் விநாயகனை நினைத்த மாத்திரத்திலேயே திருவருள் செய்யக்கூடியவர். முருகப்பெருமான் வள்ளியை ஆட்கொண்ட போது விநாயகனை நினைத்த மாத்திரத்திலேயே வந்தருள் புரிந்தவர். அப்படிபட்ட முதற்கடவுளுக்கு பெரிய பிரித்தானியாவின் கண்ணே மத்தியில் அமைந்திருக்ககூடிய புராதன வரலாற்றுச் சிறப்பு மிக்க கொவன்றி மாநகரின் ஆற்றங்கரையோரமாய் மிக அழகிய திருக்கோவில் ஒன்று அமையப்பெற்று முதலாவது மங்கள திருக்குட முழுக்குப் பெருஞ்சாந்தி விழா நடைபெறுவது சைவத்தமிழுலகைப் பேருவகை கொள்ளச் செய்யும் என்பதில் ஐயப்பாடில்லை.

ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்த சைவத்தமிழ் மக்களால் பெரும்பாலும் இவ்வாலயம் பரிபாலிக்கப்பட்டு வழிபடப்பட்டாலும் தென்கிழக்காசிய இந்துக்களின் முக்கிய வழிபாட்டுத்தலமாக பரிமளிப்பதும் கண்கூடு. இத்தேவஸ்தானம் சமயக்கிரிகைகள் ஆற்றும் ஆன்மீக மையமாக மட்டுமன்றி கலை நிகழ்வுகளையும் சமூகத் தொண்டுகளையும் மற்றும் இன்னோரன்ன பிற செயற்பாடுகளையும் முன்னெடுத்துச் செய்து வருவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

தூரநோக்குச் சிந்தனையோடு மிகக்குறுகிய கால வேளையில் பரந்துபட்ட செயற்பாட்டை செய்யும் கொவன்றி ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான தலைமை சிவாச்சாரியார், அர்ச்சகர்கள், இவ்வாலயத்தை பரிபாலனம் செய்யும் தலைவர், செயலர், பரிபாலன சபையினர், உபயகாரர், அடியவர்கள், தொண்டர்கள், துறைசார் வல்லுனர்கள் அனைவரும் போற்றுதற்கும் அருளாசிக்கும் பாத்திரமானவர்கள்.

மேலும் அனைவற்றையும் ஆவணப்படுத்துவது என்பது வரலாற்றுத் தேவையும் காலத்தின் கட்டாயத் தன்மையுமாகும். இவ்வாலய வரலாறு, அடியவர்களின் மனோநிலை, விநாயக வழிபாட்டின் கூறுகள், கும்பாவிஷேக சிறப்பு, ஆன்றோரின் சிறப்புச்செய்திகள் போன்ற இன்னோரன்ன விடயங்களைத்தாங்கி வரும், இக் கும்பாபிஷேக மலரினை மிக அழகுற வெளிக்கொணர தமது மெய்வருத்தம் பாராது திறம்பட உழைத்த மலர்குழுவினை ஆசீர்வதிப்பதோடு, மலர் வெளியீடும் சிறப்புற வாழ்த்தி என்னையன் பாலமுருகனை இறைஞ்சுகின்றோம்.

- சுபம் -

**இவ்வண்ணம்**

**"வேதாகம வித்தியாவிபூஷன்"**

**சிவஸ்ரீ. சௌபாக்கிய குமாரக்குருக்கள்**

**ஆதீனகர்த்தா**

**நல்லூர் ஸ்ரீபாலகதிர்காம தேவஸ்தானம்**

**இலங்கை - 0094 21222 9092**



# தேவஸ்தான பிரதம குருக்களின் ஆசிச் செய்திகள்

"கலியுகே சண்டேன விநாயகௌ" என்ற வாக்கிற்கமைய கலியுகத்தின் பிரத்தியட்ச தெய்வங்களான ஆதிபராசக்தி அன்னையும், விநாயகப்பெருமானும் அதிகம் திருவளாட்சி செய்கின்றனர். இந்த வகையில் இந்து சமயத்தின் முழுமுதற்கடவுளாகிய விநாயகப்பெருமானுக்கு திருக்கோவில் எழுப்ப வேண்டும் என்ற இறைகைங்கரிய நோக்குடன் கொவன்றி நகரில் சைவப் பேருள்ளங்கள் சில இணைந்து செயல்பட்டன.

சுவாமி விபுலானந்தர் பாடியது போல "உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்ற தூய சிந்தனையோடும் சமூக அக்கறையும் கொண்டு செயற்பட்டவர்க்கு மத்தியிலும், துரதிஷ்டமான மனக்கசப்புகள் மிக்க சம்பங்களும் நடந்தன. எனினும் இறைவன் அடியவர்களுக்கு எளியவனானாலும் ஆன்மாக்கள் பக்குவப்பட பல சோதனைகள் செய்வான். பக்தனின் பத்தி ஸ்திரத்தன்மைக்கான பல சோதனைகளையும், வேதனைகளையும் எதிர்கொள்ள வைத்துப் புடமிடுவான். இச்சைவசித்தாந்தக் கோட்பாட்டை பூரணமாய் உணர்ந்து கொண்டு புதுப்பொலிவுடன் "எல்லாம் இறைவனின் திருவிளையாடலேயென" கொண்ட இலட்சியமே கண்ணாய் இருந்ததன் கண், இறைவன் மனம் குளிர்ந்து திருக்கோவில் எழுந்தருள திருவருள் பாலிந்துள்ளார்.

இன்று பிரித்தானியாவில் குறிப்பிடத்தக்க சமூக ஆன்மீகத்தலமாக மையம் கொண்டுள்ள இத்தேவஸ்தானமானது நெடிய வரலாற்றுப் பாரம்பரியமோ, அன்றி மிகப்பெரிய பின்புலமோ கொண்டதன்று. அடியவர்களால் அடியவரால் அடியவர்களுக்காக என்ற தன்மையில் விதையிடப்பட்டுள்ளது. இதனை விருட்சமாக்க வேண்டியது அனைவரது கடமையாகும். மேலும் புலம்பெயர் தேசங்களிலும், எமது கலை, பண்பாட்டு நாகரீகங்களைக் கைக்கொள்ள வகை செய்ய வேண்டும் என்பதாலும் எமது தாய்தேசத்திற்கும் உலகிற்கும் இராமர் அணில் போல் ஒரு பங்காவது உபகரிக்க வேண்டுமென்ற அவாவினாலும் ஆரம்பமான இவ்வான்மீகத்தலத்திற்கு நல்லதொரு மணிமகுடம் வைத்தாற் போல இன்று அதி சுந்தர ஆலயமொன்று அமைக்கப்பட்டு முதலாவது கும்பாபிஷேகம் செய்வது எமது பெரும்பேறாகும். 2010இல் இவ்வாலயத்தை ஆரம்பித்து இம்மங்கள வேளையில் மிகப்பாரிய பொறுப்புகளை வகிக்கும் தலைவர், செயலாளர், உபசெயலாளருக்கு முதன்கண் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்து சிரமும்-கரமும் இருந்தால் மட்டும் போதாது. ஏனைய அங்கங்களும் தேவை. நேர்த்தியாய் அமைந்த முதலாவது நிர்வாகசபையின் ஏனைய அங்கத்தவர்க்கும், தொண்டர்களுக்கும், அடியவர்களுக்கும், உபயகாரர்களுக்கும் மற்றும் ஆலய துறைசார் சேவைகளில் தம்மை இணைத்துக்கொண்ட ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள் அனைத்துக் கொவன்றி வாழ் மக்களுக்கும் விநாயகப்பெருமானின் திருவருளும் குருவருளும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

இவ்வினிய வேளையில் ஆலயம் சார்ந்தும், சமூகம் சார்ந்தும் சமகால ஆவணப்பேளையாய் அமையும் இக்கும்பாபிஷேக மலர் வெளிவருவது வரவேற்கத்தக்க பாராட்டுதல்களுக்குரியது. ஒரு ஆக்கத்தை பிரசவிக்க ஆக்கியவன் படும் சிரமம் ஆக்ககர்த்தாவுக்கே புரியும். கொவன்றி சித்தி விநாயகப்பெருமான் தலைமுறைகள் கடந்து சூரிய சந்திரர் உள்ளவரை சான்னித்தியமாகி அனைவர்க்கும் அனைத்து சுபயோகங்களும் அருள் ஆன்மார்த்தமாகப் பிரார்த்தனை செய்கின்றோம்.

"சித்த விநாயகனை சிந்தையில் நினைக்க செயல்கள் யாவும் சித்தியாகும்"

சுபம்

**இவ்வண்ணம்,**
**சிவாகம கிரியாபூஷனம் சிவ சௌபாக்கிய சகிகுமாரக்குருக்கள் B.A (Hons)**
**பிரதம குரு**
**கொவன்றி சித்தி விநாயகர்.**

LORD MAYOR'S PARLOUR
COUNCIL HOUSE
EARL STREET
COVENTRY
CV1 5RR

Telephone Number: 024 7683 3100
Fax Number: 024 7683 3078
E.mail: lord.mayor@coventry.gov.uk

8 June 2012

MAHA- KUMBABISHEKAM & PRANA-PRATHISTTHAPANA

As Lord Mayor of the City of Coventry, I am delighted to send greetings to the Coventry Shri Sidhi Vinayagar Devasthanam as you celebrate the Maha-Kumbhabhishekam & Prana-Prathistthapana.

The CSSVD fulfils the spiritual and religious needs of the community as well as providing a wonderful service to the wider community building towards a prosperous and cohesive community.

The City of Coventry enjoys and supports its efforts in working with all divisions of our multi-cultural and ethnic communities. It has always been a diverse city, which welcomes newcomers and celebrates the contribution they make to our society and rich culture.

This is a significant occasion for the Hindu Community as they celebrate the Grand inauguration, Sanctification and Consecration of their new Temple and I would like to offer special greetings on behalf of the City of Coventry.

The Lady Mayoress and I look forward to joining the Hindu Community on this significant occasion.

Tim Sawdon

Councillor Tim Sawdon
Lord Mayor of the City of Coventry



Communities
and Local Government

**The Rt Hon Eric Pickles MP**
*Secretary of State for Communities and Local Government*

***Department for Communities and Local Government***
Eland House
Bressenden Place
London SW1E 5DU

Tel: 0303 444 3450
Fax: 0303 444 3289
E-Mail: eric.pickles@communities.gsi.gov.uk

www.communities.gov.uk

Our Ref: ER/ER/016925/12

20 June 2012

**Coventry Shri Sidhi Vinayagar Devasthanam**
65A George Elliot Road
Coventry
CV1 4HT

Dear Trustees

I am pleased to congratulate you on the opening of your new temple in Coventry.

The Hindu community can be proud of its rich contribution to the diverse commercial, professional and cultural life of our country and it gives me great pleasure to send my very best wishes on the ***Maha-Kumbhabhishekam and Prana-Prathistthapana*** of your temple.

I wish all who worship in the temple long life and happiness.

Yours ever
Eric Pickles



**THE RT HON ERIC PICKLES MP**
***Secretary of State for Communities and Local Government***

HOUSE OF COMMONS
LONDON SW1A 0AA

Please respond to:
Transport House, Short Street
COVENTRY, CV1 2LS
Tel. No. 024 7625 7870

***Trustees***
*Coventry Shri Sidhi Vinayagar Devasthanam*
*Coventry*
*CV1 4HT*

*22nd June 2012*

***RE: Maha-Kumbhabhishekam & Prana-Prathistthapana***

*I am pleased to be associated with the inauguration of the* ***Coventry Shri Sidhi Vinayagar Devasthanam****, and its aspiration to be a shining beacon in the community it serves, a source of help to the young and old alike, and a significant resource for the use of everyone.*

*I am confident that it will achieve its ambitions, and that is why I wish the Coventry Shri Sidhi Vinayagar Devasthanam, every success and best wishes for a bright and influential future.*

*Yours Sincerely,*



*Geoffrey Robinson*
**Geoffrey Robinson MP**
**COVENTRY NORTH WEST**

**HOUSE OF COMMONS**
**LONDON SW1A 0AA**

Please respond to:
Ground Floor, rear of Queens House,
16 Queens Road,
COVENTRY, CV1 3EG.
Tel. No. 024 76553159

JC/JOB/a202

29th May 2012

Coventry Shri Sidhi Vinayagar Devasthanam
Coventry
CV1 4HT

**RE: Maha-Kumbhabhishekam & Prana-Prathistthapana**

Thank you for your letter dated 23rd May 2012. I am delighted to offer you best wishes for the Grand inauguration, Sanctification and Consecration of your new Temple. This new temple will add to the ever growing collection of places of worship which add to the great multi cultural and multi faith nature of our great city of Coventry.

I wish you well for the event and pass my best regards to all who will use the Temple both now and in the future.

Yours sincerely,

Jim Cunningham

**Jim Cunningham, MP**
**COVENTRY SOUTH**






**EXECUTIVE COMMITTEE**

**Chairman**
Mr.S Ramachandran

**Vice Chairman**
Dr Mrs S Radhakrishnan

**Secretary**
Mr.K Baskeran

**Joint Secretary**
Mr.Raj Paramakumar

**Treasurer**
Mr.T. Joganathan

**Asst Treasurer**
Mr. K Sarvananthan

**Elected Comm. Member**
Mrs S Jaijam

**Committee Members**
Mr N Balasubramaniam
Mr R. D Ratnasingam
Mr S Thedchanamoorthy

**BOARD OF TRUSTEES**

**Chairman**
Mr. R. Kanesharajah

**Secretary**
Mr. S. Abayalingam

Mr. Pon Theivendram
Mr. T. Thevaraajan
Dr. V. Paramanathan
Mr. S. Premachandra
Dr. A. Thevasagayam
Mr. S. Sri Rangan

**Solicitor**
Mrs. G. Kathirgamanathan
72 Chestnut Drive
Pinner,Middlesex
HA5 1LY



*"Ammanai Saran Addainthal Athika Varamperalam"*
**SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**
*5, CHAPEL ROAD, LONDON. W13 9AE.* *TEL: 0208 - 810 0835*
Founded on 10-08- 1991 Charity No: 1014409 0208 - *840 0485*
www.ammanealing.com Email: info@ammanealing.com


கொவன்றி ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்,
65A George Eliot Road,
கொவன்றி

# மகா கும்பாபிசேகப் பெருவிழா

முழுமுதற்கடவுளாம் விநாயகப் பெருமானுக்கு பிரித்தானியாவில் கொவன்றிப் பகுதியில் ஆலயம் அமைத்து குடமுழுக்கு விழா காணும் செய்தி அறிந்து அறப்பணியாளர்களும் அம்பிகை அடியார்களும் பெருமிதம் கொள்கின்றோம்.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற ஆன்றோர் வாக்கிற்றிணங்க சொந்த நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்து வாழும் எம்மவர்கள் கலை கலாசாரம் வழுவாது, வதியும் இடத்திலும் கலை கலாசாரம் மேன்நிலை அடையவும், ஆன்மீகம் வளரவும் இலங்கைத் தமிழராகிய எம்மினம் பெருமிதம் கொள்ளும் வகையில் ஆலயம் அமைத்து விழாக் காண உறுதுணையாக அமைந்த அன்பர்கள் பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியவர்கள்.

சமய வளர்ச்சி மட்டுமல்லாது இன்றைய காலகட்டத்தில் தாயகத்தில் நடைபெற்று வரும் சமூகப் பணிக்கும் இவ்வாலயம் உறுதுணையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

அம்பிகையின் புதல்வனாம் ஸ்ரீ சித்தி விநாயகர் குடமுழுக்கு விழா சிறந்து பொலியவும் அதையொட்டி வெளிவரும் மலர் மணம் பரப்பவும் எல்லாம் வல்ல ஸ்ரீ கனகதுர்க்கை அம்பிகையின் பாதம் பணிந்து வாழ்த்தி அமைகின்றோம்.

ஆலய அறப்பணியில்,

செ இராமச்சந்திரன்,
தலைவர்,
ஆலய நிர்வாகசபை

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."




# ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம் - நொட்டின்கம்

Sri Thurkkai Amman Temple - Nottingham

10A West Crescent, Beeston, Nottinghamshire
NG9 1QE, United Kingdom

*Tel: 01159677751, web: nottinghamamman.org*


மூலாதாரத்திற்கு உரியவராக இருக்கும் விநாயகபெருமான் கடவுள்களில் முதலானவராக விளங்குகிறார். பொதுவாக முழுமுதற் கடவுளான விநாயகபெருமானை வணங்கி விட்டே எந்த ஒரு நல்ல காரியத்தையும் தொடங்கும் பழக்கம் பல ஆயிரம் ஆண்டுகளாக வழக்கத்தில் உள்ளது.

குறிப்பாக எந்த ஒரு சுப விஷயத்தை செய்ய தொடங்கினாலும், பிள்ளையாருக்கு சிதறுகாய் போட்டு விட்டு ,""அப்பனே! விநாயகா ! தொடங்கும் செயல் தடையேதும் இன்றி இனிதே நிறைவேற்றி அருள்வாய்!" என வணங்கி விட்டே செயற்படுவர். அதேபோன்று எழுத தொடங்கினாலும், "பிள்ளையார் சுழி போட்டு விட்டே எழுத தொடங்க வேண்டும் ' என்று குழந்தைகளுக்கு வீட்டில் உள்ள பெரியவர்கள் வழிகாட்டுவர்.

விநாயகரின் முன் பக்தியோடு சொல்லி வழிபடுவோருக்கு தொடங்கும் செயல்கள் யாவும் இனிதே நிறைவேறும். தோஷங்கள் யாவும் நீங்கும். வாழ்வில் உண்டாகும் துன்பம் தொல்லை யாவும் அடியோடு அகலும். குலம்தழைக்க மழலைச் செல்வம் கிடைக்கும். மேம்பாடும் நற்புகழும் உண்டாகும். அஷ்டமாசித்திகள் கை கூடும்.

எமது ஆலயதுடன் நெருங்கிய உறவு கொண்ட கொவன்றி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபான சபைக்கு, புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் இன்று கும்பாபிஷேகம் காணும் இவ் ஆலயம் மென்மேலும் தொடர்ந்து வளர்ந்து சமய கலை கலாச்சாரத்தை மேலும் வளர்க்க நொட்டின்கம் ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம் சார்பில் மனமார வாழ்த்துகிறேன்.


நொட்டின்கம் ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம்
ஜனார்த்தனன் பாலசுந்தரம்
( அறங்காவலர் சபைத்தலைவர் )

மகாசக்தியச்ச வித்மஹே ஸ்வர்ண புஷ்பாய தீமஹீ !
தந்நோ கொவன்றி முத்துமாரியம்மன் பிரசோதயாத் !!

# அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில்



## சைவ சமய நற்பணி மன்றம்

TAMIL HINDU COMMUNITY SOCIETY

Charity Reg. No 1136595 Since: 2009
202 Lockhurst Lane, Foleshill, Coventry, CV6 5NJ
Website: www.muthumariamman.org.uk Email:amman@muthumariamman.org.uk



விநாயகர் அடியார்களே!

## வாழ்த்துரை

ஸிந்தூர வர்ணம் த்விபுஜம் கணேசம்
லம்போதரம் பத்மதலே நிவிஷ்டம்!
ப்ரஹ்மாதிதேவை: பரிஸேவ்யமானம்
ஸித்தைர்யுதம் தம் ப்ரணமாமி தேவம்!!

எல்லாம் வல்ல பரம் பொருளாகிய இறைவன் மனம், மொழி, மெய் என்னும் திரிகரண சுத்தியுடன் தன்னை வழிபடும் அடியவர்களுக்கு அருள் சக்தியை வழங்கும் புனித தலமே ஆலயமாகும். எம் முன்னோர்கள் மனித வாழ்வின் மேன்பாட்டுக்காக வேதாகம முறைப்படி ஆலயங்களை அமைத்து வந்தனர். அந்த வகையில் புலம் பெயர்ந்து வாழும் எம்மவர்கள் சுவர்ணபூமி என கொண்டாடப்படும் இங்கிலாந்து நாட்டில் வடபால் கொவன்றி என்னும் பெயருடைய திருநகரத்தில் அடியவர்களின் பெரும் முயற்ச்சியினால் கோயில் கொண்டு எழுந்தருளும், விக்கினங்களை நீக்கி வாழ்வில் வெற்றியை வாரி வழங்கும் அருள்மிகு சித்தி விநாயகர் பெருமான் ஆலயம் கும்பாபிஷேக பெருவிழா காண்பதையிட்டு நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைக்கின்றோம்.

அத்துடன் இவ்வாலயமானது விநாயகரின் திருவருளினால் மென்மேலும் பல வளர்ச்சிகள் கண்டு எமது சமயம், கலாச்சாரம் என்பனவற்றை வளர்ப்பதோடு வருங்கால சந்ததியினருக்கு இவற்றை எடுத்துச் செல்வதனூடே எமது சமயம் மேலும் விளிப்புடன் மென்மேலும் வளர தன்னால் இயன்ற சேவைகளையும் இவ்வாலயம் வழங்க வேண்டும் என வணங்கி வாழ்த்துகின்றோம்.

நன்றி

இவ்வணம்,

அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில்

குருக்கள், நிர்வாகம், அடியார்கள்



**திரு சின்னத்தம்பி இரவீந்திரன்**
**தலைவர்**
**கொவன்றி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்**

"ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலுமெயிற்றனை
நந்திமகந்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

கொவன்றி வாழ்நகர் சைவத் தமிழ் மக்களுக்கென்று ஒரு வழிபாட்டுத்தலம் நீண்ட காலம் இல்லாமையை உணர்ந்த நாம் சிலர் ஒரு ஆலயம் அமைக்கும் ஆன்மீகப்பணிக்காய் எம்மை இணைத்துக் கொண்டோம். எமது அவாவினாலும் அயராத முயற்சியினாலும் இறை கிருபையினாலும் நெடிய பயணத்தின் பின் பலன் கிடைத்தது.

இவ்வேளையில் இந்துசமயத்தின் முழுமுதற்பொருளான விநாயகப்பெருமானுக்கு திருக்கோவில் எழுப்புவதற்கு திருவுள்ளச்சீட்டும் கிடைத்தது. கொவன்றி ஸ்ரீ சித்திவிநாயப் பெருமானுக்கு 2010ம் ஆண்டு மாசித்திங்கள் மஹா சிவராத்திரி நன்நாளில் தற்காலகமாக ஆலயம் ஒன்று அமைத்து நித்திய நைமித்திய வழிபாடுகளை செவ்வனே செய்து வந்தோம். இருந்தாலும் இவ்வாலயம் அடியவர்களின் பெரும் வருகையினால் வசதி குறைந்த ஒன்றாகவே இருந்தது. இந்நிலையில் எமது எதிர்காலத்திட்டங்களில் ஒன்றாக இருந்த பெருங்கோயில் அமைக்கும்பணி வெகு சீக்கிரமே ஆரம்பிக்கப்படவேண்டிய கட்டாயத் தன்மையுடையதாய் அமைந்தது. விநாயகப் பெருமானின் தனிப்பெருங்கருணையினாலும் அடியவர்களின் பூரண ஒத்துழைப்பினாலும் ஆகமம் பேணும் அருங்கோவில் அமைக்கப்பட்டு இன்று முதலாவது மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது முதற்குழந்தையை ஈன்றபோது பெற்ற பெருமிதத்திலும் பெரியது. சமூகப் பொறுப்புள்ளவற்றில் பங்கு வகிப்பதென்பது மிகுந்த பிரயத்தனத்திற்குரியதொன்றாகும். அதற்கு மேலேயும் நாம் ஒருபடி சென்றுள்ளோம். எம் இப்பயணப்பாதையில் பூக்களும் சோலைகளும் எம்மை வரவேற்கவில்லை. மாறாக முட்களும் கற்களும் எம்மை வரவேற்றன. எனினும் விநாயகரின் அருளால் முட்களும் கற்களும் எம்மை வரவேற்றன. விநாயகரின் அளவற்ற உறுதுணையால் இவற்றையெல்லாம் கடந்து வந்துள்ளோம். இன்று பேரானந்தத்திலும் திளைக்கின்றோம். ஆலயங்கள் பல்கலைக்கழகங்களாக விளங்க வேண்டும் என்ற எம்மவரின் சிந்தனையால் இலவச சைவத்தமிழ் வகுப்புக்கள் சுலோக வகுப்புக்கள் பண்ணிசை கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம் முதலியன நடைபெற்று வருகின்றன. எதிர்காலத்தில் இவற்றையெல்லாம் விரிவுபடுத்தி மேலும் கலை கலாச்சார வகுப்புக்களை செயத்திட்டமிட்டுள்ளோம். தவிரவும் காலந்தோறும் இவைகளை அவைக்காற்றுகைப்படுத்தி நாடகங்கள் நடனங்கள் இசைநிகழ்வுகள், பட்டிமன்றங்கள் போன்ற இன்னோரன்ன பிறவும் செய்து வந்துள்ளோம். மேலும் சமூகம் சார்ந்து வாரம் தோறும் நூல் நிலையம் இலவச சட்ட ஆலோசனைகள், இரத்ததானம், போட்டி நிகழ்வுகள், அன்னசாலை என்பன எமது ஆலயத்தை ஒரு அறச்சாலையாகவே ஆக்கியது.

தாயகத்து எம் உறவுகளின் தவிப்பிற்காய் பொருளாய் பணமாய் பிரார்த்தனையாய் இன்னும் பல வடிவாய் செய்து வருகின்றோம். இவ்வேளையில் இக்கைங்கரியங்களுக்கெல்லாம் உங்கள் கைகளையும் இணைத்து பலம் சேர்த்தது போல இனிவருங்காலங்களிலும் தொடரும் வண்ணம் மிக வினயமாக வேண்டுகிறோம்.

எமது இந்த சமய சமூக மையத்திற்கு ஆதாரமாய் அமைந்த பெருங்கோவிலைக்கட்டி முடிக்க தமது மகோன்னத பங்களிப்பைச் செய்த கொவன்றி ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் அடியவர்கள் ஆலய அறப்பணியாளர்கள் எமது மதிப்பிற்குரிய தலைமைக்குருக்கள் சிவ ஸ்ரீ ரூபன் குருக்கள் அவர்களுக்கும் ஆலயத்தினை அழகுற வடிவமைத்துத் தந்த சிட்பரட்ணா விஷ்வபிரம்ம ஸ்ரீ காந்தன் ஆசாரியார் மற்றும் குழுவினர்க்கும், உபயகாரர்கள் நலன்விரும்பிகள் துறைசார் வல்லனர்கள், இளைஞர் அணியினர் எனக்குப் பக்கபலமாய் இருந்ததனை இத்தருணத்தில் நினைவு கூறுகின்றேன்.

எமக்கு நற்சிந்தனைகளைத் தந்து அவற்றிக்கு செயல் வடிவமும் வல்லமையும் தரும் ஸ்ரீ சித்தி விநாயகனின் திருவருளை நிதர்சனமாய் அனுபவித்தவன் என்ற வகையால் அனைவரும் இன்புற்று வாழ பிரார்த்திக்கின்றேன்.

"சித்தி விநாயகனை சிந்தனையில் நினைக்க செயல்கள் யாவும் சித்தியாகும்"

உ







'சித்தி விநாயகனைத் தொழ செயல்கள் யாவும் சித்தியாகும்"

# திருவருள்மிகு கொவன்றி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான ஆவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ பிராணப்பிரதிஷ்டா

# மஹாகும்பாபிஷேகப் பெருவிழா

துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும்பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆணைமுகத்தானை
காதலால் கூப்புவர் தம்கை.

**02-07-2012 - 08-07-2012**

விநாயகர் அடியார்களே!

பிரபஞ்ச உற்பத்தியின் நாதவடிவமான பிரணவாகார முழுமுதல் தெய்வமான விநாயகப் பெருமான் ஆன்மாக்கள் மீது கொண்ட அபரிமிதமான பெருங்கருணையால் வேண்டுவார் வேண்டும் வடிவிலும் இடத்திலும் இருந்து திருவருள் ஆட்சி செய்யும் இயல்புடையவர். இவ்விதமே சூரிய அஸ்தமனமே காணாத இராச்சியம் என்ற சிறப்பினைப் பெற்ற பெரிய பிரித்தானியாவின் மத்தியில் நிலவளமும், நீர்வளமும், பக்தி செழிப்பும் கொண்ட கொவன்றி என்ற புராதன புண்ணிய நகரில் ஆற்றங்கரை ஓரமாய் **"ஸ்ரீ சித்திவிநாயகர்"** என்ற திருநாமங் கொண்டு வீற்றிருக்கின்றார். எம்மப்பனின் ஆணையாலும், குருவருளாலும், அறப்பணியாளர்களின் உந்துதலினாலும் உபயகாரர்கள் - அடியவர்களின் ஒருங்கிணைந்த பெரு முயற்சியினாலும் இந்திரலோகத்து அமரரும் வந்திறஞ்சும் அதிசுந்தரமான திருக்கோயில் ஒன்று நிர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாலயம் சுவஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான **நந்தன வருஷம் ஆனித் திங்கள் 25ம் நாள் (08-07-2012) ஞாயிற்றுக்கிழமையும்,** அபரபஞ்சமித்திதியும் சதயநக்ஷத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் **காலை 10.20 மணி முதல் 11.25 வரை** உள்ள கன்னி லக்கின சுபமுகூர்த்த வேளையில் ஸ்ரீ துவிதள விமானத்திற்கும் ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானுக்கும் ஏனையபரிவார மூர்த்திகளுக்கும் முதலாவது மங்கள மஞ்சன திருக்குடமுழுக்குப் பெருஞ்சாந்திப் பெருவிழா நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. அந்நேரமும் அதன் முன் பின் நடைபெறும் கிரியைகளிலும் பங்குபெற்றி எம்பெருமானைத் தரிசித்துய்யுமாறு வேண்டுகின்றோம்.

| நாள் | கிழமை/நேரம் | கிரியாகால விபரங்கள் |
|---|---|---|
| 02-07-2012 | திங்கள் காலை 9.05 மணி முதல் | ஸ்ரீ பாலகணபதி வழிபாடு, மஹாசங்கல்ப்பம், பஞ்சகவ்ய பூஜை, வருணகும்ப பூஜை, முகூர்த்த நிர்ணயம், முகூர்த்தப் பத்திரிகாபடனம், ஆசார்யவரணம், பிராம்மணானுக்ஞை, தேவானுஞை, ஸ்ரீ லக்ஷ்மி பூஜை, திரவ்ய சுத்திதிரவ்யவிபாகம், கோமாதா பூஜை, மஹா கணபதி ஹோமம், பிரம்மச்சாரி பூஜை, விநாயகரகவல் பாராயணம், நூதன மூர்த்திகளுக்கான நயலோன்மீலனம் கிராம பிரதக்ஷிணம், சர்வாஞ்சலி, பிரசாதம் வழங்கல். |
| | மாலை 5 மணி முதல் | ஸ்ரீலக்ஷ்மிகணபதி வழிபாடு, சுத்திபுண்யாகம், யந்திரபூஜை, சாந்தி ஹோமம், திசா ஹோமம், ரக்ஷோக்ன ஹோமம், மூர்த்தி ஹோமம், தான்யாதிவாசம், சர்வாஞ்சலி, பிரசாதம் வழங்கல். |
| 03-07-2012 | செவ்வாய் காலை 9 மணி முதல் | ஸ்ரீமங்கள கணபதி வழிபாடு, சுத்தி புண்யாகம், நவக்கிரஹ பூஜை ஹோமம், கோளறுபதிகபாராயணம், ஜலாதிவாசம், சர்வாஞ்சலி, பிரசாதம் வழங்கல். |
| | மாலை 5 மணி முதல் | ஸ்ரீ ராஜகணபதி வழிபாடு, சுத்தி புண்யாகம், யந்திரபூஜைபூர்த்தி, கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, பிரவேசபலி, திக்தேவதாவாகனம், சயணாரோஹணம், சர்வாஞ்சலி, பிரசாதம் வழங்கல். |
| 04-07-2012 | புதன் காலை 9 மணி முதல் | ஸ்ரீ வித்தியாகணபதி வழிபாடு, சுத்தி புண்யாகம், ஸ்ரீ சுப்பிரபாத பூஜை, கிரண்ய அஸ்வ பூஜை, ரஜதகஜ பூஜை, ஸ்ரீருத்திர மந்திர ஹோமம், சத்துரு சம்ஹார ஸ்கந்த ஹோமம், சர்வாஞ்சலி பிரசாதம் வழங்கல். |
| | மாலை 5 மணி முதல் | ஸ்ரீ நிருத்தகணபதி வழிபாடு, சுத்தி புண்யாகம், சிற்பி உபசாரம், ஸ்தூபிஸ் தாபனம், தீபபூஜை (இப்பூஜையில் அடியவர்களும் பங்குகொள்ளலாம்) தீபஸ்தாபனம், ரத்னன்நியாசம், யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், சர்வாஞ்சலி, பிரசாதம் வழங்கல். |
| 05-07-2012 | வியாழன் காலை 9 மணி முதல் | ஸ்ரீ வரசித்திவிநாயகர் வழிபாடு, புண்யாகவாசனம், ஸ்ரீசுதர்சனஹோமம், ஸ்ரீ துர்கா ஹோமம். |
| | மாலை 5 மணி | ஸ்ரீ சக்திகணபதி பூஜை, புண்யாகவாசனம், ஸ்ரீ சாஸ்தா ஹோமம், அகண்ட நாமபஜன். |
| 06-07-2012 | வெள்ளி காலை 9 மணி முதல் | ஸ்ரீ விக்னகணபதி வழிபாடு, புண்யாக வாசனம், தைலாப்பியங்கம் **(அடியார்கள் சுவாமிகளுக்கு எண்ணைக்காப்பு சாத்துதல்)** பூமி பூஜை, மிருத், தீர்த்த, சூர்யாக்கினி சங்கிரஹணம். |
| | மாலை 4 மணி முதல் | ஸ்ரீநிர்விக்கினகணபதி பூஜை, பஞ்சசுத்தி, பிரதிஷ்டா துவஜாரோகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தணம், கடஸ்தாபனம் பிரசன்னாபிஷேகம், கலாகர்ஷணம், அதிவாசம், க்ஷணஹோமம், கும்ப யாகசாலாப் பிரவேசம் யாகபூஜை, அக்கினி கார்யம், நவாக்கினி விபஜனம், மூலமந்திர மாலா மந்திரம் முதலான ஹோமங்கள், சர்வாஞ்சலி, பிரசாதம். |
| 07-07-2012 | சனி காலை 9 மணி முதல் | ஸ்ரீ வல்லபகணபதி வழிபாடு, பஞ்சசுத்தி, விசேடசந்தி, பூதசுத்தி, ஸ்தாலீபாகம், பாவனாபிஷேகம், யாகபூஜை, நவக்கினி யஜனம், விசேடதிரவ்ய ஹோமம், சர்வாஞ்சலி, பிரசாதம் வழங்கல். |
| | மாலை 5 மணி முதல் | ஸ்ரீ வீரகணபதி வழிபாடு, பஞ்சசுத்தி, பிம்பசுத்தி, பிம்பரக்ஷாபந்தனம் பூர்வசந்தான மஹா ஷடத்துவன் நியாசம், யாகபூஜை, நவாக்கினி யஜனம் பச்சிமசந்தான ஸ்பர்சாகுதி, சர்வாஞ்சலி, பிரசாதம் வழங்கல். |

| நாள் | கிழமை/நேரம் | கிரியாகால விபரங்கள் |
|---|---|---|
| 08-07-2012 | ஞாயிறு காலை 7 மணி முதல் | ஸ்ரீ மஹாகணபதி வழிபாடு, பஞ்சசுத்தி, யாகபூஜை, நவாக்கினி யஜனம், உபசாரஹோம சமர்ப்பணம், மஹாபூர்ணாகுதி, சர்வாஞ்சலி, அந்தர் பெகிர்பலிகள், யாத்திராதானம், கும்பபிரதக்ஷிணம், ஸ்தூபி அபிஷேகம் (10.30 காலை) மூலமூர்த்தி மஹாகும்பாபிஷேகம் (11 காலை) அகண்ட மஹாஹவிர் நிவேதனம், தசதர்சனம், மஹாதீபாராதனை, அபமிர்த்ஸ்நானம், ஆசீர்வாதம். |
| | மாலை 5 மணிக்கு | மஹாஅபிஷேகம், விசேடபூஜை, ஸ்ரீ மஹாராஜகணபதி பட்டாபிஷேகம், சுவாமி திருவீதி உலாவரும் அலங்காரக் காட்சி, பிரசாதம் வழங்கல். |
| | | **கும்பாபிஷேக காலங்களில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகள்** |
| 04-07-2012 | புதன் மாலை 6 மணி முதல் | நிறுத்திய சங்கீத அக்கடமி - மில்ரன் கீன்ஸ் - ஸ்ரீமதி ராதிகா ராஜலோகநாதன் அவர்களின் மாணவர்களின் பரதநாட்டிய நிகழ்வுகள் |
| 05-07-2012 | வியாழன் மாலை 6 மணி முதல் | பக்கவாத்தியங்கள் சஹிதம் ஸ்ரீமான் குமாரச்சந்திரன் அவர்களின் தெய்வீக இன்னிசை அரங்கம். |
| 06-07-2012 | வெள்ளி மாலை 6 மணி முதல் | பக்கவாத்தியங்கள் சஹிதம் செல்வன் மிதிலன் சிவபுரத்தரசு, செல்வன் பிரணவன் சிவபுரத்தரசு ஆகியோரின் வயலின் இன்னிசை அரங்கம். |
| 07-07-2012 | சனி மாலை 6 மணி முதல் | கொவன்றி ஸ்ரீ சித்திவிநாயகர் கலைக்கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகள் |

## கிரியா சிவாச்சாரியர்கள்

**முகூர்த்த நிர்ணயம்**

ஜோதிடரத்னா பிரம்மஸ்ரீ சங்கர வைத்திய நாதசர்மா
(யாழ்ப்பாணம் - இலங்கை)

**திரவ்யார்ச்சனா**

சிவாகம கிரியா தத்துவநிதி சிவஸ்ரீ சத்தியரூப குருக்கள்
(தமிழ்நாடு - இந்தியா)

**வேதாத்தியானம்**

வைதீக பூஷணம் சிவஸ்ரீ ஆ. கல்யாணசுந்தரக்குருக்கள்
(மாங்களகணபதி வேல்முருகன் திருக்கோயில்)

**அருளாசி வழங்கும் விப்ரசிரேஸ்டர்கள்**

கணேச பூஜா துரந்தரர்
சிவஸ்ரீ இராம. வாகீஸ்வரக் குருக்கள் (லண்டன்)
சிவாச்சார்ய சிரோமணி சிவஸ்ரீ சு.சச்சிதானந்தக்குருக்கள் (லண்டன்)
ஸ்கந்த பூஜா துரந்தரர் சிவஸ்ரீ கைலை நாகநாத சிவம்குருக்கள்
(பிரதமகுரு - ஈஸ்காம் ஸ்ரீமுருகன் ஆலயம்)
கிரியா கலாபமணி சிவஸ்ரீ இராம. ஸ்ரீதரக்குருக்கள் (லண்டன்)
சிவாகமகிரியா பூஷணம் சிவஸ்ரீ இ.விஸ்வேஸ்வரக்குருக்கள் (லண்டன்)

வாத்தியவிசாரதா சிவஸ்ரீ அ.நா.சோமாஸ்கந்த குருக்கள் M.Phil., (வேதாகமசபா-லண்டன்)
சிவாகம சிரோமணி சிவஸ்ரீ எஸ். சந்திரசேகரக்குருக்கள் (பெர்மிங்காம்)

**சாதகாச்சாரியர்கள்**

சாதக பூஷணம் சிவஸ்ரீ ந.விக்னேஸ்வர குருக்கள்
விம்பிள்டன் பிள்ளையார் கோவில்

சைவசித்தாந்த பண்டிதர், சிவஸ்ரீ பால சர்வேஸ்வரக்குருக்கள் B.A. (Hons)
வோல்த்தம்ஸ்ரோ ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில்

ஆகமப்பிரவீணா சிவஸ்ரீ இ. கமலநாதக்குருக்கள் B.A., (Hons)
என்பீல்ட் ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்

| சர்வபோதகாச்சாரியார் | பிரதிஷ்டா பிரதமசிவாச்சாரியார் | சர்வசாதகாச்சாரியார் |
|---|---|---|
| "குகஸ்ரீ" "வேதசிவாகம வித்யாவிபூஷன்" சிவஸ்ரீ சௌபாக்கிய குமாரக் குருக்கள் (நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம் - இலங்கை) | சிவாகமகிரியா பூஷணம் சிவஸ்ரீ சௌபாக்கிய சசிகுமாரக் குருக்கள் B.A. (Hons) (பிரதமகுரு கொவன்றி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்) | சம்ஸ்கிருத, பண்டிதர் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் நவனீதகிருஷ்ணன், M.A., (யாழ் பல்கலைக்கழகம் - இலங்கை) |

**கும்பாபிஷேகக் குருமணிகள்**

கிரியா பூஷணம் சிவஸ்ரீ ந.யோகானந்த மோகன் குருக்கள்
(ஸ்ரோன்லி அம்மன் கோயில்)
சிவாகம கிரியாரத்னம் சிவஸ்ரீ கு. ஸுரக்குருக்கள்
(லூசியம் சிவன் கோயில்)
அலங்கார சிரோமணி சிவஸ்ரீ அ.பஞ்சாட்சரக் குருக்கள்
(ஈலிங்கனகதுர்கை அம்மன் கோயில்)
கிரியாகிரம விசாரதா சிவஸ்ரீ எஸ். சண்முகநாத குருக்கள்
(குரோளி அம்மன் கோயில்)
கிரியா ஞானமணி சிவஸ்ரீ உ. ஆதித்தன் குருக்கள்
(வோல்தம்ஸ்ரோ பிள்ளையார் கோயில்)

சிவாகம கிரியா கலாபமணி சிவஸ்ரீ செ.ரவிச்சந்திரக்குருக்கள்
(ஸ்ரோன்லி அம்மன் கோயில்)
கிரியாஞான அலங்கார மணி சிவஸ்ரீ கனக பாலகுமாரக் குருக்கள்
(ஈலிங்அம்மன் கோயில்)
சிவாச்சாரியமணி சிவஸ்ரீ சோ. ஸ்ரீகரக்குருக்கள்
(லண்டன்)
ஆகமப்பிரவீணா சிவஸ்ரீ இராம.சிவசண்முகநாதக்குருக்கள் (சுவிஸ்)
ஆகமவிபூஷன் சிவஸ்ரீ இராம.சுபசபாநாதக்குருக்கள்
(ஜெர்மனி)

**யாகசம்ரக்ஷகர்கள்**

பிரம்மஸ்ரீ கன. செந்தில்குமரன் சர்மா
யோ. சிவராம் சர்மா B.Sc.,
பிரம்மஸ்ரீ யோ. ஸ்ரீஹரிராம்சர்மா B.A.,

பிரம்மஸ்ரீ எஸ். சுந்தரேச செல்வ சர்மா
பிரம்மஸ்ரீ யோ. ரகுராம் சர்மா BCA
பிரம்மஸ்ரீ சசி. சௌஜன்ய குமாரசர்மா

பிரம்மஸ்ரீ ஸ்ரீ சோமாஸ்கந்த சர்மாபிரம்மஸ்ரீ
பிரம்மஸ்ரீ யோ. ஜெயராம் சர்மா M.A,

**ஆலய நிர்மானம்**

சிற்பகலாமணி விஸ்வபிரம்ம சரவண. ஜெயகாந்தன்

**06-07-2012 வெள்ளி 9.30 முதல் 07-07-12 சனி மாலை 3 மணி வரை அடியார்கள் எண்ணைக்காப்பு சாத்தலாம்.**

தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும்

## COVENTRY SHRI SIDHIVINAYAGAR DEVASTHANAM

## MURTI PRANA PRATISHDHA MAHOTSA

**02-07-2012 Monday,** 9.05 AM stant of kriyas

**06-07-2012 Friday** 9 AM to 07-07-12 Saturday 3 PM Gret Bathing of All Deities with oil by devotees

**08-07-2012 Sunday** 10.30 AM to 11.20 AM Final worship, Inauguration of the fist darshan & Maha Arathi.

65A, George Eliot Road,
Coventry CVI4HT,
0247, 6632211

Trust of Devasthanam
www.sidhivinayagar.org.UK
Charity Reg. No. 1144183



**திரு வ இரவீந்திரன்**
செயலாளர்
கொவன்றி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்.

ஸ்ரீ சித்திவிநாயகருக்கு சீராட்டு விழாவாய் மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவது எங்கள் அனைவருக்கும் பூரிப்பைத் தருகின்றது. மிகக் குறுகிய காலவேளைகளில் சமய சமூக சேவையில் இவ்வற நிலையம் பெற்றுள்ள அசுர வளர்ச்சி பார்க்கும் அனைவரினது இமைகளையும் உயரவைக்கின்றது. வரலாற்றில் இத்தருணங்களில் ஆலயச் செயலாளராய் சேயைாற்ற எனக்குக் கிடைத்த இச்சந்தர்ப்பத்தினை பெறும் பேறாகக் கருதுகின்றேன். ஆலய இவ்வளர்ச்சியில் ஒவ்வொரு மைல்கல்லிலும் எனக்கு உறுதுணையாக இருந்தவர்களை இத்தருணத்தில் நினைவு கூறுகின்றேன்.

இதேபோல் தொடர்ந்தும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் அனைவருக்கும் முன்வைக்கின்றேன். விநாயகப் பெருமான; தன் அற்புதங்களும் திருவிளையாடல்களும் இக்கால வேளையில் பலவிதமாய் எமக்கு வெளிப்படுத்தியுள்ளார். அவற்றினை ஊகிக்கும் பேரறிவு எமக்குப் போதாது எனினும் அவரின் திருவருளால் நடந்தவை அனைத்தும் இனிதே நிறைவுற்றது. ஆலயத்தின் நித்திய நைமித்திய கிரியைகளும் சமூக வேலைத்திட்டங்களும் செவ்வனே இனியும் தொடர்ந்து நடைபெறும் மகோன்னதமான மஹாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து வரும் இம்மலரானது காலப்பதிவாய் திகழும் என்பதில் ஐயமில்லை.

இந்த மலரினை அமைப்பதற்காய் நாம் முயன்றபோது ஆக்கமும் ஊக்கமும் தந்தவர்களுக்கு இம்மலரின் இணை ஆசிரியர் என்ற முறையில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இம்மலரின் வாயிலாக உங்களுடன் சில பொழுதுகளை செலவிட முடிந்ததையிட்டு பெருமை கொள்கின்றேன். அனைவருக்கும் ஸ்ரீ சித்திவிநாயகனின் திருவருள் கிடைக்கப் பிரார்த்தனை செய்கின்றேன்.

நன்றி



***Kumar Chinnaswamy** B Eng MSc MCIOB MAPM*
***Coventry Shri Sidhi Vinayagar Devasthanam***
*Trustee & Vice Chairman*

*Dear Devotees,*

*It gives me great pleasure to welcome you all to this great Devasthanam on this auspicious day of* ***Maha-Kumbhabhishekam & Prana-Prathistthapana.***

*In the last two years thousands of devotees have come to* ***Coventry Shri Sidhi Vinayagar Devasthanam*** *to worship for success, peace and happiness in their lives.*

*As a Trustee and Vice-Chairman of the Trust of Coventry Shri Sidhi Vinayagar Devasthanam which manages this Devasthanam, I feel really proud and blessed in having been able to be part of the management team which guided the new Devasthanam project during the last 12 months.*

*I hope this Devasthanam will become a focus of the community to promote cultural, religious, spiritual and educational needs for the present and hopefully, our future generations, to whom we will leave this legacy.*

*Much of the success to date is due to the generosity, enthusiasm and the patience of the devotees and well wishers of the Devasthanam.*

*I would also like to thank all the devotees for their contribution in various forms to the Coventry Shri Sidhi Vinayagar Devasthanam, I request for your continuous further support.*

*May the Lord shower his choicest blessings on all the devotees, supporters and well wishers for their hard work and generous support in making everything possible at the Devasthanam.*

*As written in Tirukkural (A classic of couplets or Kurals celebrated by Tamils):*

***"One who serves others on earth will be considered as God in Heaven"***

# கொவன்றி தமிழ் நலன்புரி சங்கம்
## Coventry Tamil Welfare Association
www.tamils.org.uk

"பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் – கோலஞ்சய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா"

ஓம் என்பது ஒலிகளுக்கெல்லாம் ஆதாரம். ஓம் என்ற ஒலியின் வடிவமே பிள்ளையார். அவரே குற்றங்களை நீக்குபவர். துன்பங்களை நீக்குபவர். ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர். தனக்குமேல் தலைவன் இல்லாதவர். தொடங்கும் அனைத்து தொழில்களும், செயல்களும், காரியங்களும் பிள்ளையாரின் அருளால் வெற்றிநடை போடும் என்பது நம் பாரம்பரியம். கொவன்றி மாநகரில் ஸ்ரீ சித்தி வினாயகர் ஆலயம் ஒன்று உருவாகி இருப்பது அந்த வாக்குக்கு ஒரு உண்மையான உதாரணமாகும்.

சக்தியின் அம்சமான விநாயகர் இங்கு வலது கையில் ஒடிந்த தந்தத்துடனும் இடது கையில் கொழுக்கட்டையுடனும் சூரிய உதய திசையை (கிழக்கு) நோக்கி அருள்பாலிக்கிறார். தனது பாதத்தில் சரணடைந்தால் அனைத்திலும் வெற்றி உண்டாகும் என்பதற்கேற்ப இடது பாதத்தை காட்டுகிறார். இந்த விநாயகரை வழிபட்டால் சிவசக்தியை ஒன்றாக தரிசித்த பலன் கிடைக்கும் என்பது ஐதீகம்.

தேங்காயை கறிக்குடைக்கிலும் கணபதிக்குடை என்பது ஊர் வழமை. 'தனதடி வழிபடுமவரிடர்கடி கணபதி' என்றார் திருஞான சம்பந்தர். கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற முது மொழியை கருத்தில் கொண்டு, அனைவரும் செய்த பாக்கியம், நமது மாநகரில் பிள்ளையாருக்கு கோவில் அமைத்து குடமுழுக்குப் பெருவிழா நடைபெறவுள்ளது. பாராட்டப்பட வேண்டிய பெருந் தொண்டு.

வாழ்க அவர் தொண்டு.

வளர்க ஆன்மீகம்.

"வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

காவலூர் கந்தையா அரியரத்தினம்

*Coventry Tamil Welfare Association is a registered Charity in England and Wales.*
*Registered Number: 1093924*
கொவன்றி தமிழ் நலன்புரி சங்கம் ஒரு அங்கீகரிக்கப்பட்ட அறக்கட்டளையாக
இங்கிலாந்திலும் வேல்ஸிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது
பதிவு செய்யப்பட்ட இலக்கம்: 1093924


Rathy
Jewellers Ltd.
Wembley and Tooting
The Leading jewellery store in London with the largest selections including Diamond jewellery, Thaali Kodi and all Studded jewellery
Wembley Branch
28, Ealing Road, Wembley,
HA0 4TL
020 8903 3063
Tooting Branch
209, Upper Tooting Road,
Tooting SW17 7 TG
020 8682 2233

## University of Jaffna
Thirunelvely, Sri Lanka.
Phone: + 94 21 2222294, Fax: +94 21 2222294,
e-mail: arva26arva@yahoo.com,


# வாழ்த்துச் செய்தி

சமூகத்தின் இருப்புக்கும் விருத்திக்கும் மக்களின் கலாச்சார பண்பாடும் ஒழுக்கமும் இன்றியமையாதன. இவற்றை வளர்ப்பதில் பாடசாலைகள், உயர் கல்வி நிறுவனங்கள், மத நிறுவனங்கள், ஆலயங்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. அவற்றுள்ளும் ஆத்மிக ரீதியான உணர்வுகளோடு நேர்மை, நியாயம், மனிதாபிமானம் போன்ற அம்சங்களை இயல்பாகவே வளர்க்கும் இடமாக ஆலயங்கள் விளங்குகின்றன. இதனாலேயே “கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” என ஆன்றோர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வகையில் உள்நாட்டிலும் பிற நாடுகளிலும் ஆலயங்கள் அமைக்கப்பட்டு வழிபாடு செய்யப்படுவது தமிழர்கள் தமது கலாச்சாரதின்மீது கொண்டுள்ள அளப்பரிய பற்றினை எடுத்துக்காட்டுகின்றது. இத்தகைய முயற்சிகளுக்கு புலம்பெயர் தமிழர்கள் ஆற்றிவரும் பங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வகையில் இலண்டன் மாநகரில் கோவன்றி சிறி சித்தி விநாயாகர் தேவஸ்தானம் ஈழத்தமிழர்களினால் அமைக்கப்பட்டு கும்பாபிசேகம் செய்யப்படுவது மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. நம்மவர்கள் சுதேசிகளாக தம் உறவுகளுக்குப் பல்வேறுபட்ட உதவிகளை செய்துவருவது மட்டுமின்றி இறை சிந்தனையும் மதப்பற்றும் ஆன்மீக உணர்வும் உள்ளவர்களாக இருப்பதை இந் நிகழ்வு சுட்டிக்காட்டுகின்றது.

வல்ல வினைகளைத் தீர்க்கும் விநாயகனின் அருள் என்றும் கிடைக்கப்பெற்று எம்மக்கள் சுதந்திரமாகவும் சுயமாகவும் சிறப்பாக வாழவேண்டும் என இறைவனை வேண்டுவதுடன் இவ் ஆலயம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்ட குழுவினருக்கு எனது பாராட்டையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வசந்தி அரசரத்தினம்

சிரேஸ்ட பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
14. 06. 2012

Prof. Ms. V. Arasaratnam
Vice - Chancellor
University of Jaffna
Sri Lanka

මගේ අංකය
எமது இல.
*My Number*

ඔබේ අංකය
உமது இல.
*Your Number*

දුරකථන යාපනය
தொலைபேசி: யாழ்ப்பாணம்
*Telephone : Jaffna* 2483 2006

යාපනය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.**

තැ.පෙ. අංකය 57,
තිරුනෙල්වෙලි
යාපනය.

த.பெ. எண் 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

*P.O. Box 57,*
*Thirunelvely,*
*Jaffna.*

## முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம்

### வாழ்த்துச் செய்தி

ஒருவனை இன்னொருவன் கட்டுப்படுத்துவதை விட தன்னைத் தானே கட்டுப்படுத்தும் சுய கட்டுபாடே மிகவும் சிறந்தது. இதற்கு நல்லொழுக்கமும் பண்பாடும் வழிப்படுத்தலும் மிகவும் இன்றியமையாதது. இவற்றை வளர்ப்பதிலும் பேணுவதிலும் ஆலயங்கள் அரிய பங்கு வகிக்கின்றன. அத்தோடு மனிதனின் ஆளுமையை விருத்தி செய்யும் பல்வேறு கூறுகளில் இறை வழிபாடும் ஆன்மிகச் செயற்பாடுகளும் பிரதான இடத்தை வகிக்கின்றன. இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்ளும் வகையிலும் ஆலயங்கள் முக்கியம் பெறுகின்றன. இதனாலான்றோ " கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். அது மட்டுமன்றி

"திருக்கோயில் இல்லாத திருவிலூரும்
.........................................
அவையெல்லாம் ஊரால்ல அடவி காடே"

எனவும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கமைய இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நெறிமுறையையும் ஒழுங்கான, கட்டுபாடான வாழ்வியலையும் ஆலயங்கள் நமக்கு வழங்குகின்றன. இதனால் தான் காலம்தோறும் நம்மவர்கள் தொன்மையான ஆலயங்களை பாராமரிப்பதிலும் புதிய ஆலயங்களை அமைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வகையில் புலம்பெயர் ஈழத்தமிழர்கள் ஒன்றிணைந்து இலண்டன் நகரில் கோவன்றி சிறி சித்தி விநாயகர் தேவஸ்தானம் அமைக்கப்பட்டுக் கும்பாபிஷேசகம் செய்யப்படுவது மட்டற்ற மகிழ்ச்சியினைத் தருகின்றது. விக்கினங்களைத் தீர்க்கும் விக்கினேஸ்வர பொருமானை வணங்கி நம் கருமமாற்றும் போது சூழும் தடைகள் உடைந்து நன்மையே கிடைக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

எம் மக்களின் துன்ப துயரங்கள் உடைந்து நிம்மதியாகவும் சுபீட்சமாகவும் வாழ இவ்வாலயம் என்றும் உறுதுணை புரியும். எனவே இம்முயற்சியில் ஈடுபட்ட குழுவினருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் இவ் இறைவன் திருவருளால் எல்லோரும் நன்றாக வாழ வேண்டும் எனவும் பிரார்த்திக்கின்றேன்.

T. Velm

பேராசிரியர்.தி.வேல்நம்பி, PhD.,
பீடாதிபதி
முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
இலங்கை.

16/06/2012

**PROF. T. VELNAMPY**
B.com(Hons), M.Phil, MA(Tamil), AAT(SL) Phd (Madras)
DEAN
FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA

# கொவன்றி ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானின் வரலாறு...

பெரிய பிரித்தானியாவின் பெரிய பிள்ளையாராக வீற்றிருக்கும் கொவன்றி ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் ஆற்றங்கரை ஓரத்திலிருந்து பக்தர்களின் குறைதீர்த்து வரம் நல்கும் ஓர் அருள்மிக்க ஆலயமாகும். பிரித்தானியாவின் இதயப் பகுதியாம் கொவன்றி மாநகரில் அமைந்துள்ள இவ்வாலயம் உதயமாகி இரண்டே ஆண்டுகளானபோதும் அக்குறுகிய காலத்தில் அதன் வளர்ச்சியும், அருளாட்சியும் பல கோடிகளாகும். இவ்வாலயத்தின் ஆரம்ப வரலாறு என்பது 2009ல் தொடங்குகின்றது. 2009ம் ஆண்டு ஆனி மாதமளவில் குகேந்திரக் குருக்கள் கொவன்றி நகரத்திற்கு வந்திருந்த இங்கே ஓர் ஆலயம் அமைந்தால் நல்லதென தமது உயரிய சிந்தனையை திருவாளர் தியாகராஜா இரவீந்திரகுமார் அவர்களிடம் தெரிவித்திருந்தார். அதன் பிரகாரம் 20.07.2009 சனிக்கிழமை அம்மா உணவகத்தில் குகேந்திரக்குருக்களின் தலைமையில் முதலாவது கூட்டம் கூட்டப்பட்டு நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. இதில் திரு தி. இரவீந்திரகுமார் தலைவராகவும் திரு வி.அஜேய் அவர்கள் செயலாளராகவும், பொருளாளராக திரு இரகுநாதனும் உபதலைவராக சி. இரவீந்திரன் உபசெயலாளர் திரு வ.இரவீந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக திருவாளர்கள்.

பா.சச்சிதானந்தம், இ.சுபாஸ்கரன், முரளிதரன், ப.ஆழவன், இ.சிறிபாஸ்கரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். (அக் கூட்டத்தின் பின் திருவாளர்கள் இ.சிறிபாஸ்கரன், பா.சச்சிதானந்தம் முரளிதரன், ஆகியோர் கூட்டங்களுக்கு சமூகமளித்திருக்கவில்லை) அத்துடன் கொவன்றி ஸ்ரீ மகா சித்தி விநாயகர் ஆலயமென பெயர் சூட்டப்பட்டது. நிர்வாக சபைக்கும் அப்பெயரையே வைத்திருந்தனர். அத்துடன் ஆலயம் அமைப்பதற்கான இடம்பார்க்க ஆரம்பிக்கப்பட்டது. கொவன்றி நகரில் லொக்கஸ் லேன் எனுமிடத்தில் ஆலயத்திற்கேற்றால் போல் ஒரு கட்டிடம் தென்பட்டதும் அதனை வாடகைக்கு பெற்றுக்கொண்டு ஆலயம் அமைப்பதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன. இருந்தாலும் அவ்விடத்தில் ஆலயம் அமைப்பதற்கான நகரசபை அனுமதி இருக்கவில்லை. எனவே அனுமதி பெறுவதற்கு விண்ணப்பம் செய்திருந்தோம். ஆனால் விநாயகப்பெருமானுக்கு அவ்விடத்தில் அமர்ந்திருக்க விருப்பமில்லையோ என்னவோ தெரியவில்லை நகரசபையினரால் எமது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

அதன்பின் ஆலயம் அமைப்பதற்காக மீண்டும் இடம் தேடப்பட்டபோதுதான் தற்போது ஆலயம் அமைந்திருக்குமிடம் காணப்பட்டதும் எல்லோர் மனதையும் கவர்ந்து விட்டிருந்தது 27.02.2010இல் குத்தகை எழுதப்பட்டதும் புனருத்தாரன வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 13.03.2010ல் ஸ்ரீ மகா சித்திவிநாயகருக்கான கும்பாபிஷேகம் செய்து கொவன்றி நகரில் ஒரு ஆலயம் அமைக்கப்பட்டதன் பின் பூஜைகளும் உற்சவங்களும் மிகச்சிறப்பாகவே நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்போது ஆலய கருமங்களைக் கவனிக்க அறங்காவலர் சபையில் ஆட்கள் போதாமையினால் உதவி நிர்வாகத்திற்கு 15 பேர் கொண்ட குழு தெரிவுசெய்யப்பட்டு கருமங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

ஆடி மாதம் 2010ல் குகேந்திரக்குருக்கள் இவ்வாலயத்திலிருந்து தாமாகவே விலகிக் கொண்டதன் பின் வசந்தன் சர்மா ஆலயத்தில் பூஜை செய்ய வந்திருந்தார். இருப்பினும் அபிஷேகங்கள் செய்வதற்கு குருக்கள் தேவையாகவிருந்தது தற்காலிகமாக ரூபன் குருக்கள் வந்து போய்க்கொண்டிருந்தார். அப்போது குருக்கள் மில்ரன்கீன்ஸ் எனுமிடத்தில் வசித்திருந்தார். அவரை நிரந்தரமாக இக்கோயிலில் பூஜைசெய்யும்படியும் இவ்வாயலத்தின் பிரதம குருக்கள் பதவியினையும் ஏற்றுக்கொள்ளும்படியும் நிர்வாக சபையினர் கேட்டபோது அதனை குருக்கள் மறுத்திருந்தபோதும் இது சம்பந்தமாக நிர்வாகத்தினர் ஆறு மாதகாலமாக குருக்கள் ஐயாவுடன் பேச்சுவார்த்த நடத்தியபோது இறுதியில் குருக்கள் ஐயா அறங்காவலர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு கொவன்றி நகரில் குடியமர்ந்து 01.01.2011ல் இருந்து ஆலயத்தின் பிரதமகுருக்களாகவும் பொறுப்பேற்றிருந்தார்.

இவ்வேளையில் இவ்வாலயம் எழுந்தருளி விக்கிரகங்களிலானதும் சிறியதுமாக இருந்தமையாலும் அருகாமையில் உள்ள கட்டிடத்தில் முறையான சிறப்பான ஆலயம் அமைக்கலாமென அறங்காவலர்சபை தீர்மானித்ததற்கிணங்க திருப்பணி வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இப்படியாக பூஜைகள் உற்சவங்கள் என சிறப்பாகச் செய்து கொண்டிருந்தோம். ஆனாலும் எமக்கே உண்டான சாபக்கேடோ என்னமோ தெரியவில்லை அறங்க அறங்காவலர்சபையில் பிரச்சினைகள் உருவெடுக்கத்தொடங்கி நாளடைவில் பெரிதாகி 02.06.2011இல் அறங்காவலர் சபையிலிருந்து ஒரு சிலர் விலகிச் சென்றனர். அவர்கள் விலகிச் செல்லும்போது கசப்பான சம்பவங்களும் நடந்தேறின. அவைபற்றி விபரிக்க விரும்பவில்லை. எஞ்சியிருந்த நாம் மேற்கொண்டு ஆலயத்தினைப் பராமரிக்கத் தலைப்பட்டோம். 02.06.2011ல் இருந்து ஆலயத்தினைப் பராமரித்த போதிலும் 24.06.2011ல் பொதுக் கூட்டம் கூட்டப்பட்டு முறையான நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது.

தலைவராக திருவாளர் சி.இரவீந்திரன் அவர்களும் உப தலைவராக திருவாளர் கு.சின்னச்சாமி, செயலாளர் திரு வ. இரவீந்திரன், உபசெயலாளர் திரு ப. ஆழவன், பொருளாளர் திரு இ.சிறிபாஸ்கரன், ஆலய முகாமையாளர்களாக திரு. ந. புஸ்பமோகன் திரு. மு. வசிகுமார் ஆகியோருடன் நிர்வாகசபை உறுப்பினர்களாக திருவாளர்கள் அ.சுந்தரேசன், ஊ.மு செந்தில்குமரன், ச. உருத்திரன், வி. உதயராசா, ந.ராஜன், பா.சச்சிதானந்தம், தயானந்தன், வி.அஜேய், பேரானந்தம், க.செல்வத்திரம், க.கணேஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு இவ்வாலயத்தினை நிர்வகித்துக் கொண்டிருக்கின்றனர். மாதாந்தம் கூட்டம் வைத்து எல்லா விடயங்களிலும் தீர்வு காண்கின்றோம். இவ்வேளையில் முன்பு ஆரம்பிக்கப்பட்ட புதிய ஆலயத்திருப்பணியைத் தொடர வேண்டுமென்று எண்ணியது மட்டுமல்லாது துரிதகதியில் நிறைவேற்ற வேண்டுமெனும் எண்ணத்துடன் கும்பாபிஷேக திகதியை நிர்ணயம் செய்துவிட்டு திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோது மிகவும் கஷ்டங்களை எதிர்கொண்டோம்.

முக்கியமாக பணப்பிரச்சினையே மேலோங்கி நின்றது. இருப்பினும் அடியார்களின் உதவியுடனும் எம் பெருமானின் அருள் பார்வையாலும் அதனைத் தகர்த்து நாம் வணங்க தான் எழுந்தருளும் ஆலயம் அவனருளால் கொவன்றி மாநகரில் அழகான ஆலயம் அமைக்கப்பட்டு குடமுழுக்குப் பெருவிழா நடைபெற்றதை இந் நிர்வாக சபை பெருமையுடன் கூறி நிற்கின்றது. நாமெல்லாம் ஐயனின் பாதார விந்தங்களை வழங்கி பேரானந்தப் பெருவாழ்வு காண்போம்.

# "தும்பிக்கையே நம் நம்பிக்கை"

ஓம் என்னும் பொருளாய் ஆவணியில் பிறந்தாய்
இப்போ கொவன்றி நதிக்கரையில் நிறைந்தாய்.
தொந்தி வயிற்றுத் தந்தி போற்றி.

உலகப்பந்தில் இங்கிலாந்து நாட்டின் கொவன்றி மாநகரின் ஆற்றங்கரையில் அழகாய், ஆனந்தமாய், அற்புதமாய், புதுப்பொலிவுடன் அமர்ந்து இன்று மகாகும்பாபிசேகம் காணும் ஸ்ரீ சித்தி விநாயகரை சிந்தையில் இருத்தி இதயம் மகிழ இருகரம் கூப்பி சிரம் தாழ்த்தி வாழ்த்தி வணங்குகின்றோம். பிள்ளையார், கணபதி, ஆனைமுகன், கஜமுகன், விக்கினேஸ்வரன், என நாமங்களை சூட்டி வழிபட்டு வருகின்றோம். சைவத்தமிழர்கள் வாழும் நாடுகளில் அரசமரத்தடி, வேப்பமரத்தடி, குளக்கரை, முச்சந்தி, நாற்சந்தி, தெருமுனை, என வானம் பார்க்க அமர்ந்திருக்கும் ஒரே சுவாமி பிள்ளையாராகும். விநாயகருக்கு முப்பத்தியிரண்டு திருவுருவங்கள் உள்ளன. பேய், பிசாசுகளிடம் இருந்து மனிதகுலத்தின் ஒரு காப்பாளராக, மீட்பாராக விநாயகர் விளங்குகிறார். சிவன் பார்வதியின் மகனாகவும், முருகக்கடவுளின் அண்ணனாகவும் அவர் இருக்கிறார். தாய் தந்தையே உலகம் என்பதையும் செய்கையில் காட்டுகின்றார்.

இனிய நல்ல கருமங்களை பிள்ளையார் சுளிபோட்டு ஆரம்பிக்கின்றோம். விநாயகர் அனைத்துத் தடைகளையும் நீக்குபவர். கொவன்றி மாநகரில் விநாயகருக்கு ஒரு ஆலயம் அமைக்க அடியவர்கள் மேற்கொண்ட பல முயற்சிகளுக்கு பல தடைகள் தாமதங்கள் பல வடிவங்களில் வந்தன. ஆனால் அவையாவும் இன்று விநாயகரால் நீக்கப்பட்டதையும் புதுப்பொலிவுடன் ஆலயம் இன்று மகாகும்பாபிசேகம் காண்பதையும் எம் கண்களால் காண்கின்றோம். ஞானம், மதிநுட்பம், செழிப்புடன் சைவத்தமிழர் வாழ்வதற்கு விநாயகர் அருள் என்றும் எமக்குத் தேவை. விநாயகர் நல்ல அறுவடைக் கடவுளாகவும் கருதப்படுகின்றார். விநாயகர் வழிபாடு ஜாவா, நேபால், கம்போடியா, திபெத், தாய்லாந்து, வியட்நாம், இலங்கை ஆகிய நாடுகளுக்கு ஏழாம் நூற்றாண்டில் பரவியதாக சொல்லப்படுகின்றது. விநாயகர் கல்விக்கடவுள் என்றும் அழைக்கப்படுகிறார். இந்து மதத்தில் உள்வாங்கப்பட்ட சமயமாக காணபத்தியம் எனும் பிரிவு விநாயக கடவுள் பற்றி கூறுகின்றது. ஆன்மாவுடன் பொருந்தி நின்று கன்ம மாயைகளை தொழிற்படுத்தி இருமை இன்பத்தை அளிப்பது ஞானம் அந்த ஞானமே விநாயகரின் திருவடிகள்.

ஆகாயம் எல்லாப்பொருட்களையும் தன்னகத்து ஒடுங்கவும், உண்டாகவும் இடம் தந்து இருப்பது போல விநாயகர் பெருவயிறு எல்லா உலகங்களும் உயிர்களும் தம்முள் அடங்குதலை குறிக்கும் அமைதியான வாழ்வில் கெட்ட ஆசைகளை கட்டுப்பாட்டில் வைக்கவேண்டுமென்பதையும் குறிக்கும் விக்கினங்களை பிரச்சனைகளை தீர்க்கும் கடவுள் விக்கினேஸ்வரா ஆகின்றார். பூத கணங்களுக்கு அதிபதியாதலின் கணபதி என்கின்றோம். விநாயகரின் சிறிய கண்கள் கவனம் என்பதற்கு அடையாளமாகின்றது. விநாயகரின் சிறிய வாய் குறைந்த பேச்சுக்கு அடையாளமாகின்றது. பிள்ளையாரை முதல் முதலாக அறிமுகப்படுத்தும் இடங்கள் அப்பர், சம்பந்தர் திருமுறைகளே. பிள்ளையார் சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டவர். உமை பெண்ஆனை வடிவங்கொண்டும், சிவன் ஆண்ஆனை வடிவங்கொண்டும் இணைந்த பயனால் பிறந்தவர் பிள்ளையார் என்பதை இரண்டு பதிகங்களால் சம்பந்தர் விளக்குகின்றார். தம்மை வழிபடும் அடியவர்களின் இடர்களை தீர்ப்பதற்காக இறைவன் அருளிய கொடையே கணபதி என்றும் சம்பந்தர் கானங்கள் காட்டுகின்றன . கயாசுரனை போரில் வென்றவர் பிள்ளையார்.

"சீதக்களபச் செந்தாமரைப்பூம்..."
"பாலுந் தெளிதேனும்..."
"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்..."
எனும் பாடல்கள் ஔவையாரால் அருளப்பட்டவை.
பதினொராம் திருமுறையில் கபிலதேவர் அருளிய
" திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும்..."
"விநாயகனே வெங் வினையை வேரறுக்க வல்லான்..."
"ஐந்து கரத்தனை ஆனைமுகத்தினை..."
"திருவும் கல்வியும் சீரும தழைககவும்..."
எனும் பாடல்கள் காணப்படுகின்றன.

வைகாசி மாதம் வரும் வளர்பிறை முதலவெள்ளி தொடங்கி ஒவ்வொரு வெள்ளியும் சுக்கிரவார விரதம் அனுட்டிக்கப்படுகின்றது. ஆவணி மாதத்து வளர்பிறைச் சதுர்ச்சி விநாயகர் சதுர்ச்சி ஆகும். கார்த்திகை மாதத்து வளர்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாத தேய்பிறைச்சட்டி வரை உள்ள இருபத்தொரு நாட்கள் ஆண்கள் வலக்கையிலும், பெண்கள் இடக்கையிலும் இருபத்தொரு இழையானதாக காப்பு அணிவித்து விநாயகசட்டி விரதம் அனுட்டிப்பர்.

தாய்தமிழ் நாட்டின் திருச்சியில உச்சி மலை மீது அமர்ந்து உச்சிப்பிள்ளையாராகவும், ஈழத்து மானிப்பாயில் மருதடி விநாயகராகவும், மக்களின் போக்குவரத்துகளில் ஆபத்து நேராவண்ணம் தெருவடியில் அமர்ந்து முறிகண்டிப்பிள்ளையாராகவும் அதே போல கைதடியில் கண்டிவீதியில் அமர்ந்து போக்குவரத்துகளில் துன்பம் நேராவண்ணம் தெருவடி பிள்ளையாராகவும், அளவெட்டியில் அமர்ந்து கும்பிளாவளைப் பிள்ளையாராகவும், பழைமை வாய்ந்த புதுமையான ஆலயங்களில் வீற்றிருந்து அடியவர்களை ஆட்கொண்டு அனுக்கிரகம் புரிகின்றார்.

புலம்பெயர்ந்து மேலத்தேசங்களில் வாழும் சைவத்தமிழர்களாகிய நாங்கள் சைவமும் தமிழும் தழைத்தோங்க எம்மால் இயன்ற சிறிய பணிகளையாவது செய்து புலம்பெயர்ந்து இங்கு வாழும், இங்கு பிறந்து வாழும் நம் இளம் சிறார்கள் இங்கு நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் சான்றோர்களாகவும் உயர்வாக வாழவும் எமதமிழ் சைவ கலை கலாச்சாரங்களை உயர் பண்பாடுகளை கடைப்பிடித்து கட்டி வளர்க்கவும், மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் வழிபடவும் இவ் சைவதமிழ் ஆலயங்கள் உறுதுணை புரியட்டும்.

தாயகத்தில் அல்லலுறும் அமைதி இழந்திருக்கும் எம் உறவுகளுக்கு காக்கும் கரங்களாகவும் கலங்கரை விளக்காகவும் எமது சைவத்தமிழ ஆலயங்கள் அமையட்டும். "தும்பிக்கையே நம் நம்பிக்கையாக" சிரமேற்கொண்டு தாய்தமிழகத்தில் புதுப்பொலிவுடன் தோற்றம் பெற்று உருக்கொண்டு கொவென்றி மாநகரின் ஆற்றங்கரையோரம் அழகாக வந்தமர்ந்து இரண்டாயிரத்து பன்னிரெண்டாம் ஆண்டு ஆனித்திங்கள் இருபத்தைந்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஆகிய (08.07.2012) இன்று சிறி சித்திவிநாயகப் பெருமானுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் நடைபெறும் முதலாவது மங்களத்திருக்குடமுழுக்கு பெருவிழாவுக்கு

"கற்பூர சுடர் ஏற்றி வந்துள்ளோம்.
உன் கருணைக்கு ஒளி காட்டி நிற்கின்றோம்"

தொன்மையும் மேன்மையும் கொண்ட சைவநீதியும் தமிழமொழியும் உலகமெல்லாம் தழைத்தோங்கி இன்பமே பெற்று எல்லோரும் வளமுடன் இனிது வாழவோமாக. சுபம்

கந்தையா செல்வரத்தினம்
கைதடியூரான்(ஆலய நிர்வாகம்)

# மக்களும் ஆலயமும்

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"

என்றெல்லாம் ஆன்றோர் கூறியிருப்பது மக்களின் வாழ்க்கையில் ஆலயம் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது என்பதையே குறிப்பிட்டு காட்டுகின்றது.

ஆலயம் என்பதில், ஆ – ஆன்மாவையும்,

லயம் – ஐக்கியப்படுதலையும் குறிப்பிடுகின்றது.

அதாவது ஆன்மா என்னும் உயிர், உடல் என்னும் போர்வையால் மூடப்பட்டு மக்கள என்னும் வட்டத்திற்குள் அடங்குகின்றது. மக்கள் உலக வாழ்க்கையில் தங்களுக்கு என இலட்சியங்களை கொண்டு வாழ்ந்தாலும் எல்லா மக்களினதும் இறுதி இலட்சியமாகவும், பயனாகவும் கொள்ளப்படுவது ஆன்மாவானது இறைவனிடத்தில் ஒன்று சேருதல் ஆகும். இதனை அளிக்கும் வழிகள் அனைத்தையும் புலப்படுத்தும் கருவியாக எமக்கு இருப்பது ஆலயமாகும். இதிலிருந்து மக்களும் ஆலயமும் இரு சொல்லாக இருப்பினும் இதன் தத்துவம் ஒன்று என்பதனை உணர்த்தி நிற்கின்றது. மக்கள் தேவைகள் அடிப்படையில் பற்பல சமூகமாகவும், பல்வேறு சிந்தனை உடையவர்களாகவும் காணப்பட்டாலும் ஆலயம் என்னும் தலத்தினுள் சென்றவுடன் அனைவரினதும் சிந்தனை, செயற்பாடுகள் ஒன்றாகின்றது. இதிலிருந்து மக்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்த ஒன்றாக ஆலயம் விளங்குகின்றது எனலாம்.

நாம் அறிந்தோ அறியாமலோ பிறந்ததிலிருந்து சமுகம் என்னும் கட்டமைப்பிற்குள் உள்வாங்கப்படிருக்கின்றோம். சமுகமானது பல்வேறு கோணங்களில் செல்கின்றது, இந்தக் கோணங்களை நீக்கி மனநிறைவு வழங்கும் இடமாகவும் ஆலயம் திகழ்வதனால் மக்களும் ஆலயமும் என்னும் சொல் பொருள் பொதிந்த ஒன்றாக காணப்படுகின்றது.

மட்டுமின்றி மனிதனின் நாளாந்த வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்த கலை, கலாச்சாரம், பணபாடு போன்ற விடயங்களை பெறும் இடமாகவும் ஆலயம் மக்கள் வாழ்வோடு கலந்துள்ளது.

ஒட்டுமொத்தமாக நோக்குகையில் ஆலயம் தானும் அரனென தகுமே என்று கூறுமளவிற்கு மக்கள் வாழ்க்கையில் ஆலயம் செல்வாக்கு செலுத்துகின்றது. மக்கள் நனமக்களாக வாழ்வதற்கு வழிகாட்டியாகவும் , மனநிறைவு நல்கும் இடமாகவும் மக்கள் வாழ்க்கையை பூரணப்படுத்தி ஆன்ம ஈடெற்ற வழிகாட்டியாகவும் மக்கள் வாழ்க்கையில் ஆலயம் செலவாக்கு செலுத்துகின்றது. ஆலயம் மக்களின் வாழ்க்கையில் இன்றியமையாத இன்றாகும்.

நன்றி

திரு பேரானந்தம் (ஆனந்தன்)
ஆலய நிர்வாகம்

---

# மகா சங்கடஹர சதுர்த்தி

விநாயகர் பிரணவத்தின் வடிவம். இதன் திரிந்த வடிவமே பிள்ளையார் சுழி. பிள்ளையார் சுழியை இட்டாலே ஆணவம் ஒழிந்து இறை உணர்வு உண்டாகும். சதுர்த்தி திதி விநாயகருக்கு மிகவும் உகந்த நாளாகும். சுக்ல பட்சம் (வளர்பிறை) சதுர்த்தியை "வர சதுர்த்தி' என்றும், கிருஷ்ண பட்சம் (தேய் பிறை) சதுர்த்தியை "சங்கடஹர சதுர்த்தி' என்றும் கூறுவார்கள்.

முதன்முதலில் இந்த விரதத்தை அங்காரகன் அனுஷ்டித்து நவக்கிரகங்களில் ஒன்றானார். அதனால் இந்த சங்கடஹர சதுர்த்தி விரதத்திற்கு அங்காரக சதுர்த்தி விரதம் என்றும் பெயர் உண்டு. சங்கடஹர சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்து ராவணன் இலங்கை மன்னன் ஆனார். பாண்டவர்கள் துரியோதனாதியரை வென்றனர்.

சங்கடஹர சதுர்த்தி விரதத்தை மாசி மாதம் கிருஷ்ணபட்சம் செவ்வாய்க்கிழமையோடு வரும் சதுர்த்தி திதியில் தொடங்கி ஓராண்டு விதிப்படி அனுஷ்டித்தால் எல்லா துன்பங்களும் நீங்கும். செல்வம், செல்வாக்கு கிடைக்கும். ஆவணி மாதத்தில் வரும் தேய்பிறை சதுர்த்தியில் இருந்து 12 மாதங்கள் அனுஷ்டித்து விநாயக சதுர்த்திக்கு முந்தைய தேய்பிறை சதுர்த்தியான மகா சங்கடஹர சதுர்த்தி அன்று முடிக்கும் மரபும் உண்டு. இந்த விரதத்தை தொடங்கும் நாளில் சூரியன் உதிக்க 5 நாழிகைக்கு (2 மணி நேரம்) முன்னரே உறக்கத்தில் இருந்து எழுந்து விதிப்படி சங்கல்பம் செய்து கொண்டு புண்ணிய நீராடி சிவச்சின்னங்களை தரித்துக் கொண்டு விநாயகப் பெருமானை தியானிக்க வேண்டும். அவருடைய ஓரெழுத்து, ஆறெழுத்து மத்திரங்களில் ஏதாவது ஒன்றை இதுவும் தெரியாதவர்கள் விநாயகரின் பெயரையாவது இடைவிடாது அன்று முழுவதும் ஜெபிக்க வேண்டும். உபவாசம் இருப்பதும் நன்று. இரவு சந்திரோதயம் ஆன உடன் சந்திரனை பார்த்துவிட்டு, அர்க்கியம் விட்டு பிறகு பூஜையை முடித்து சாப்பிட வேண்டும். அன்று விநாயக புராணத்தை பாராயணம் செய்வதும் நன்மை பயக்கும்.



இந்த விரதத்தை விநாயக சதுர்த்திக்குப் பிறகு வரும் சங்கடஹர சதுர்த்தியில் இருந்து மகா சங்கடஹர சதுர்த்தி வரை உறுதியுடன் கடை பிடித்தால் எல்லா நலன்களும் கிடைக்கும்.

**திரு.க.கணேசலிங்கம்(ஆலய நிர்வாகம்)**









# விநாயக சதுர்த்தி

**விநாயக சதுர்த்தி** என்பது விநாயகரின் முக்கியமான விழாவாகும். ஆண்டுதோறும் ஆவணி மாதத்தின் சதுர்த்தி நாள் அன்று கொண்டாடப்படுகிறது. பொதுவாக விநாயகரின் பிறந்த நாளாக கொண்டாடப்படுகிறது. விநாயகர் சதுர்த்தி விரதத்தை ஒரு கொண்டாட்டமாகவே நாம் பாவிக்கலாம். விநாயகர் மிகவும் எளிமையான கடவுள். யார் கூப்பிட்டாலும் ஓடோடி வந்து அருள் தருவார். அதனால்தான் அவர் எல்லாருக்கும் பொதுவாகவும், யாரும் சுலபமாக வழிபடும் வகையிலும் இருக்கிறார்.

விநாயகர் விரதத்தை பார்வதி தேவியே மேற்கொண்டிருக்கிறார். தன் கணவரை அவமதித்து யாகம் நடத்திய தந்தை தட்சனிடம் நியாயம் கேட்கப் போனாள் பார்வதி என்ற தாட்சாயணி. ஆனால், தட்சனோ மிகவும் கர்வம் பிடித்தவன். மருமகனை அவமானப்படுத்தியது போதாதென்று, மகளையும் கேலி பேசினான். இந்த அவமானத்தை பொறுத்துக் கொள்ள முடியாத தாட்சாயணி, தட்சன் வளர்த்து வைத்திருந்த யாக குண்டத்தில் அப்படியே பாய்ந்து விட்டாள்.

அதன்பிறகு, பர்வதராஜனுக்கு மகளாகப் பிறந்து பார்வதி என்னும் பெயருடன் வளர்ந்து வந்தாள். சிறு வயதிலிருந்தே கயிலைநாதன் தான் தன் கணவன் என்று தீர்மானமாக இருந்தாள். அவளுடைய அந்த எண்ணம் பலிக்க வேண்டும் என்றால், அவள் விநாயகரை நினைத்து சதுர்த்தி விரதம் மேற்கொள்ள வேண்டுமென்று அவளுடைய தந்தையார் பர்வதராஜன் யோசனை சொன்னார். அவர் சொன்னபடியே, மண்ணால் ஒரு விநாயகர் விக்ரகத்தை உருவாக்கினாள் பார்வதி. கூடவே தங்கத்தாலும் ஓர் உருவம் செய்து இரண்டையும் பொற்கும்பம் ஒன்றின் பக்கத்தில் வைத்தாள். அந்த விக்ரகங்களுக்கு ஆகம விதிப்படி பூஜைகளை செய்தாள்.

ஆவணி மாத அமாவாசைக்கு அடுத்த சதுர்த்தியில் இப்படி பூஜையை ஆரம்பித்து, பௌர்ணமிக்கு அடுத்த சதுர்த்தி வரையில் தினமும் பூஜை செய்தாள். அதற்குப் பிறகு மண் பிள்ளையாரை, மேள தாளத்தோடு ஊர்வலமாக எடுத்துப் போய் நதியிலே இறக்கி விட்டாள். அந்த பதினைந்து நாட்களும் நியம நிஷ்டைகளை மீறாமல் இருந்த விரதத்தின் பலனாக, தான் ஆசைப்பட்டாற்போல கயிலைநாதனை கைப்பிடித்தாள்.

விநாயகர் ஆதி பரம்பொருள். எல்லோருக்கும் மூத்தவர். பிரம்மா, விஷ்ணு, சிவன் என்று எல்லோரையும் உருவாக்கியவர் அவர்தான். அவர் சாதிக்க வேண்டியது நிறைய இருந்ததால் அவர் பலவித அவதாரங்களை எடுத்தார். அந்த மாதிரியான ஒரு அவதாரம்தான் சிவன் மகனாக அவர் தோன்றியது. அற்பத் தாவரமான புல்லையும் (அருகம்புல்) அவர் ஏற்றுக் கொள்கிறார். காட்டுப்பூவான எருக்கம்பூவைக் கூட அவர் மறுப்பதில்லை.

அவரைப் பொறுத்தவரை புல் மாலை போட்டவரும் ஒன்றுதான்; ரோஜா மாலை போட்டவரும் ஒன்றுதான். வித்தியாசமே பார்க்க மாட்டார். தன்னை வணங்குபவரின் மனம் சுத்தமாக இருக்கிறதா, அந்த மனதில் தனக்கு எத்தகைய இடம் இருக்கிறது என்பதை மட்டும்தான் பார்ப்பார்.

**விநாயகர் சதுர்த்தி விரத நடைமுறைகள் என்னென்ன?**

அன்றைய தினம் விடியற் காலையிலேயே எழுந்து, சுத்தமாக குளித்துவிட்டு, வீட்டையும் சுத்தமாக்கிக் கொள்ள வேண்டும். வாசலில் மாவிலைத் தோரணம் கட்டலாம். முடிந்தால், இரண்டு வாழைக் கன்றுகளையும் வாசலின் இருபுறங்களிலும் கட்டி வைக்கலாம். பிறகு, பூஜையறையில் சுத்தம் செய்த ஒரு மணையை வைக்க வேண்டும். அதன்மேல் ஒரு கோலம் போட்டு, அதன்மேல் ஒரு தலை வாழை இலையை வைக்க வேண்டும். இலையின் நுனி வடக்கு பார்த்ததுபோல இருப்பது நல்லது. இந்த இலையின் மேல் பச்சரிசியைப் பரப்பி வைத்து, நடுவில் களிமண்ணாலான பிள்ளையாரை வைக்க வேண்டும்.

பூமியிலிருந்து உருவான எதுவும் பூமிக்கே திரும்பப் போகவேண்டும் என்ற தத்துவம்தான் களிமண் பிள்ளையார். களிமண் மட்டும்தான் என்றில்லாமல், உலோகம், கற்சிலை விக்ரகங்களையும் வைக்கலாம். பத்ர புஷ்பம் எனப்படும் பல்வகைப் பூக்கள் கொண்ட கொத்து, எருக்கம்பூ மாலை, அருகம்புல், சாமந்தி, மல்லி என்று எத்தனை வகை பூக்களை வாங்க முடியுமோ, அவரவர் வசதிக்கேற்ப வாங்கிக் கொள்ளலாம்.

அதேபோல முடிந்த அளவுக்கு சில வகை பழங்களையும் வாங்கிக் கொள்ளலாம். இவை எல்லாவற்றையும் விட, விநாயகருக்கு மிகவும் பிடித்தமான மோதகத்தை செய்து கொள்ளலாம். அதாவது கொழுக்கட்டை. தேங்காய் பூர்ணத்தை உள்ளே வைத்து செய்யப்படுவது. இதிலும் ஒரு தத்துவம் இருக்கிறது. மேலே இருக்கும் மாவுப் பொருள்தான் அண்டம்.

உள்ளே இருக்கும் வெல்லப் பூர்ணம்தான் பிரம்மம். அதாவது நமக்குள் இருக்கும் இனிய குணங்களை மாயை மறைக்கிறது. இந்த மாயையை உடைத்தால் அதாவது வெள்ளை மாவுப் பொருளை உடைத்தால், உள்ளே இனிய குணமான வெல்லப் பூர்ணம் நமக்குக் கிடைக்கும். (விநாயகருக்கு முதன் முதலாக இந்தக் கொழுக்கட்டையை நிவேதனம் செய்தது, வசிஷ்ட முனிவருடைய மனைவியான அருந்ததி.) பிள்ளையாருக்கு பூக்களால் அலங்காரம் செய்து விட்டு, பிறகு விநாயகர் பாடல்கள் எதை வேண்டுமானாலும் பாடலாம். அவ்வையார் தந்த விநாயகர் அகவல், காரிய சித்தி மாலை படிப்பது விசேஷமான பலன்களைத் தரும். பிள்ளையாருக்கு கொழுக்கட்டை மட்டுமில்லாமல், அவரவர் வசதிக்கேற்ப எள்ளுருண்டை, பாயசம், வடை என்றும் நைவேத்யம் செய்யலாம்.

பால், தேன், வெல்லம், முந்திரி, அவல் என்று ஒவ்வொன்றிலும் சிறிதளவு எடுத்து ஒன்றாகக் கலந்து அதையும் நைவேத்யம் செய்யலாம். நிவேதனப் பொருட்கள் ஒவ்வொன்றிலும் 21 என்ற கணக்கில் சிலர் வைப்பார்கள். ஆனால், எண்ணிக்கை முக்கியமில்லை; ஈடுபாடுதான் முக்கியம். பிறகு கற்பூரம் காட்டி விரதத்தை முடிக்கலாம்.

இந்த விரதத்தை காலையிலிருந்தே உணவு எதுவும் எடுத்துக் கொள்ளாமல் அனுஷ்டிப்பது மிகவும் விசேஷம். பூஜை நேரம் வரை பட்டினியாக இருப்பது சிறப்பு. சம்பிரதாயம் பார்க்கக் கூடியவர்கள் இந்த விநாயகர் சதுர்த்திக்குப் பிறகும் தொடர்ந்து விரதத்தை அனுசரிப்பார்கள். அப்படித் தொடர்ந்து, பௌர்ணமிக்குப் பிறகு வரும் சதுர்த்தி தினத்தோடு விரதத்தை நிறைவு செய்வார்கள். இத்தனை நாள் விரதத்துக்குப் பிறகுதான் பிள்ளையாரை கிணற்றிலோ அல்லது ஏதாவது நீர்நிலையிலோ கொண்டுபோய் போடுவது வழக்கம். பதினைந்து நாள் அனுசரித்தாலும் சரி, விநாயகர் சதுர்த்தி அன்றைக்கு ஒரே ஒருநாள் மட்டும் அனுசரித்தாலும் சரி, மேற்கொள்ளும் விரதத்தை உளப்பூர்வமாகக் கடைப்பிடிக்க வேண்டியதுதான் முக்கியம்.

வருடத்திற்கு ஒருமுறை இப்படி விநாயகர் சதுர்த்தி அனுசரிப்பதுபோல மாதந்தோறும் பௌர்ணமிக்கு அடுத்த சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தியாக அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த நாளிலும் விரதம் இருப்பது சிலருடைய வழக்கம். அன்றைக்கு முழுவதும் பட்டினி இருந்து, விநாயகர் சிலை அல்லது படத்துக்கு முன்னால் தீபமேற்றி, விநாயகர் பாடல்கள், ஸ்தோத்திரங்களை பாடி, மாலையில் கொழுக்கட்டை நைவேத்யம் செய்து, பிறகு சந்திர தரிசனம் செய்துவிட்டு எளிமையான உணவை எடுத்துக்கொண்டு விரதத்தை முடிப்பதும் சிலர் வழக்கம்.

இந்த விரதங்களால் உள்ளம் மேன்மைஅடையும்; உடல் ஆரோக்கியம் வளரும்; எல்லா வளங்களும் நிறையும். விரதம் இருப்பவர்களுக்கு மட்டுமல்ல, அவர்கள் குடும்பத்தினருக்கும், அவர்களை சார்ந்த அனைவருக்கும் விநாயகர் நல்லன எல்லாம் அருள்வார். விநாயகர் ஒரு முறை கைலையில் ஆனந்தமாய்த் திருநடனம் செய்து கொண்டிருந்த வேளையில் அங்கே வந்த சந்திரன், விநாயகரின் பெருத்த தொந்தியையும், துதிக்கையையும், அவற்றைத் தூக்கிக் கொண்டு அவர் ஆடுவதையும் பார்த்து விட்டுப் பெரிதாய்ச் சிரித்தான். அவன் தன்னைப் பார்த்து எள்ளி நகையாடியதைக் கண்ட விநாயகர் அவனின் கலைகள் தேய்ந்து போனவை, தேய்ந்தவையாகவே இருக்கும் எனக் கூறவே, மனம் வருந்திய சந்திரன் அதற்குப் பரிகாரமாகவும், தன்னுடைய தவற்றை நீக்கவும் சதுர்த்தி தினத்தன்று விரதம் இருந்து விநாயகரின் அருளைப் பெற்றான்.

அப்போது விநாயகர் சந்திரனிடம், "இன்று முதல் சுக்கில பட்சச் சதுர்த்திகளில் உன்னைப் பார்ப்பவர்களுக்குப் பாவம் சம்பவிக்கும், எனவும், அதைப் போக்கிக் கொள்ளச் சதுர்த்தி விரதம் இருந்து பூஜித்தால் அவர்களுக்கு நன்மையே விளையும்!" எனவும் சொன்னார். இந்த விரதமே சங்கடஹர சதுர்த்தி விரதம் என அழைக்கப் படுகிறது. ஒவ்வொரு பௌர்ணமிக்குப் பின்னரும் வரும் ஒவ்வொரு சதுர்த்தியும் சங்கடஹர சதுர்த்தி எனவும், ஆவணி பௌர்ணமியின் பின்னர் வரும் சங்கடஹர சதுர்த்தி, மகா சதுர்த்தி எனவும் சொல்லப் படுகிறது. வருடம் பூராவுமோ அல்லது மகா சங்கடஹர சதுர்த்தி அன்றிலிருந்தோ விரதம் இருக்க ஆரம்பித்து, சுக்ல பட்சச் சதுர்த்தி ஆன விநாயக சதுர்த்தி அன்று விநாயகருக்குப் பூஜைகள், செய்து வழிபட்டு வருவோருக்குச் சகல நன்மைகளும் கிட்டும் எனவும் கூறினார். சங்கடஹர சதுர்த்தி விரதம் அனுஷ்டித்தவர்கள் தங்கள் விரதப் பலனை யாருக்காவது தானம் கொடுத்தால் கூட அவருக்குச் சங்கடங்கள் விலகி விநாயகரின் அருள் கிடைக்கும் என்பதற்குக் கீழ்க்கண்ட கதை ஒரு உதாரணம் ஆகும்.

ஒருமுறை தண்டகா வனத்தில் வசித்து வந்த வேடன் ஒருவன் "விப்ரதன்" என்னும் பெயருடையவன் கொலை, கொள்ளைகளுக்கு அஞ்சாதவனை நல்வழிப்படுத்த எண்ணிய "முத்கலர்" என்னும் முனிவர் அவனுக்குச் சங்கட சதுர்த்தி விரதம் பற்றியும், விநாயகர் வழிபாடு, மூலமந்திரம் போன்றவற்றையும் உபதேசித்தார். அன்று முதல் மூலமந்திரத்தை இடைவிடாது ஜபித்து வந்த விப்ரதன், நாள் ஆக, ஆக, உருவமே மாறி அவனின் நெற்றிப் பொட்டில் இருந்து துதிக்கை போலத் தோன்ற ஆரம்பித்து, அவனும் விநாயகரைப் போன்ற வடிவமே பெற ஆரம்பித்தான்."ப்ருகண்டி" என அழைக்கப் பட்ட அவனுக்கு விநாயகரின் தரிசனமும் கிடைக்கவே அவனைப் பார்த்தாலே கிடைக்கும் புண்ணியத்தைப் பெற தேவலோகத்தில் இருந்து தேவேந்திரன் தன் விமானத்தில் ஏறி, பூவுலகு வருகிறான். தரிசனம் பெற்றுத் திரும்பும் வேளையில் விதிவசத்தால் அவனின் விமானம் மண்ணில் புதையுண்டு போகிறது. அப்போது சங்கட சதுர்த்தி விரதம் இருந்தவர்கள் தங்கள் விரத பலனைக் கொடுத்தால் விமானம் கிளம்பும் எனத் தெரிய வர, அவ்வாறே விரத பலனைப் பெற்றுக் கொண்டு விமானம் மூலம் அமரர் உலகு அடைகிறான் தேவேந்திரன் அடியவர்களின் சங்கடங்களையும் வேதனைகளையும், தீர்த்தருளும் எமது அப்பன் சித்தி விநாயகனை சதுர்த்தி காலங்களில் நினைத்து அவன் அருளாட்சியைப் பெறுவோம்.

சுபம்

**திரு. இ.ஸ்ரீ பாஸ்கரன்.**

மங்களத்து நாயகனே மண்ணாளும் முதலிறைவா
பொங்குதன வயிற்றோனே பொற்புடைய ரத்தினனே
சங்கரனார் தருமதிலாய் சங்கடத்தை சங்கரிக்கும்
எங்கள் குலவிடிவிளக்கே எழில்மணியே கணபதியே

கொவென்றி மாநகர் வாழும் சைவ மக்களுக்கு விநாயகப் பெருமான் எழுந்தருளி, அவரைப் பூஜித்து வழிபாடு செய்யக் கோயிலொன்று உருவாகிய பெரும் பாக்கியம் கிடைத்திருக்கிறது. எல்லாம் அவன் செயலாலே நடந்து வருகிறது. இப்படிப் பெற்ற ஆலயத்தை ஒழுங்காகப் பராமரிப்பது பொது மக்கள் கடமை. இக்கடமையை நாங்கள் எல்லாரும் ஒற்றுமையுடன் கூடிச் செய்ய வேண்டுவது அத்தியாவசியம். ஆகவே மகாகும்பாபிஷேகத்துடன் கடமைகள் ஒழியாமல் தொடர்ந்து தினசரி செயல்களை நடாத்த விநாயகர் அருளளிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து எம்மால் இயன்றவரை கோயில்பணிகளைச் செய்ய வந்து உதவவுவதும் நன்று.

சில வருடங்களுக்குமுன் அடியார் சிலர் ஒருமித்து கொவென்றி நகரில் சைவ மத முதற் கடவுளான விநாயகர் கோயிலமைக்கத் தீர்மானித்தனர். அந்த எண்ணம் இப்போது அவனருளால் நனவாகிறது. இதுவரை இந்தக் கோயிலை உருவாக்கி நடத்தி வந்து, பல விதமாக உடல், பொருள், நிதி உதவி செய்த அறங்காவலர்களுக்கும், சிவாச்சாரியார்களுக்கும், கோயில் கட்டிட வல்லுனருக்கும், அடியார்கள் பலருக்கும் விநாயகப் பெருமானின் வெவ்வினையை வேரறுக்க வல்லான்'' அருள் கிடைக்க வேண்டுமென நாங்கள் வணங்குவோம். அத்துடன் அவர்களுடன் நாம் எல்லாரும் தொடர்ந்து இத்தகைய நற்கடனைப் புரிய விநாயகப் பெருமான் அருளளிக்க வேண்டும்.

சைவ மதத்தின் மகிமைகளை விளங்க அடியேனுக்குத் தகுதியோ ஞானமோ இல்லை. என் சிற்றறிவில் சைவமதத்தில் வாழ்கைக்கும், உலகுக்கும், இயற்கைக்குமுரிய இணைப்புகள் அனைத்தையும், தர்மம், ஆணவம், கர்மம், மாயை முதலியவற்றின் தொடர்புகளையும் முனிவர்கள், ஞானிகள், நாயன்மார்கள் மற்றும் பல பெரியோர்கள் எடுத்துரைத்திருக்கிறார்கள். மற்றும் அவர்களின் உரைகள் இறைவனை அடைவதற்கு பல வழிகளையும் எடுத்துக் காட்டுகிறது. இவற்றை விளங்கிக்கொள்ள நாங்கள் எமது மனதைப் பக்குவப்படுத்திக் கொள்வது அத்தியாவசியம். இது இறைவன் வழிபாட்டின் ஒரு சிறப்பான நோக்கெனக் கூறலாம்.

தாய் நாட்டிலிருந்து புலம் பெயர்ந்திருக்கும் தமிழ் மக்களுக்கு பொதுவாகப் பல வெளிநாடுகளிலும் கோயில்கள் கலைகளை வளர்க்கும் மையமாக இருப்பதும் வளமை. அதுவும் திருவிழாக் காலங்களில், கோயில்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதும் சகஜம். இதற்குரிய காரணங்கள் எல்லாருக்கும் தெரிந்தவை. ஆகவே மக்கள் தம் பிள்ளைகளை கோயிலில் நடத்தப்படும் கலை வகுப்புகளில் பங்குபற்றி கலைகளிலும் தேர்ந்து சிறந்து வாழ செயலாற்றுங்கள்.

தொல்லையிலும் பிறவி சூழும் தழை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே
எல்லை மறுவா நெறியளிக்கும் வாதவூர்
எங்கோன் திருவாசகம் என்னுந் தேன்.

**திரு. க. சிற்றம்பலம்**

# சமூகம் நோக்கிய பணியில் ஆலயங்கள்

சமூகம் சமுதாயம் என்ற கட்டுகோப்புக்குள் வாழக் கற்றுக் கொண்ட மனிதன் நெறிமுறையான வாழ்க்கையை வாழ்வதற்காக தோற்றம் பெற்றவையே மதங்களாகும். மதங்களை அடிப்படையாகக் கொண்டு ஆலயங்கள் தோற்றம் பெற்றன. ஆலயம் என்றால் ஆன்மாக்கள் இறைவனுடன் லயப்படும் இடமென்று பொருட்படும். ஐம்புலன்களை அடக்கி முழுமையாக இறைவனை வழிபடத்தக்க இடமாக ஆலயங்கள் இருப்பதனையும் அவற்றின் புனிதத்தையும் மக்கள் உணர்ந்து கொண்டனர். தமது சமூக வாழ்வியலின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் ஆலயத்துடன் இணைத்து வாழப் பழகிக்கொண்டனர்.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்," ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற கூற்றுக்கள் ஆலயங்களின் மகத்துவத்தை மக்கள் உணர்ந்ததன் அடையாளமாகக் காணப்படுகின்றன.

கோயில் முழுவதும் கண்டேன்
உயர் கோபுரமேறிக் கண்டேன்
தேவாதி தேவனையான்
எங்கு தேடினும் கண்டிலனே

என்ற பாடலடிகள் இறைவனுக்கும் கோயில்களுக்கும் பக்தனுக்கும் இடையிலான தொடர்பினை காட்டிநிற்கின்றது.

திருமூலர் ஆலய வழிபாடு" என்பது உயிர் வழிபாடு என்று கூறுகின்றார். ஆலயங்களானவை சமுதாயத்தினிடையே ஜீவகாருணியம் என்ற உயரிய மனிதப்பண்பை விதைக்கும் ஒரு களமாக விளங்குவதை இக்கூற்றுக்கள் பறைசாற்றுகின்றன. மேலும் செய்யும் தொழிலே தெய்வம்" என்ற வாக்கானது மெய்யுணர்வுடன் எக்கருமம் ஆற்றினும் அதிலே இறைவனைக் காணலாம் என்ற கருத்தினை வெளிப்படுத்துகின்றது. இவ்வாறான ஆத்மார்த்தமான உணர்வுகளினை முறையான ஆலய வழிபாட்டினூடாகவே சமூகமானது பெற்றுக் கொள்கின்றது என்று கூறினால் மிகையாகாது.

அன்று பாரதியார் கோயில்கள் கல்விக்கூடங்களாகவும் கல்விக்கூடங்கள் கோயில்களாகவும் மாறவேண்டுமென்று முழங்கினார். பாரதி கண்ட கனவிற்கு உயிர் கொடுத்தாற்போல பல ஆலயங்கள் செயற்பட்டு வருகின்றன. குறிப்பாக மேலைத்தேயங்களிலே தோற்றம் பெற்ற ஆலயங்கள் அனைத்தும் வெறுமனே வழிபாட்டிற்குரிய இடமாக மட்டுமன்றி எமது கலை கலாச்சாரங்களை பேணிவளர்க்கின்ற கலைக்கூடங்களாகவும் செயற்பட்டு வருவது புலம்பெயர் உள்ளங்களை ஆறுதலடைய வைக்கின்றது. அதுமட்டுமன்றி எமது பண்பாட்டு விழுமியங்களை எமது எதிர்காலச் சந்ததியினருக்காகப் பேணிக்காக்கும் பொக்கிசமாகவும் இவ்வாலயங்கள் விளங்குகின்றமை மிகவும் சிறப்பான விடயமாகும்.

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிம் நாட்டல்
ஆன்னயாவிலும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தலே

என்ற மகாகவியின் பகுத்தறிவு வாதத்திற்கு அமைய இன்று பல ஆலயங்கள் அறக்கட்டளைகளை உருவாக்கி தாயகத்தில் போரினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்விக்கு உறுதுணையாக பல சேவைகளை புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.

காயமே கோயில் வாய்மையே அதன் தூய்மை அன்பே அதில் இறைவன் என்ற உணர்வினை ஒவ்வோரு மனிதனிடத்திலும் ஊட்டி சமூகத்தின் புனிதத்தையும் ஸ்திடத்தையும் பேண ஆலயங்கள் கடும் சிரத்தையுடன் உழைத்து வருவதை யாரும் மறுப்பதற்கில்லை.

அந்தவகையில் கொவன்றி மாநகரிலே எழுச்சிபெற்று இன்று தனது ஆவர்த்தன மகாகும்பாபிஷேகத்தினைக் காணும் கொவன்றி ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் பணிகளும் மகத்தானவை. இவ்வாலயமானது மென்மேலும் வளரவும் அதன் அறப்பணிகள் சிறப்புறத்தொடரவும் எல்லாம் வல்ல எம்பெருமானின் திருவருளினை வேண்டி வணங்குவோம்.

**திருமதி நிருபா சுந்தரேசன்**

# சைவத்திருக்கோவிலில் இசையும் நடனமும்

பன்னெடுங்காலமாகக் கலைகள் சமயத்துடன் இனைந்து வளர்ந்து வந்துள்ளன. குறிப்பாக இந்துசமயத்திற்கும் கலைகளுக்குமிடையே பிரிக்க முடியாத ஒன்றினைந்த தொடர்பு நிலவி வந்துள்ளது. வேதாகம முறைப்படி கோவில்கள் அமைக்கப்பட்டபின், கலைகளின் நிலைக்களமாக அவை திகளத் தொடங்கின,கோவில்கள் சமய உனர்வினையும் அறிவினையும் புகட்டும் நிலையங்களாக மட்டுமன்றி கவின் கலைமையங்களாகவும் மிளிரலாயின கோவிலமைப்பு அதில் இடம்பெறும் ஓவியங்கள், சிற்பங்கள், கிரியைகள், முதலியவற்றிலே கவின்கலைகள். குறிப்பாக இசையும் நடனமும் முக்கியமாக ஓரிடத்தினைப் பெற்றுள்ளன. கோவிலிலே ஒரு முக்கியமான கவின்கலைக்கூடமாகவும் காட்சியளித்தது கோவிலிலே குடிகொண்டிருக்கும் பரம்பொருளான இறைவன் கலைஞருக்கும், பக்தருக்கும், ஒப்புயர்வற்ற தனிப்பெரும் கலைவடிவமாகவும், கலைபுரவனாகவும், கலைஞானியாகவும், கலையினிருப்பிடமாகவும் காட்சியளித்தார். சைவ முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் ஆடற்கரசனாக, நடராஜனாக, பல்வேறு கலைகளின் தனிப்பெரும் வித்தகனாக விளங்குகிறார். நடராஜ வடிவமே இதற்கு எடுத்துக்காட்டு. இவரைப்போலவே அம்மன். பிள்ளையார் முருகன், விஷ்னு, முதலிய கடவுளாரும், கலைப்பிரியராகவும், கலையின் வடிவமாகவும், போற்றப்படுகின்றனர். சிலப்பதிகாரத்தில் மாதவி கற்றதாகக் கூறப்படும் பதினொரு வகை ஆடல்களும் வெவ்வேறு கடவுளார் ஆடியவை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆகவே தெய்வங்களுக்குரிய கோவில்களும் கலைக்களஞ்சியங்களாக விளங்கியதில் வியப்பில்லை இசையும் நடனமும் இறைவனோடு இசைந்த எழிற்கனைகள் இக்கலைகளைப் பயில்வோர், பயிற்றுவிப்போர், பேணி வளர்ப்போர் அனைவரும் இறையருளுக்குப் பாத்திரமானவர்கள் இறைவனுக்கு நடனக்கலையை அர்ப்பணிப்பதால் உலகிலே தானியங்கள் விருத்தியும் எல்லாவிதமான நன்னமைகளும் சந்தோசங்களும் ஏற்படுகின்றது என வேதாகமங்கள்

நடனம் தான்ய சித்திஸ்யாத்
சுத்த-நிருத்தம் சுபப்ரதம்
நிருத்த ஹூனேது துக்கம்

என இவ்விதம் கூறுகின்றன. தர்மம் புகழ் நீண்டஆயுள் விரும்பிய நற்பலன்கள் அறிவு வளர்ச்சி என்பவற்றை தரவல்லதும், இம்மையிலும், மறுமையிலும் எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றக் கூடியதுமான இந்நாட்டிய வேதத்தை இன்றும் சைவத்திருக்கோவில்களில் பேணிப்பாதுகாக்கப்பட்டு வருவது போற்றுதற்குரிய விடயமே நால்வேதங்களின் சாரமாக ஐந்தாவது வேதமாக நாட்டிய வேதம், நாட்டிய சாஸ்திரம் விதந்தோதப்படுகின்றது. சங்கீதித்னாகரம் எனும் நூல் இசை நடனம் ஆகியவற்றின் சிறப்புக்களை தெய்வீக அடிப்படையில் வலியுறுத்திக்கூறுகின்றன. இறைவனை வழிபடுதற்கு மலர் நைவேத்தியம் ஆகியவற்றை விட நிருத்ததானமே சிறந்தது என விஷ்னு தர்மோத்ர புரானம் கூறுகின்றது. இத்தகைய அரும்பெரும்கலையை புலம்பெரும் நாடுகளில் வாழும் எம்மவர்கள் குறிப்பாக சைவத்திருக்கோவில்களில்பேணி பாதுகாப்பது போற்றுதற்குரிய விடயமே. கடந்த மூன்று வருடங்களாக கொவன்றி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் இவ் அரும்பெரும் சேவை நடைபெற்று வருகின்றது. சைவத்திருக்கோயில்களில் இசையும் நடனமும் என்பதற்கினங்க இச்சேவையில் தோள் கொடுத்து நிற்கும் அனைவரும் போற்றுதறகுரியவர்களே.

ஸ்ரீமதி ஜெயச்சித்ரா.சிவமயூரன்
**(Dip.in Bharathanatyam-Kalaimanram Eats,1958 (Sri Lanka)**

# இசையும் நானும்

இசை என்ற சொல்லிற்கு இசைய வைப்பது என்று பொருள். இசையானது பல வகைப்படும். நமது பாரம்பரிய இசை கர்நாடக இசை" ஆகும். மனிதனையும் மற்ற உயிரினங்களையும், ஏன் இறைவனையே இசைய வைக்கின்ற, இணங்கச் செய்கின்ற ஓர் அரும் சாதனம் இவ் இசையாகும். இசையானது கட்டுப்பாடுள்ள இனிமையான ஒலியாகும். கட்டுப்படில்லாத, இனிமையைத் தராத ஒலியை இரைச்சல் என்னு கூறுகின்றோம். ஓலி இசையை வடமொழியில் நாதம் என்னு அழைக்கின்றனர். இறைவன் இசைவடிவமாக இருக்கின்றார் என்பது ஒரு முதுமொழியாகும். இறைவனுக்கும் இசைக்கும் நெருங்கிய தொடர்புள்ளதை நாம் உணர்வதால் இசையை ஒரு தெய்வீகக்கலை" என்று அழைக்கின்றோம்.

இசையை பயின்றவர்கள் இறைவனுக்கு மிகவும் அருகாமையில் உள்ளனர்" என்ற கூற்றுக்கிணங்க என்னுடைய பெற்றோர் என்னை இசைக்காக அர்ப்பணித்தார்கள். நான் கர்நாடக இசையை இந்தியாவில் பயின்று அங்கேயே சில காலம் பணிபுரிந்து வந்தேன். ஆத்துடன் நில்லாது இவ் இசைப்பணியை கொவன்றி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திலும் தொடர்ந்து வருகின்றேன்.

இக்கோயிலானது எமது பாரம்பரியக்கலைகளில் ஒன்றான இசையை பரப்பி வருகின்றது. அவர்களுடன் இணைந்து நானும் இதில் பங்கு கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இங்கே இசையை பயின்று வருகின்ற குழந்தைகள் மிகவும் சிறப்பாகவும் பொறுப்பாகவும் தங்களை இசைக்கலையில் தங்களை ஈடுபடுத்தியுள்ளனர். எனவே நானும் எனது பணியில் ஆர்வம் காட்டி வருகின்றேன். எமது இசைக்கலையை பரப்புவதற்கு எனக்கு இங்கு வாய்ப்பளித்துள்ள இக் கோயில் நிர்வாகத்தினருக்கு உளமார நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

"சங்கீத ரத்தினா"
திருமதி சுபாஸ் கஜந்தினி MA Music



# வெளிநாட்டில் சைவக் கோயில்கள்

சைவசமயம் இன்று உலகின் பல பாகங்களிலும் பரவியுள்ளது. சைவத்தமிழர்கள் மேற்கிந்திய தீவுகள், தென்னாபிரிக்கா, பிஜி, பர்மா, மொறீஸ்யஸ், றியூனியன், மலேசியா போன்ற பலநாடுகளில் குடியேற்றப்பட்டனர். தாய்நாடடுடன் உள்ள தொடர்பு குன்றியதாலும், பிறமொழிகள் ஆதிக்கத்தாலும் இந்நாடுகளில் தமிழ்மொழி வளர்ச்சி பெருமளவில் பாதிப்படைந்தது.

தற்பொழுது இவர்களில் பெரும்பான்மையினர் பெயரளவில் மட்டும் தமிழராக வாழ்ந்து வருகின்றார்கள். ஆனாலும், தமது வாழ்வை பூரணமடைய சைவசமயம் தேவையென்று உணர்ந்து அவர்கள் ஆங்காங்கே பல கோயில்களைக் கட்டிச் சைவசமயத்தை வளர்த்து வந்துள்ளார்கள். அவர்கள் தமது தமிழ்மொழி அறிவு குன்றினும் சைவசமயத்தை ஒருபோதும் கைவிட்டு விடவில்லை. இக்கட்டுரை வெளிநாடுகளிலுள்ள சில சைவக்கோயில்களில் நான் நேரிடையாகப் பெற்ற அனுபவத்தைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

## 1 <u>தென்னாபிரிக்கா</u>

தென்னாபிரிக்காவில் நூறாண்டுகளுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து வந்து குடியேற்றப்பட்ட சைவர்கள் பரவலாக வாழ்கின்றனர். இவர்கள் பல சிறிய, பெரிய சைவக்கோயில்களை அமைத்து சமய வழிபாடு செய்து வருகின்றார்கள். இன்று தென்னாபிரிக்காவில் மட்டும் இருநூற்றுக்கு மேற்பட்ட கோயில்கள் சிவன், முருகன், மாரியம்மன் போன்ற தெய்வங்களின் பெயரால் அமைக்கப்பட்டுள்ளன.

முன்னைய நிறவெறி கொண்ட அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் வெளிநாட்டுத் தொடர்பற்ற நிலையில் பல சைவக்கோயில்கள் உள்ளூர் பூசாரிகளால் பராமரிக்கப்பட்டு வந்திருந்தன. கடந்த சில வருடங்களாக குறிப்பாக இலங்கைலிருந்து வந்துள்ள பிராமண அர்ச்சகர்கள் கோயிற் பூசை முறைகளைச் சீர்படுத்தி, திருமுறைகளைப் பாராணம் செய்து, அவற்றை பஜனை முறையில் பாடி, திருவிழாக்களை நடாத்தி, மக்களிடையே விரதங்கள் அனுட்டிப்பதை ஊக்குவித்து சைவசமயத்தை தென்னாபிக்காவில் வளர்த்து வருகின்றனர்.

தென்னாபிரிக்காவிலுள்ள சைவர்கள் புரட்டாசி மாதம் முழுவதும் விரதம் அனுட்டித்து இறைசிந்தனையுடன் காவடி எடுத்தும், கோயில் வழிபாடு செய்து வருவது ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது. இம்மாதத்தில் மட்டும் சைவர்கள் எல்லோரும் மாமிசம், களியாட்டங்கள் ஆகியவற்றினைத் தவிர்க்கின்ற காரணத்தால் டேபனில் மாமிசம் விற்கும் கடைகளும், படமாளிகைகளும் இம்மாதத்தில் மூடப்படுகின்றன என்பதனை அறிந்தேன். பொதுவாக தென்னாபிரிக்காவிலுள்ள சைவர்களிடையே தெய்வநம்பிக்கை வேருன்றி ஆழமாக இருப்பதை என்னால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.
அத்துடன், தமிழர்கள் ஒருவரை ஒருவர் கைகூப்பி வணக்கம் என்று தமிழில் சொல்லி வரவேற்கின்றனர். அத்துடன் தென்னாபிரிக்கவில் வாழும் சைவர்கள் கோயில் வழிபாட்டிலும் பார்க்க மற்றவர்களுக்குச் சேவை செய்வதையே மிகவும் விரும்புகிறார்கள். யாராவது வீட்டில் மரணம் சம்பவித்தால் அவர்கள் வீட்டிற்குச் சென்று பஜனை செய்து சேவைகள் பல செய்து அவர்கள் துன்பத்தை துடைக்கும் செயல்களைச் செய்கின்றனர். இன்னும் சிலர் காலையில் பாடசாலைகளுக்குச் சென்று வசதி குறைந்த ஆபிரிக்க மாணவர்களுக்குக் காலை போசனம் கொடுப்பதைத் தவறாமல் செய்கின்றனர்.

## 2 <u>மலேசியா</u>, <u>சிங்கப்பூர்</u>

வியாபார, தொழில் காரணங்களுக்காக வெளிநாடு சென்ற இலங்கை, இந்தியத் தமிழர்கள் சைவக்கோயில்கள் பலவற்றை தென்கிழக்காசிய நாடுகளான தாய்லாந்து, மலேசியா, போர்னியோ, பர்மா, சிங்கப்பூர், வியட்னாம் முதலிய நாடுகளில் கட்டியுள்ளார்கள். மலேசியாவில் புகழ்பெற்ற முருகன் தலமான பத்துமலையில் மிகவும் உயரமான (80 அடிக்கு மேல்) முருகன் திருச்சிலை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. கோலாம்பூரில் அமைந்துள்ள புதிய மூகாம்பிகை அம்மன் கோயில் சிற்ப, சித்திர வேலைப்பாடுகள் கண்கவர் காட்சியாகும். இலங்கைச் சைவர்களின் கந்தசாமி கோயில் புதுப்பொலிவுற்று விளங்குகின்றது. இங்கே மூலஸ்தானத்தில் நல்லூர் கந்தசாமி கோவிலைப் போன்று வேல் அமைந்துள்ளது. சைவர்களின் பொருளாதார வளர்ச்சியின் பிரதிபலிப்பாக மலேசியா, சிங்கப்பூரில் ஆகிய நாடுகளில் பல புதிய கோயில்கள் அமைக்கப்பட்டும், பழைய கோயில்கள் புதுப்பிக்கப்பட்டும் வருகின்றன.

துர்க்கை அம்மன், மாரியம்மன், காளி அம்மன் வழிபாடு சிங்கப்பூர், மலேசியா, வியட்னாம், தாய்லாந்து ஆகிய நாடுகளில் உள்ள குறிப்பாக இந்திய வம்சாவளி சைவத்தமிழரிடையே மேம்பட்டுள்ளது. தற்பொழுது சுவாமி ஐயப்பன் வழிபாடு சிங்கப்பூரில் உள்ள சில கோயில்களில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இங்கே சைவர்கள் பெருமளவில் கலந்து கொண்டு தமிழில் தோத்திரப் பாடல்களை கூட்டுப்பிரார்த்தனை முறையில் பாடி சிறப்பான முறையில் வழிபாடு நடாத்தி வருகின்றனர். மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாட்டுச் சைவர்கள் தைப்பூசத்தை சிறப்பான முறையில் கொண்டாடுகின்றனர். பினாங்கிலும், குகந்தானிலும் உள்ள முருகன், மரத்தாண்டவர் கோயில்களும் பிரசித்தி பெற்றவை. மலேசியாவில் 16 ஆயிரம் சைவக்கோயில்கள் இருப்பதாக ஒரு கணிப்பு கூறுகின்றது.

பல சிறிய கோயில்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. 1977ஆம் ஆண்டு முதல் மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் 12 வருடங்களாக வாழ்ந்து, பின்னர் பல தடவைகள் இந்நாடுகளுக்கு சென்ற அனுபவத்தைக் கொண்டு சைவர்களிடையே கோயில் வழிபாடு மேலோங்கி வருவதை என்னால் கணிக்க முடிகின்றது. அத்துடன் சில சீனர்களும் கோயிலுக்கு வந்து வழிபாடு செய்கின்றனர். தைப்பூசத் தினத்தில் சீனர்கள் சிலரும் காவடி எடுக்கின்றனர்.

## 3 போர்னியோ தீவு

கிழக்கு மலேசியாவிலுள்ள போர்னியோ தீவின் சர்வாக் நாட்டில் கூசிங் பிள்ளையார் கோயிலும், சபா நாட்டில் பசுபதிநாத், சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்களும் சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த இடங்களில் சைவர்கள் தொகை அதிகமாக இல்லாமல் இருப்பினும் இக்கோயில்கள் முறையாகவும், சிறப்பாகவும் அர்ச்சகர்களை வைத்து நடாத்தப்படுகின்றன. தடாகத்தின் நடுவே அழகாக அமைந்துள்ள பசுபதிநாத் ஆலயத்தில் இந்துசமயத்தின் சன்மார்க்கத்தை கருத்திற் கொண்டு பிள்ளையார், சிவன், விஷ்ணு, சக்தி, சூரியன், முருகன் ஆகியவற்றிருக்கு விக்கிரகங்கள் அமைத்து வழிபாடு நடைபெறுகின்றது. மலேசிய ராணுவ முகாமில் அமைந்துள்ள சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் ராணுவ சிப்பாய்களினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இங்கே நவக்கிரக வழிபாட்டிற்காக புரட்டாசி மாதம் எல்லோரும் வருகின்றனர்.

## 4 தாய்லாந்து

தாய்லாந்தின் பெரும்பான்மையினர் புத்தசமயத்தைச் சார்ந்தவர்கள். ஆனாலும், இந்துசமய வழிபாடு பரவலாக இங்கே காணப்படுகின்றது. வேறு ஒரு நாட்டிலும் இல்லாதவாறு படைத்தல் கடவுளாகிய பிரம்மாவுக்கு கோயில் அமைத்து நேரம் தவறாது வழிபாடு செய்வதை எங்கும் அவதானிக்க முடிந்தது. பெரிய வணிகக் கட்டிடங்களிலும், ஹோட்டல்களிலும், வீதிச்சந்திப்புகளிலும் பிரம்மாவுக்கு கோயில்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. இதே போன்றே, விநாயகர் வழிபாடும் பரவலாக தாய்லாந்தில் நடைபெற்று வருகின்றது. வடதாய்லாந்து சியங்மாய் நகரில் நான் தங்கியிருந்த ஹோட்டல் வெளித்தோட்டத்தில் பிரம்மாவுக்கு ஒரு பெரிய கோயிலும், விநாயகருக்கு ஒரு சிறிய கோயிலும் அமைக்கப்பட்டிருந்தன. இருகரம் கூப்பி ஒருவரை ஒருவர் வரவேற்பதை பழக்கமாகக் கொண்டிருப்பவர்கள் தாய்நாட்டவர்கள். தமிழர்களிடம் இருந்த இப்படியான வரவேற்கும் பழக்கம் மாறி வருகின்ற இந்நாளில் தாய்நாட்டவர்கள் இப்படி வரவேற்பதைக் கண்டு நான் பூரிப்படைந்தேன்.

பாங்கொங் நகரில் உள்ள மகாமாரியம்மன் கோயிலில் இந்தியர்களும், தாய்நாட்டவர்களும் சிறப்பாக நம்பிக்கையுடன் வழிபாடு செய்கின்றனர். இங்கே, மாரியம்மன், விநாயகர், முருகன், சிவன், பிரம்மா, நவக்கிரகங்கள் ஆகிய தெய்வங்களுக்கு சந்நிதிகள் அமைத்துள்ளனர். மகாகோபுரத்தைக் கொண்ட இக்கோயில் இன்னும் கும்பாபிஷேகத்தைக் காணவில்லை. கோயிலுக்கு வரும் பக்தர்கள் இளநீர், பூக்கள், ஊதுபத்திகள், மெழுகுவர்த்தி, பால் ஆகிய கொண்டு வருகிறார்கள். கோயிலில் மெழுகுவர்த்தி, ஊதுபத்தி கொழுத்தி, முழங்காலில் நின்று அமைதியாக பல நிமிடங்கள் இருந்து வழிபாடு செய்கின்றனர்.

தாய்நாட்டவர்கள் தமிழ்த் தோத்திர, பஜனைப் பாடல்களை தமது தாய் மொழியிலே எழுதி பிரதி சனிக்கிழமை தோறும் கூட்டுவழிபாடு நடாத்துகின்ற காட்சி என்மனதைச் சிலிர்க்க வைத்தது. காலை ஆறு மணி முதல் இரவு எட்டு மணி வரை பக்தர்கள் குறைவின்றி இக்கோயிலில் வழிபாடு நடாத்துகின்றனர்.

தினமும் நான்கு முறை கோயிலுக்கு வரும் தாய் பக்தர்களும் உண்டு. நவராத்திரி காலங்களில் பத்து நாட்கள் சிறப்பாக நாதஸ்வரம், நாட்டிய நிகழ்ச்சியுடன் இக்கோயிலில் திருவிழாக்கள் நடைபெறுகின்றது. அத்துடன், விஜயதசமி நாளில் மாரியம்மன் பாங்கொக் நகரில் 25 கிலோ மீட்டர் தூரம் ஊர்வலம் வருகின்றாள். அத்தருணம், தமது வீட்டுப் பூசை அறையிலிருந்து சுவாமிப் படங்களையும், விக்கிரகங்களையும் வீதிக்குக் கொண்டு வந்து அம்மன் அருள் பெற்றுச் செல்வார்கள்.

## 5 தென் வியட்னாம்

நாட்டுக்கோட்டைச் செட்டியார் சமூகத்தவர்கள் பலர் வியாபார நோக்கம் கொண்டு தென்கிழக்காசிய நாடுகளுக்கு வியட்னாம் வரை சென்றுள்ளனர். அவர்கள் தென் வியட்னாமில் ஹோ சீ மின் நகரில் மூன்று சைவக் கோயில்களை அமைத்து இறைவழிபாடு செய்தனர். இக்கோயில்கள் அறுபது வருடங்களுக்கு மேலாக இந்நகரின் வணிக வட்டாரத்தில் அமைந்துள்ளன.

மாரியம்மன் கோயில், ஸ்ரீ தண்டாயுதபாணி கோயில், சிவசுப்பிரமணிய சுவாமிகள் கோயில் ஆகியவைகளே இக்கோயில்களாகும். மாரியம்மன் கோயிலில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிராமணர் அல்லாத ஒருவர் பூசை செய்து வருகிறார். மற்றைய கோயில்களில் இந்திய வம்சாவழியில் வந்த வியட்னாமியர் பூசை செய்கின்றனர். எல்லாக் கோயில்களிலும் தமிழ்ப் பக்திப்பாடல்கள் எந்நேரமும் ஒலித்துக் கொண்டிருப்பதைக் கேட்டேன். மாரியம்மன் கோயில் ஒன்றே இராஜகோபுரத்தைக் கொண்டுள்ளது. அம்மனின் பலவகையான தோற்றங்கள் சிலைவடிவாக கோயிலில் அழகாக அமைக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டுள்ளது இக்கோயிலில் அமைந்துள்ள சிறப்பாகும். வியட்னாமியர் பெரும்பான்மையாகச் சென்று வழிபாடு செய்வதையும் காணக் கூடியதாகவுள்ளது.

திருவிழாக் காலத்தில் அம்மன் வீதி வலம் செய்கின்றாள். தமிழ் பேச, எழுதத் தெரியாத தமிழர்கள் இங்கே இருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது. அதிகமான தமிழர்கள் கலப்பு மணம் செய்தாலும் தமிழ்ப் பெயர் கொண்டுள்ளனர். பக்தர்கள் மாரியம்மனிடம் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர் என்பதை அவர்கள் எண்ணிக்கையும், வழிபாட்டு முறையும் எடுத்துக் காட்டுகின்றது.

தென் வியட்னாமை அமெரிக்காவிடமிருந்து கைப்பற்றிய கம்யூனிஸ்ட்வாதிகள் இக்கோயில்களைப் பூட்டிவைத்து அவற்றை பின் வேலைத்தளங்களாக மாற்றிச் செயற்பட்டனர். கோயில் நகைகள் எல்லாம் சூறையாடப்பட்டன என்பதை அறிந்தேன். இருபது வருடங்களுக்குப் பின்னர், நட்பு நாடாகிய இந்தியாவின் வேண்டுகோளுக்குச் செவிமடுத்தி இந்தக் கோயில்கள் மீண்டும் இறை வழிபாட்டுத் தலங்களாக ஆக்கப்பட்டன. மாரியம்மன் கோயில் வருமானம் பக்தர்கள் பலரிந் வருகையால் குறைவின்றியுள்ளது. வருமானம் குறைந்த கோயிலான தண்டாயுதபாணி கோயில் சாயிபாபா நிலைய அங்கத்தவர்கள் ஆதரவுடன் தற்பொழுது புனரமைக்கப்பட்டுள்ளது. இந்நகரிலுள்ள இந்திய வணிகர்களும், இந்திய தூதராலயத்தினரும் கோயில் திருப்பணிக்கு உதவுகின்றனர்.

கலாநிதி இ. ஸ்ரீ. இரவீந்திரராஜா

ஓம் சக்தி

**தனம் தரும் கல்விதரும் ஒரு நாளும் தளர்வறியா**
**மனம் தரும் தெய்வ வடிவம் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா**
**இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே**
**கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக் கண்களே**



ஆண்டு தோறும் புரட்டாசி மாதத்தில் 9 நாட்கள் அன்னை பராசக்தியை வீடுகளிலும், பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் பூஜை செய்து வழிபடும் நவராத்திரி விழா.

அலைமகள், மலைமகள், கலைமகள் என முப்பெரும் தேவியரையும் துதித்து வழிபட்டு. இவ் உலக வாழ்கை சிறப்பாக அமைய முக்கியமான கல்வி, செல்வம், வெற்றி (வீரம்) எம்பவற்றை இறைவியிடம் வேண்டி இந்துக்கள் இப் புனித நவராத்திரி விழாவை விரதம் அனுஷ்டித்து கொண்டாடுகின்றனர். ஒரு மனிதனிற்கு உடல்வலிமை, பராக்கிரம், மனோதிடம், புத்திபலம், தீர்க்காயுள், ஞானம, தேவைகளிற்கு பணம் போன்ற அனைத்து அம்சமும் நிறைந்திருந்தால் தான் அவன் சிறந்த வெற்றியாளனாக திகழ முடியும்.

இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி ஆகிய, முக்குணங்களுக்கும் மூலமான சர்வ லோக நாயகியாகிய அம்பிகையை ஒன்பது நாள்களும் பூஜிக்கும்போது, முதல் மூன்று நாள்கள் **ஸ்ரீதுர்கா பரமேஸ்வரியாக** வெற்றியையும் (வீரத்தையும், தைரியத்தையும் ஒருநாளும் தளர்வு அறியா மனம்) வேண்டியும், அடுத்த மூன்று நாள்கள் **ஸ்ரீ மகாலட்சுமியாக** சகல செல்வங்களையும் (தனம்) வேண்டியும், கடைசி மூன்று நாள்கள் **ஸ்ரீ சரஸ்வதிதேவியாக** கல்வி, அறிவு, சகல கலை ஞானங்கள் (ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்) என்பவற்றை வேண்டியும் வணங்குகின்றோம்.. ஒன்பது நாட்களும் வண்ணக் கோலங்கள் போட வேண்டும். இந்த ஒன்பது நாளும் அம்பாள் ஒன்பது வகையான கோலத்துடன் காட்சியளிக்கிறாள் என்பது ஐதிகம்.

கொலுவைத்து ஒன்பது நாள் பூஜை செய்து வீட்டுக்கு வரும் அனைவருக்கும் தாம்பூலம், தட்சணை, நைவேதியப் பொருள் கொடுக்க வேண்டும். ஒன்பது நாளும்

பூஜை செய்ய இயலாதவர்கள் கடைசி மூன்று நாட்களான சப்தமி, அஷ்டமி, நவமி தினங்களில் பூஜை செய்யலாம். இதுவும் செய்ய முடியாதவர்கள் அஷ்டமி நவமியில் பூஜை செய்து விஜய தசமியில் முடிக்கலாம். . புதிய தொழில் தொடங்க உகந்த நாள் விஜயதசமி நன்னாளாகும். அன்றைய தினம் பாடசாலைகளில் பாலகர்களுக்கு வித்யாரம்பம் செய்து வைக்கப்பெறும். விஜய தசமி தினம் என்பது அம்பிகை; தவ வலிமையினால் பிரமதேவனிடம் பெற்ற வரத்தினால் அகங்காரம் கொண்டு தேவர்களையும், முனிவர்களையும் சித்திரவதை செய்து கொடுமைப்படுத்தி வந்த மகிஷாசுரனை "சண்டிகா தேவியாக" (துர்க்கா தேவி, காளிதேவி எனக் கூறுவாரும் உளர்) அவதாரம் எடுத்து சங்காரம் செய்த வெற்றித் திருநாளாக கொண்டாடப்பெறுகின்றது. துன்பத்தை - அசுரர்களை துர்க்கையானவள் வீழ்த்தி வெற்றிபெறும் நாளே விஜயதசமி (விஜயம்-வெற்றி+தசம்- 10) என்று அழைக்கப்படுகிறது.

வேறு விதமாக கூறுவதாயின் அம்பிகை உயிர்களிடத்தே காணப்படும் அசுரத்தன்மைகளை அழிக்க சண்டிகாதேவியாக, துர்க்காதேவியாக அல்லது காளி தேவியாகத் தோன்றி அவற்றை சங்காரம் செய்கின்றாள் எனலாம். இவ் வெற்றித் திருநாள் சைவ பெருமக்ககளால் ஆலயங்களில் "**மானம்பூ விழா**" அல்லது "**கன்னிவாழை வெட்டு**" விழாவாக கொண்டாடப் பெற்றுவருகின்றது. வன்னி மரக் கிளைகள் குத்தப் பெற்ற கன்னிவாழையை மகிஷாசுரன் ஆக ஆவாகணம் செய்து அதனை வெட்டி விழுத்துவதன் மூலம் மகிஷாசுரனைச் சங்கரித்தல் நிகழ்வு நடைபெற்று அதன் வெற்றியை வெற்றித் திருநாளாக கொண்டாடுதலே கன்னிவாழை வெட்டுவிழாவாகும்.

தங்கள் வீடுகளில் கல்வி, செல்வம், வீரம் தழைக்க வேண்டியும், கணவன் உள்ளிட்ட குடும்பத்தில் உள்ள அனைவரின் நலம் போற்றியும் கொலு வைக்கும் பெண்கள், மற்றவர்களுக்கு தாம்பூலம், பிரசாதங்களை வழங்குகிறார்கள். நவராத்திரி விரதமிருப்போர் வீடுகளுக்குச் சென்று தாம்பூலம் வாங்குவோரின் இல்லங்களிலும் தேவி குடிகொண்டிருப்பாள் என்பது ஐதீகம் என்பதால், ஒருவருகொருவர் உறவினர், நண்பர்களின் வீடுகளுக்கு பரஸ்பரம் சென்று பூஜைகளில் பங்கேற்று தாம்பூலம் பெற்று வருவதே இவ் விரதத்தின் சிறப்பம்சமாகும்.

நவராத்திரியின் சிறப்பு அம்சம் கொலு வைப்பதேயாகும். கொலு என்பது பல படிகளை கொண்ட மேடையில் பலவித பொம்மைகளை நேர்த்தியாக அலங்கரித்து வைப்பதேயாகும்.

ஐம்பூதங்களில் ஒன்றான மண்ணினால் செய்யப்பட்ட பொம்மைகளை சக்தியின் அம்சங்களாக எண்ணி நவராத்திரியில் பூசிப்பவர்களிற்கு சகல நலங்களும் கிடைக்கும் என்பது சைவமக்களின் நம்பிக்கை.

**இனி நவராத்திரி கொலு எப்படி அமைக்கவேண்டும் என்று பார்ப்போம். கொலுமேடை 9 படிகள் கொண்டதாக இருக்கவேண்டும்.**

1. முதலாம் படியில் ஓரறிவு உயிர்களான புல், செடி, கொடி போன்ற தாவர வர்கங்களின் பொம்மைகளும்;

2. இரண்டாம் படி:-ஈரறிவு கொண்ட நத்தை, சங்கு போன்ற பொம்மைகள்.

3. மூன்றாம் படி :-மூன்றறிவு உயிர்களான கறையான், எறும்பு போன்றவற்றின் பொம்மைகள்.

4. நாலாம்படி :-நான்கறிவு உயிர்களை விளக்கும் நண்டு,வண்டு போன்றவற்றின் பொம்மைகள்.

5. ஐந்தாம்படி :-ஐந்தறிவு உள்ள மிருகங்கள், பறவைகள் ஆகியவற்றின் பொம்மைகள

6. ஆறாம்படி :-ஆறறிவு மனிதர்கள் பொம்மைகள்.

7. ஏழாம்படி :-மனித நிலையிலிருந்து உயர் நிலையை அடைந்த சித்தர்கள், ரிசிகள், மகரிசிகள் (ரமணர், வள்ளலார்) போன்றோரின் பொம்மைகள்.

8. எட்டாம்படி :-தேவர்கள், அட்டதிக்பாலர்கள், நவக்கிரக அதிபதிகள் போன்ற தெய்வங்கள் தேவதைகள் போன்றோரின் பொம்மைகள்.

9. ஒன்பதாம்படி :-பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர் அவர்களின் தேவியருடன் நடுநாயகமாக ஆதிசக்தி வைக்கவேண்டும்.

மனிதன் படிப்படியாக உயர்ந்து தெய்வ நிலையை அடைய வேண்டும் என்பதற்காகவே இப்படி கொலு அமைப்பது வழக்கம்.

நவராத்திரி வழிபாட்டு முறை.

1. முதலாம் நாள்:- சக்தித்தாயை முதல்நாளில் சாமுண்டியாக கருதி வழிபடவேண்டும். தெத்துப்பல் திருவாயும், முண்டமாலையும் அணிந்தவள். முண்டன் என்ற அசுரனை சம்ஹாரம் செய்த சக்தி அவள். இதனால் சாமுண்டா எனவும் அழைப்பர். இவள் மிகவும் கோபக்காரி. நீதியைக்காக்கவே இவள் கோபமாக உள்ளாள்.முதல்நாள் நெய்வேத்தியம் :-சர்க்கரைப் பொங்கல்.

2. இரண்டாம் நாள்:- இரண்டாம் நாளில் அன்னையை வராஹி தேவியாக கருதி வழிபட வேண்டும். வராஹ(பன்றி) முகமும் தெத்துபற்களும் உடையவள். சூலமும் உலக்கையும் ஆயுதங்கள் ஆகும். பெரிய சக்கரத்தை தாங்கியிருப்பவள். தனது தெத்து பற்களால் பூமியை தூக்கியிருப்பவள். இவளிற்கு மங்கள மய நாராயணி, தண்டினி, பகளாமுகி போன்ற திருநாமங்களும் உண்டு. இவள் அன்னையின் சேனாதிபதி ஆவாள். இரண்டாம் நாள் நெய்வேத்தியம் :- தயிர்ச்சாதம்.

3. மூன்றாம் நாள்:- மூன்றாம் நாளில் சக்தித்தாயை இந்திராணியாக வழிபடவேண்டும். இவளை மாஹேந்தரி, சாம்ராஜ தாயினி என்றும் அழைப்பர். இவள் இந்திரனின் சக்தி ஆவாள். கிரீடம் தரித்து வஜ்ராயுதம் ஏந்தியவள். ஆயிரம் கண்ணுடையவள். யானை வாகனம் கொண்டவள். விருத்திராசுரனை அழித்தவள். தேவலோகத்தை பரிபாலனம்

செயபவளும் இவளேயாகும். பெரிய பெரிய பதவிகளை அடையவிரும்புபவர்களிற்கு இவளின் அருட்பார்வை வேண்டும்.மூன்றாம் நாள் நெய்வேத்தியம்:- வெண்பொங்கல்.

4. நான்காம் நாள்:- சக்தித்தாயை அன்று வைஷ்ணவி தேவியாக வழிபடவேண்டும். சங்கு, சக்கரம், கதை, வில் ஆகியவற்றை கொண்டிருப்பவள். தீயவற்றை சம்ஹரிப்பவள். இவளின் வாகனம் கருடன். நான்காம் நாள் நெய்வேத்தியம்:- எலுமிச்சை சாதம்.

5. ஐந்தாம் நாள்:- ஐந்தாம் நாளில் அன்னையை மகேஸ்வரி தேவியாக வழிபட வேண்டும். அன்னை மகேஸ்வரனின் சக்தியாவாள். திரிசூலம், பிறைச்சந்திரன், பாம்பு தரித்து இடப வாகனத்தில் எழுந்தருளியிருப்பவள். அளக்கமுடியாத பெரும் சரீரம் உடையவள். சர்வ மங்களம் தருபவள். தர்மத்தின் திருவுருவம். கடின உழைப்பாளிகள் உழைப்பின் முழுப்பலனை பெற அன்னையின் அருள் அவசியம் வேண்டும்.ஐந்தாம் நாள் நெய்வேத்தியம்:- புளியோதரை.

6. ஆறாம் நாள்:- அன்று அன்னையை கவுமாரி தேவியாக வழிபடவேண்டும். மயில் வாகனமும் சேவல் கொடியும் உடையவள். தேவசேனாதிபதியான முருகனின் வீரத்திற்கு ஆதாரமானவள். ஓங்கார சொரூபமானவள். சகல பாவங்களையும் விலக்கிடுபவள். வீரத்தை தருபவள்.ஆறாம் நாள் நெய்வேத்தியம்:- தேங்காய்ச்சாதம்.

7. ஏழாம் நாள்:- ஏழாம்நாள் அன்னையை மகாலட்சுமியாக வழிபடவேண்டும். கையில் ஜெபமாலை, கோடரி, கதை, அம்பு வில், கத்தி, கேடயம், சூலம், பாசம், தண்டாயுதம், சக்தி ஆயுதம், வஜ்ராயுதம், சங்கு, சக்கரம், மணி, மதுக்கலயம், தாமரை, கமண்டலம் ஆகியவற்றைக் கொண்டிருப்பவள். வி~;ணு பத்தினியாவாள். பவளம் போன்ற சிவந்த நிறத்தையுடையவள். தாமரை ஆசனத்தில் அமர்ந்து சகல ஐஸ்வரியங்களையும் தருபவள் அன்னையாகும்.ஏழாம் நாள் நெய்வேத்தியம்:- கல்க்கண்டுச் சாதம்.

8. எட்டாம் நாள்:- அன்று அன்னையை நரசிம்ஹி ஆக வழிபடவேண்டும். மனித உடலும், சிம்ம தலையும் உடையவள். கூரிய நகங்களுடன் சங்கு, சக்கர தாரிணியாக சிம்ம வாகனத்தில் காட்சி தருபவள். சத்ருக்கள் தொல்லையில் இருந்து விடுபட அன்னையின் அருள்வேண்டும்.எட்டாம் நாள் நெய்வேத்தியம்:- சர்க்கரைப் பொங்கல்.

9. ஒன்பதாம் நாள்:- அன்று அன்னையை ப்ராஹ்மி ஆக வழிபடவேண்டும். அன்ன வாகனத்தில் இருப்பவள். வாக்கிற்குஅதிபதியாவாள். ஞானசொரூபமானவள். கல்விச்செல்வம் பெற அன்னையின் அருள் அவசியமாகும். ஒன்பதாம் நாள் நெய்வேத்தியம்:- , சுண்டல்

இப்படி நாம் அனைவரும் மகிழ்வாக நவராத்திரிப் பண்டிகை கொண்டாடுவதற்கு பின்னணியில் ஒரு புராணக்கதை உள்ளது. அசுரர்களை அழிக்க அம்பிகை அவதரித்ததும், தேவர்கள் அனைவரும் தங்களுடைய ஆயுதங்களைத் தேவியிடம் ஒப்படைத்துவிட்டனர். அம்பாளான பராசக்தி அசுரர்களுடன் சண்டையிட்ட பொழுது தேவர்கள் பொம்மை மாதிரி நின்று கொண்டிருந்ததைக் காட்டத்தான் பொம்மை கொலு வைப்பதாக ஐதிகம்.

அழகு, அன்பு, ஆற்றல், அருள், அறிவு ஆகியவற்றைப் பெண் வடிவமாகக் கருதுவது நமது மரபு. கல்லையும் பெண்ணுருவாக்கி வழிபடுவது நமது கலாசாரம். இவை இப்படி இருக்க பெண் என்றால் பலவீனம் என்று நினைத்து சுய அழிவைத் தேடிக் கொண்ட மகிஷாசுரனின் கதை தான் நவராத்திரி விழாவின் தொடக்கம்.

மகிஷாசுரன் என்ற அசுரனுக்கு தேவர்களை அடிமை படுத்தும் விபரீத ஆசை ஏற்பட்டது. படைக்கும் கடவுளான பிரம்மாவை நோக்கி கடுந்தவம் செய்தான் மகிஷன். பிரம்மன், மனம் நெகிழ்ந்து அருள் பாலிக்க அசுரன் முன் தோன்றினார். சாகாவரம் வேண்டும் என்று அசுரன் கேட்டதும் "படைக்கும் தொழிலில் அது சாத்தியமல்ல; பிறப்பவன் இறப்பதும், இறப்பவன் பிறப்பதும்தான் காலச் சக்கரத்தின் சுழற்சி. கேட்கும் வரத்தை மாற்றிக்கொள்" என்று பிரம்மா கூற. அறிவிலி அசுரன் கர்வத்தால் தீர யோசிக்க மறந்தான்.

"தேவர்களை வென்றுவிட்டால் எல்லோரும் தனக்கு அடிமையாகி விடுவார்கள்" என்ற மமதையில் தனது சாவு ஒரு பெண்ணால்தான் ஏற்பட வேண்டும் என்று வேண்டினான். பெண் என்றால் பலவீனத்தின் சின்னம் என நினைத்த மகிஷன் சக்தியின் மகிமையை அறிய வில்லை. வரம் கிடைத்தவுடன் மகிஷனின் அட்டகாசம் மூவுலகிலும் இடியென முழங்கியது. அராஜகம் தலை தூக்கியது. தர்மம் அழிந்தது. மக்கள் அவல நிலைக்கு ஆளாகி துன்புற்றனர். ஈசனை வேண்டினர். தனது நெற்றிக் கண்ணைத் திறந்து அதிலிருந்து வெளிப்பட்ட நெருப்புப் பொறியிலிருந்து சர்வ சக்தியாம் துர்க்கையைத் தோற்றுவித்தார் பரமேஸ்வரன்.

சிம்ம வாகனத்தில் ஆயிரம் ஆயுதங்களை ஏந்தி சாமுண்டியாகப் புறப்பட்டாள் ஆதிசக்தி. ஒன்பது நாட்கள் அசுரனுடன் போரிட்டு பத்தாம் நாளில் எருமை வடிவிலிருந்த மகிஷனை துவம்சம் செய்தாள் பராசக்தி. அதர்மம் அழிந்ததைக் கண்டதேவர்கள் தேவிக்கு மலர் மாரி பொழிந்தனர். எல்லோருடைய பயங்களையும் போக்கி அபயம் தந்து அசுரர்களை அழித்து ஜெயத்தை அடைந்த அம்பிகை அவதரித்தது இந்த நவராத்திரி ஆரம்ப நாளில்தான். சக்தியாக தோன்றிய அம்பாள் அசுரர்களை அழித்துவிட்டு சிவனுடன் ஐக்கியமாகி சிவசக்தி சொரூபிணியாகக் காட்சி அளித்தது விஜயதசமி அன்றுதான்.

**மலைமகள், அலைமகள், கலைமகள் ஆகிய தேவியரே நவராத்திரி நாயகியர் ஆவர். இத் தேவியரை நவராத்திரி காலத்தில் மனமாரத் தியானித்து நாவாரப்பாடி, உளமாரப் போற்றி வழிபட்டு முறையே வீரத்தையும், செல்வத்தையும், கல்வியையும் பெற்று உய்வோமாக.**

சிவகதி வேண்டி சிவராத்திரி விரதம்
செல்வச் சிறப்போடு வாழ நவராத்திரி விரதம்

**திருமதி ப. சிவபதி அம்பாள்**

# THE POWER OF CHANTING VISHNU SAHASRANAMAM

*By: Anitha K Chinnaswamy*



Stotras are devotional hymns of Hinduism sung in praise of God. Stotra is derived from Sthuthi which means praise. Of these the greatest is possibly the Vishnu Sahasranamam found in the Anushasanika Parvam (chapter relating to orders or rules to the kings) in Mahabharatha. The Vishnu Sahasranamam is a stotra containing the 1000 names of Lord Vishnu, also called as Vishnu Sahasranamavali.

Legend has it that at the end of the epic Mahabharata war, Bhishmacharya was awaiting the sacred hour to depart from his physical body unto the lotus feet of the Lord. Yudhishtira, the eldest of the Pandavas, was desperately looking for answers to matters relating to Dharma and Karma. Lord Sri Krishna, who understood Yudhishtira's uneasy mind, guided him to Bhishma to learn insight into this precious knowledge. At their meeting, Yudhishtira presented Bhishma with these questions:

***KimEkam dhaivatam lokE?***
Who is the greatest Lord in the world?
***Kim vaapyEkam parAyaNam?***
Who is the one refuge of all?
***Stuvantam kam kamarcanat prApnuyuh mAnavaah subham?***
By glorifying whom, can man attain peace and prosperity? By worshipping whom can man reach auspiciousness?
***KO dharmah sarva dharmANaam bhavatah paramO matah?***
What is, in thy opinion, the greatest Dharma?
***Kim japam mucyatE jantur janma samsAra bandhanAth?***
By doing Japa of what, can creature go beyond the bonds and cycle of birth and death?

Bhishma responded that the praise of Lord Vishnu by reciting the one thousand names now hailed as the Vishnu Sahasranamam is the answer, and reminded him that either by meditating these names or by invoking the names through archana (offering), the minds of the one who chants can be lifted to higher consciousness.

Vishnu Sahasranamam consists of 142 slokas – the introductory 13 slokas, main body constituting of 107 slokas and concluding 22 slokas.

The first 13 slokas begins with salutations to Sage Vyasa and salutations to the superior diety Lord Vishnu. It then includes the questions by Yudhistra and Bhishma's response that the recitation of the thousand names of The Lord is the key. They also comprise the Dhyanam-slokas for meditation before the beginning of the recital of the thousand names of the Lord.

The following 107 stanzas form the main body of the Vishnu Sahasranamam that contain the one thousand names of Sri Maha Vishnu. Every one of the one thousand names is full of significance and refers to one particular guna (quality, characteristic, or attribute) of Paramatma and invoke a sense of bonding with the Lord. The meanings of the names are believed to give an understanding and depth of God. Every Name of Sri Vishnu has a meaning to it; the phonetic vibrations by chanting each Name known as "Nama" and the chain of names known as "Namavali" produces excellent results from vibrations that are very essential for knowledge and wisdom. The phonetic sound vibrations create harmony and favour the one who hears it, as established by many eminent scholars. For attainment of spiritual liberation, one must involve himself/herself to the glories of the Lord Sri Maha Vishnu, by reciting the entire slokas.

The last 22 stanzas are the concluding verses that imply the importance of chanting the thousand names and the innumerable benefits that are attained by simply chanting the 1000 names of the Lord.

Upon reciting the one thousand names of the Lord it is believed that:
***Ya edaM shrunyaa-Nityam yashchapi parikirtayaet |***

***Naa-aShubham praptyunaat kinCHIT-somutreH cha manavaH ||***

The one who hears or recites this without fail, in all days of the year will never have anything inauspicious befall them, wherever it may be, whether in this world or the worlds beyond.

The recitation of the Vishnu Sahasranamam helps the one who chants it attain anything they seek:

***Dharmarthi Prapnuyad Dharmam, Artharthi Cha Arthamapnuyad |***

***Kamanvapnuyad Kami, PrajarthiChapnuyad Prajam ||***

The one who seeks Dharma, or seeks wealth, or pleasures or seeks children, will all without fail, get what they want.

***Na bhayaM kvachidaapnoti viiryaM tejashcha vindati |***

***Bhavatyarogo dyutimaan-bala-ruupa-guNaanvitaH ||***

Free from fear (through any source) and sickness (at any time), the one who chants acquires valour, power and strength and is endowed with a healthy body, noble traits and dazzling brilliance.

***Rogaarto muchyate rogaa-dbaddho muchyeta bandhanaat |***

***Bhayaan.muchyeta bhiitastu muchyetaapanna aapadaH ||***

The one afflicted by sickness will get rid of it, the one, in shackles of sorts will get disentangled while the one stricken by fear, will become free from it and the one beset with difficulties, will get absolved of them (whatever be their magnitude).

***DurgaaNyatit aratyaashu purushhaH purushhottamam|***

***Stuvan naama sahasreNa nityaM bhakti samanvitaH ||***

The person who chants these holy thousand names with devotion to the supreme being Purusottama will cross the miseries of life without fail.

***Emam stava madhee-yanah shraddha-bhakti sama-nvitah|***

***Yujye tatam sukha-kshantih shree-dhrati smruti keertibhih||***

One who reads this hymn every day with devotion and attention attains peace of mind, patience, prosperity, mental stability, memory and reputation.

***Na krodho na matsaryam na lobho na shubha-matih|***

***Bhavanti kruta punyanam bhakta-nam puru-shottame||***

Such a person is not caught by anger, binding, jealousy, or any inauspicious event. Such a bhakta becomes a "punyatma" and merges with the Purshottama (i.e. Supreme Being).

Thus the praise of Lord Vishnu by chanting the Vishnu Sahasranamam has numerous benefits.

To conclude Sri Bhagwan says, that he would take care of those who think and serve HIM. Maha Vishnu will never let his devotees be defeated, harmed or hurt. Praying with sincerity and reciting the Lord's names will only result in God's care for the one who chants. Whether they are worried, sad, broken, severely ill or tormented by other maladies, chanting Narayana's name will help not only get rid of all these troubles but also attain everlasting happiness.

Prayers are a means to mental cleansing, in Bhishma's expert judgment, chanting Vasudeva's name with devotion and sincerity will ensure relief from sorrows and bondage. One might feel that they do not know the correct Sanskrit pronunciation, and do not want to chant incorrectly. It is the bhaava (spirit) that matters, and so as long as one chants the name of God with sincerity, considerations such as not knowing the meaning, not knowing the pronunciation, etc, do not matter, and God will confer His blessings as there is no way a devotee of Vishnu can meet with any dishonour or disgrace of any kind.

The person who recites the Vishnu Sahasranamam is not the only one who benefits; those who for whatever reason are unable to chant also benefit by just hearing the chanting. It is also believed that the collective recital of the Vishnu Sahasranamam produces positive vibrations and has very high power consequently favouring the prosperity of the people and the surroundings where it is chanted.

This article only provides a small introduction to the power and benefits of chanting Vishnu Sahasranamam. The wonderful and complete meaning of the Vishnu Sahasranamam is available in greater detail in many works both in books and on the internet by great scholars.

***Source: Various sources from the Internet***

***NOTE: Devotees meet at Coventry Shri Sidhi Vinayagar Devasthanam to chant Vishnu Sahasranamam every Saturday at 6:30pm, all are welcome.***

# *Swami Saranam Ayyappa*

### *By Kumar Chinnaswamy*



***Shree Dharma Sastha Temple:***

***Lord Ayyappa** is the presiding deity of Sabarimala Shree Dharma Sastha Temple. It is the most famous and prominent among all the Sastha temples in the world. The temple is situated on a hilltop on the slope of the Sahyadris (Western Ghats) surrounded by 18 hills and about 4135 feet above sea level in Pathanamthitta district in Kerala, India which is unique in many respects. The uniqueness gathers its voice, as the temple is open to all, irrespective of caste, creed or religion. True to the Hindu philosophy of 'Thathvamasi' (that thou art), at Sabarimala, Lord and his devotee commune directly.*

*In Sabarimala Lord Ayyappan is a brahmachari in a state of eternal bliss or Samadhi, holding 'Chinmudra'. It is said that the Lord sought this solitary abode to meditate soon after vanquishing the demon, Mahishi in a ferocious battle.*

*Legend has it that the Ayyappan temple at Sabarimala is laid out in accordance with the instructions of the Lord himself. It is believed that the deity of the temple was consecrated by Lord Parasurama the warrior-sage at the foot of Sabari hills for which reference has been made even in Ramayana. Sabarimala is one of the five 'Pancha Shastha' temples erected by the powerful yogi. As Lord Ayyappan was raised by the King of Pandalam as his son, the temple at Sabarimala is looked upon as part of the Raja's domain.*

*The Ayyappa idol within the Sannidhanam was originally carved out of stone, however the current idol of the deity is a beautiful idol of Ayyappan in Panchaloha and about one and a half feet tall. **Kaduthaswamy and Karuppaswamy** stand at the bottom of the Pathinettampadi (18 steps) and are the guardians of the Sannidhanam, they are Dwarapalakas.*

*The significance of the **Pathinettampadi** (holy eighteen steps), according to a popular belief, the first 5 steps signify the five Indriyas or the senses (eyes, ears, nose, tongue and skin), the following 8 the Ragas (Tatwa, Kama, Krodha, Moha, Lobha, Madha, Matsraya, and Ahamkara), the next 3 the Gunas (Satwa, Rajas and Thamas) followed by Vidya and Avidya. It is also widely assumed that the Pathinettu Padikal symbolize the 18 Puranas. The holy eighteen steps that lead to the shrine have been figuratively called Ponnu Pathinettampadi 'Ponnu' being an epithet to denote the holy touch of lord's feet. Each of these eighteen holy steps represents a desire one must conquer in life, it is believed. Climbing these would take the devotee closer to self-realisation.*

*Adjacent to the Pathinettupadi is the shrine of Vavurswami, who is believed to have been a close associate of Lord Ayyappan. Vavur was a Muslim and several versions of his association with Ayyappan persist. Originally a warrior, Vavur was defeated and subdued by Ayyappan; later he became one of the closest confidants of the Lord. It is widely believed that Ayyappan himself instructed Pandala Raja to build a mosque for Vavur at Erumeli and a shrine at Sabarimala.*

*Ayyappa cult gifts much importance for secularism and communal harmony and has turned out to be a model for the whole world. Another significant aspect of the pilgrimage is that all the pilgrims whether rich or poor, literate or illiterate are all equal before Lord Ayyappa and all of them address each other as Ayyappa or Swamy.*

# *Swami Saranam Ayyappa*

**By Kumar Chinnaswamy**

*The most important day for Lord Ayyappan is Makara Sankranti day, which is the 1st of Makara (a month of the Malayalam calendar). This day will fall between January 14 and 16. Another interesting fact is that it is not open throughout the year. The Sannidhanam is open for worship only during the days of Mandala Pooja (Nov to Jan), Makara Vilakku, Vishu and the beginning of every month in the Malayalam calendar.*

***Birth of Lord Ayyappan***

***Lord Ayyappa** had his human incarnation as the son of the King of Pandalam. At that time, the kingdom of Pandalam was under the rule of Raja Rajasekhara. A just and precocious sovereign King Rajashekara was held by his subjects in high esteem. Under him, the region was witnessing a golden age. But the king had one sorrow – he was childless though he was pious, charitable, just, and God-fearing and thus had no heir to inherit his throne. The king and the queen were the ardent devotees of Lord Shiva and Lord Vishnu respectively. They had prayed to their respective deities for blessings in the form of a child.*

*Around the same time, a demon by the name of Mahishasura undertook severe penance (tapas) and consequently Lord Brahma was forced to grant his wish that nobody on earth could annihilate him. Emboldened by Brahma's boon, Mahishasura commenced systematic destruction of people and pulverized tribes and communities. Terrorised and fearing his wrath, people fled to distant lands. Realizing that only a superhuman power could exterminate the wayward Mahishasura, the Devas appealed to Goddess Durga, who killed him in a bloody battle.*

*Determined to avenge her slain brother, Mahishi, the sister of Mahishasura undertook severe penance (tapas) and secured a boon from Lord Brahma that no being except the offspring of Vishnu (Hari) & Shiva (Haran) could slay her. In due course of time, Mahishi went to Devaloka and began harassing the Devas who in turn implored Lord Vishnu to intervene. As the boon was that nobody except the son of Lord Shiva & Lord Vishnu could kill Mahishi, Lord Vishnu assumed the female persona of Mohini who helped Devas prize Amrit away from Asuras; it was decided that the male child born out of the union of Mohini and Lord Shiva would be placed under the care of Lord Shiva's childless devotee, King Rajashekhara of Pandalam.*

*During one of his hunting expeditions, the wails of a child on the banks of the River Pampa puzzled him. As he moved in the direction of the voice he found a resplendent and helpless infant there. Whilst King Rajashekhara beheld the divine child who had a radiant face with a gemstone around his neck, a Sadhu appeared from nowhere and instructed him to take the infant to his palace. Also the mendicant assured him that the child would mitigate his dynasty's sufferings and that when the boy turned twelve, King Rajashekhara would be aware of his divinity. As the child was wearing a gemstone, the Sadhu directed the King to name him '**Manikantan**', hence the name Manikantan ("Mani", means gemstone and "Kantan" means wearer around the neck). Manikantan was born of Hari (Lord Vishnu) and Hara (Lord Shiva), with Hari assuming the form of a female (Mohini). Hence Ayyappan is also named as **Hariharasutan** (Sutan meaning Son). So the King accepted the child as God's gracious gift to his fervent prayer for an heir to his throne.*

*Ecstatic, King Rajashekhara took Manikantan home and narrated the happenings to his Queen. They both felt that they had been blessed by Lord himself. All except the Diwan, who had entertained hopes of becoming king after King Rajashekhara, rejoiced in the royal couple's happiness.*

*Manikantan was given proper education and training and he grew into a boy well*

# *Swami Saranam Ayyappa*

***By Kumar Chinnaswamy***

*versed in academic lore and martial arts. As a child, Manikantan was very intelligent and precocious. He excelled in martial arts and Shastras and surprised his guru with his brilliance and superhuman talents. Peace and prosperity reigned in Pandalam. Eventually, Ayyappan's guru concluded that the boy was no ordinary mortal but a divine being. Upon completing his studies, Manikantan went up to his teacher to offer guru dakshina and seek his blessings in turn. As he approached his spiritual master for Ashirwaadams, the guru explained to Manikantan what he had already surmised about him, that he was a divine power destined for superhuman glory. The guru then beseeched him to bestow vision and speech upon his son who was blind and dumb. Manikantan placed his hands on the guru's son and the boy immediately gained eyesight and speech. Requesting that this miracle be revealed to none, Manikantan returned to the royal quarters.*

*Meanwhile the Queen gave birth to a son; however the king regarded Manikantan as his elder son and decided to crown him as the Yuvaraja. Since the minister of the Raja was against Manikantan becoming the Yuvaraja, for several hidden reasons, he along with his sycophants lured the queen to act against the king's decision to crown Manikantan. On the coronation day of Manikantan as Yuvaraja, the queen pretended to be suffering from unbearable stomach ache, and said that she was unable to get any relief from the treatment of any doctor. Finally came a fake practitioner and prescribed "the milk of a tigress" as the cure of the queen's illness. This drama took place at the instance of the minister. The king appealed to everyone to get the tigeress-milk, but no-one dared, as all feared death. At last, Manikantan came forward and went to the forest in search of tigress milk, despite the king's attempt to stop him as he was deeply frightened that the deemed Yuvaraja may not come back alive.*

*Manikantan entered the forest to fulfill his divine duty, the Panchabuthas of Lord Shiva closely followed Manikantan as he entered the forest. But on the way, he chanced to witness the atrocities of the demoness Mahishi in Devaloka. His sense of justice outraged, Manikantan hurled Mahishi onto the earth below; she fell on the banks of the Azhutha River. A bloody battle soon ensued and at the end, Manikantan mounted Mahishi's chest and commenced a violent dance that reverberated within the earth and the Devaloka. This dance was witnessed by Lord Shiva and Maha Vishnu. Even the Devas were frightened. Mahishi realized that the divine being on her was the son of Hari and Haran, chastened, she prostrated before the young boy and died. Manikantan killed her and released a beautiful woman who had been cursed to become Mahishi. The young woman asked Ayyappan for his hand in marriage, but being a celibate he declined. However he promised that she would be visited by all his pilgrims and would be housed next to his temple, and if ever the number of new pilgrims (Kanni Ayyappan) stopped visiting him then he would marry her. Hence she is now worshiped as Maalikapurathamma.*

*On the death of Mahishi, Indra - the king of the Gods, who was displaced and banished by Mahishi, led several tigers for the disposal of Ayyappan. Manikantan entered the palace precincts riding a fierce tigress and followed by a pack of her cubs. The schemers were frightened and confessed their plot. They were convinced of his divine origins, and prayed to him to be with them for their own salvation and for the safety of the kingdom. Immediately Manikantan disappeared. The king took a decision that he would not eat anything till Manikantan came back. Then Manikantan gave a darshan to the king.*

*Filled with emotions of happiness, grief, fear, wonder and 'Bhakti' (devotion to God) and self-surrender, the king stood*

# *Swami Saranam Ayyappa*
### *By Kumar Chinnaswamy*

*praying for the mercy and blessings of Manikantan. He repented that he could not fully visualize the truth of the divine powers of the Lord and repeatedly requested him to forgive him for behaving as if he were his son only. The Lord lovingly embraced the King who prayed to bless him by freeing from ego and the worldly life of birth and rebirth and granted Moksha (salvation). He told the King that he was destined to return. The king requested Lord Manikantan to allow him to build a temple and dedicate it to him and the Lord assented.*

*Manikantan then enlightened the King on the path of attainment of Moksha. The Lord shot an arrow that fell at the top of Sabarimala and told the King that he could construct a temple at Sabarimala, north of the holy river Pampa and install His deity there. Ayyappan also explained how the Sabarimala pilgrimage shall be undertaken, emphasizing the importance of Penance Vratham and what the devotees can attain by His 'darshan'.*

*The King secured a promise from the Lord that on Thai Pongal on January 14, every year (celebrated as "Makara Jyothi" all his personal jewellery (usually kept at the Palace) will be adorned on his image at Sabarimala. The Lord further consoled the King saying that the devotees who held him and his descendants in 'Bhakti' shall happen to be devoted to Him as well. Manikantan then blessed the King and all others assembled there, and vanished. The King duly constructed the temple at Sabarimala, dedicated to him.*

*On Makara Sankranti every year without fail, miraculous events occur. Firstly as the jewels (Thiruvaabaranam) of the Lord are transported from the Old Pandalam Palace to Sabarimala, a Krishnaparanth (Garuda - an eagle - the vehicle of Lord Vishnu), circles above the precious jewels (in fact guarding them), like a protector. This rare eagle is rarely seen in the midst of people for a long period of time, yet the auspicious bird follows the Thiruvaabaranam procession, finally circling above Sannidhanam at Sabarimala as it pays its respects to Lord Ayyappan. During this time, there is not a single star in the sky except for a special Nakshatram. The beautiful jewels are placed on the golden body of the Lord within the temple, when the jewels are finally all adorned on the Lord, the Nakshatram in the sky miraculously disappears.*



***Sabarimala -Sannidhanam***



***Ponnu Pathinettampadi Padi Pooja at Sabarimala***

**Source:** *Various sources from the Internet*

**சிவநெறியும் இந்து சமயமும் :** சிவலிங்க வழிபாடு உலக முழுவதும் வியாபித்திருந்ததை ஆராய்ச்சியாளர்களும், புதைபொருள் ஆய்வாளர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர். மொஞ்சதரோ, ஹரப்பா பகுதிகளில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சிவன், அம்பாள் சிலைகள் 3250 ஆண்டுகள் பழைமை வாய்ந்தவை எனக் கூறப்படுகிறது. இவ்விடங்களில் அகழ்வாய்வின் போது முத்திரை ஒன்றில் சிந்துவெளி நாகரிக காலத்தைச் சேர்ந்த சிவன், பசுபதி என்பதை உணர்த்தும் உருவத்துடன் சிவலிங்கங்களும் கிடைத்துள்ளன. புதைபொருள் ஆராய்ச்சியாளரான சர்.ஜான் மார்ஷல், சிந்து சமவெளி ஆராய்ச்சி முடிவுகளில் மிக முக்கியமானது சைவத்தின் தொன்மையே. இன்றளவும் வழக்கில் உள்ள சமயங்களுக்குள் மிகப்பழமையானதாக சைவம் விளங்குகிறது என்கிறார்



இன்றளவும் வழக்கில் உள்ள மிகப் பழைமையான சமயமாக அது விளங்குகிறது!" என்கிறார். "வட அமெரிக்காவின் கொலராடோ ஆற்றுப்பள்ளத்தாக்கில் அகழ்வாராய்ச்சி செய்த போதும் சிவலிங்கங்கள் கிடைத்துள்ளன.அங்குள்ள குன்றின் மேல் சிவன் கோயில் ஒன்று இடம் பெற்றிருந்தது.அது சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று அகழ்வாராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்" என்று இலங்கை அறிஞர் ந.சி.கந்தையா,தனது "சிவன்" என்னும் நூலில் ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார்.மேலும் இவர்,ஆப்பிரிக்கா - ஐரோப்பா, மத்தியக் கிழக்கு, துரக் கிழக்கு, தென் கிழக்கு, தென் அமெரிக்கா, மெச்சிகோ, பசிபிக் தீவுகள் போன்ற பகுதிகளிலும் சிவ வழிபாடு இருந்ததைக் குறிப்பிடுகிறார்.

மத்திய தரைக்கடல் பகுதியில் உள்ள "க்ரீட்" தீவின் நரகங்களுள் ஒன்றின் பெயர் "சிவன்". அங்கும் அகழ்வாராய்ச்சியின் போது ஏராளமான சிவலிங்கம் கண்டெடுக்கப்பட்டுள்ளன.சிரியாவின் பழைய நகரங்களில் ஒன்றின் பெயர் "சிவாஸ்" ஹிட்டைட் நாட்டில் கிடைத்த புதைபொருட்களில் ஒன்றான பழங்கால நாணயத்தில், சிங்க வாகனத்தில் வீற்றிருக்கும் ஆணின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன். இது நம் அம்மையப்பனை நினைவூட்டுகிறது. லிபியா பாலைவனத்தில் உள்ள பாலைவனச் சோலை ஒன்றின் பெயர் "சிவன்" இங்கிலாந்து மற்றும் ஸ்காட்லாந்தைச் சார்ந்த புதைபொருள் அகழ்வாராய்ச்சியாளர்கள் பல சிவலிங்கங்களைக் கண்டுபிடித்துள்ளார்கள். ஜெர்மனியிலும் லிங்க வழிபாடு தழைத்திருந்தது. "ஷிண்டேயிசம்" எனும் ஜப்பானிய மத்ததில் லிங்க வழிபாடு முதன்மையானதாகக் கருதப்படுகிறது. ஆகவே, அங்கு பொது இடங்களில் லிங்கங்கள் வைத்து வழிபடப் பெற்றன.இவற்றின் மூலம் சிவநெறியும், இந்து சமயமும் உலகம் முழுவதும் பரவியிருந்ததை நாம் அறியலாம்

க. குமரன்



# தென்கிழக்காசியாவில் இந்து சமயம்

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இந்து சமயம் பல நூற்றாண்டுகளுக்கு முன் பரவியது.

சிவ வழிபாடு மிகவும் தொன்மை வாய்ந்தது என்பது தொல்பொருள் ஆராய்ச்சிகள் வாயிலாக மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய வெளி நாகரீகங்களில் காணலாம். இந்தியா நாட்டிற்கு அப்பாலும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்திருக்கிறது.

தமிழர் தம் பண்பாட்டில் மதம் இயற்கையாக இடம் பெற்றுள்ளது.நாகரித்தின் தொடக்க காலங்களில் மானுடச் சமூகத்தின் வளர்ச்சியில் மதம் ஆற்றல் மிக்க பங்களிப்பை நிகழ்த்தியிருக்கிறது.உண்மையில் தென்கிழக்கு ஆசிய மக்கள் முதலில் இந்து சமயத்தைத்தான் தழுவினர். அதனால்தான் அவர்களின் பழக்கவழக்கங்களிலும் பண்பாடுகளிலும் மொழிகளிலும் இந்து சமயத்தின் தாக்கம் இன்றும் உணரப்பட்டு வருகிறது.

பண்டைய இந்திய வணிகர்கள் தற்போதைய தென்கிழக்கு ஆசியப் பகுதியைச் சொர்ண பூமி என்று அழைத்தனர். பழங்கால சீன வணிகர்களில் பலர் இந்து சமயம் இந்த வட்டாரத்தில் பரவி இருந்ததை வரலாற்று குறிப்புகளாக எழுதி வைத்துள்ளனர். கம்போடியாவிலும் ஜாவாவிலும் இந்து சமயம் செழித்து வளர்ந்திருந்ததை கபாசியன் போன்ற சீன யாத்திரீகர்கள் தங்களது குறிப்புகளில் உறுதிப்படுத்தியுள்ளனர்.

தென்கிழக்காசியாவில் இந்து சமயம் பரவுவதற்குச் சோழர்களும் ஒரு காரணமாக இருந்துள்ளனர். பத்தாம் நூற்றாண்டு வாக்கில் இராஜ ராஜ சோழன் தலைமையிலான படையெடுப்பு துவங்கியது. இராஜ ராஜ சோழனின் புதல்வர் இராஜேந்திர சோழன் மலாயாவை ஆட்சி புரிந்து விஜயா பேரரசைக் கைப்பற்றினான். அவனின் வீரதீர சாகசங்கள் 1030 - 31 ஆண்டுகளில் இட்ட தஞ்சாவூர் கல் வெட்டுகளிலும் திருவாலங்காடு செப்பேடுகளிலும் காணப்படுகின்றன. இதன் காரணமாக அவனுக்குக் "கடாரம் கண்ட சோழன்" என்ற பெயரும் வழங்கத் தொடங்கியது. மலாயாவில் ஸ்ரீவிஜயா மலாயா மன்னர்களை வீழ்த்தி அண்டை தீவுகளில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டியது. ஸ்ரீவிஜயா ஆட்சியின் தாக்கத்தை மலாய் மொழியிலும்,கலாசாரத்திலும் காண முடியும். மலேசியாவின் கெடா மாநிலத்தில் தோண்டி எடுக்கப்பட்ட பழங்கால சிவன் கோவில்கள் அதற்குக் கட்டியம் கூறுகின்றன. சிங்கப்பூரின் அண்டை நாடுகளுடன் பழங்காலந்தொட்டே இந்துக் கலாச்சாரத் தொடர்புகளைக் கொண்டிருந்தன. கி.பி.நான்காவது நூற்றாண்டு முதல் இந்து சாம்ராஜ்யமாக ஜாவா, சுமத்ரா, போர்னியோ, சிங்கப்பூர்,மலாயா, ஆகியவை

இருந்ததாகச் சீன நாட்டுப் பயணி இட்சிங் எழுதியுள்ள குறிப்புகளிலிருந்து தெரிய வருகிறது.

சிங்கப்பூருக்கு 14 வது நூற்றாண்டில் வந்த சீன வர்த்தகர் வாங் தா யுவான், சிங்கப்பூரின் துறைமுகத்தையும் வணிகம் பற்றியும் எழுதியிருப்பதுடன், இந்து கோயில் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். தாய்லாந்து, பர்மா, கம்போடியா, இந்தோனேசியா, மலேசியா ஆகிய நாடுகளில் உள்ள கோவில்கள் தமிழர்களின் சமய, கலாச்சாரத் தொன்மைச் சிறப்புகளுக்கு எடுத்துக் காட்டாக உள்ளன. இந்து சமயத்தின் வளர்ச்சிக்குச் சைவமும், வைணவமும் சேர்ந்தே பங்காற்றியுள்ளன.

சர் ஸ்டாம் போர்ட் ராபிள்ஸ் நவீன சிங்கப்பூரைத் தோற்றுவிப்பதற்கு முன்னரே இந்துக் கோயில்கள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன.இன்று குடியரசில் சுமார் நாற்பது இந்துக் கோயில்கள் அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்டுள்ளன. சுமார் 25 ஆலயங்கள் செயல்பாடுகளில் இருக்கின்றன. பூஜைகளும்,வழிபாடுகளும் முறைபடி நடந்தேறி வருகின்றன. இவற்றுள் நூற்றாண்டுப் பழைமை வாய்ந்த ஆலயங்களும் உள்ளன. வளர்ந்து வரும் நாட்டின் விரிவுப் பணிகளுக்கு வழிவிட்டு ஆலயங்கள் புதுப்பொலிவு பெற்று திகழ்கிறது.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஆன்றோர் வாக்கு. அதற்கு இணங்க சிங்கப்பூர்த் தீவில் தமிழர்கள் அடி எடுத்து வைத்த காலம் முதலே ஆலயங்களையும் எழுப்பிவிட்டனர். பிற வல்லரசுகள் தங்கள் வலிமையான கடற்படையுடன் வணிகத் தொடர்புகளை அதிகரித்தன. ஆனால் தமிழர்கள் தென் திசை நாடுகளில் தங்கள் கலை, பண்பாட்டுத் தொடர்புகளையே கொண்டிருந்தனர். அந்தச் சின்னங்கள் இன்றும் நிலைத்து நம் தொன்மையான கலாச்சாரச் சிறப்பை வெளிப்படுத்திக் கொண்டு இருக்கின்றன.

இந்து சமயத்தின் வளர்ச்சிக்குச் சைவமும் வைணவமும் சேர்ந்தே பங்காற்றியுள்ளன. இந்துக்கள் தங்கள் சமயத்தை எப்போதுமே பலவந்தமாகப் பரப்பியதில்லை. தென்கிழக்காசியா வட்டாரத்திற்கு இந்து சமயம் அமைதியான முறையிலேயே பிரவேசமானது.வர்த்தகர்கள், பயணிகள்,கல்விமான்கள்,சமய போதர்கள் போன்றோர் இவ்வாட்டாரத்துக்கு மேற்கொண்ட பயணங்களின் விளைவாக இந்து சிந்தனைகள் இங்கு பரவின. முதலாம் நூற்றாண்டில் இவ்வட்டாரத்தில் செயல்பட்ட இந்தியக் குடியேற்றங்கள் அதற்கு உறுதுணையாக விளங்கின.

வியட்நாமில் இந்து ராஜ்ஜியமான சம்பா கி.பி.159 ஆம் ஆண்டுக்கும் 200-க்கும் இடையில் தோற்றுவிக்கப் பட்டது.சம்பா மன்னன் ஸ்ரீ பத்ரவர்மா இரண்டாம் நூற்றாண்டில் மைசோன் எனும் இடத்தில்,பெரும் இந்துக்கோயிலை எழுப்பியதற்கான வரலாற்று ஆதாரங்கள் உள்ளன.சம்பா அரசில் சமஸ்கிருதம் அதிகாரத்துவ மொழியாகவும் இருந்தது. தென்கிழக்காசியாவில் வியட்நாமில் செயல்பட்டு வந்த

சம்பா பேரரசு, சுமத்ராவில் செயல் பட்டு வந்த விஜயா பேரரசு, ஜாவாவிலும் பாலியிலும் செயல்பட்டு வந்த சிங்கசாரி, மஜபாஹிட் அரசுகள், பிலிப்பீன்ஸ்சை சேர்ந்த சில தீவுகள் ஆகியவற்றில் இந்து சமயம் தழைத்து ஓங்கியிருந்தது.

காம்போஜம் என்று இந்தியர்களால் அழைக்கப்பட்ட் கம்போடியா தென்கிழக்காசியாவிலேயே ஆக அதிக இந்து தாக்கமுள்ள நாடு. அங்கு வைணமும் சைவமும் கை கோர்த்து தழைத்தன.சிவபெருமானை வணங்கியது போலவே விஷ்ணுவையும் கம்போடிய மன்னர்கள் வழிபட்டனர்.

கம்போடியாவில் கி.பி.1122-ஆம் முதலாம் நூற்றாண்டில் அமைந்த சிவன் கோயில் அங்கோர் வாட்டில் (Angkor Vat) இன்றும் இருக்கிறது. உலக நினைவுச் சின்னமாகப் போற்றப்படும் அங்கோர் வாட்டில் இரண்டாவது மன்னன் சூர்ய வர்மன் அந்தக் கோயிலைக் கட்டினான். வைணவத்துடன் இந்த வட்டாரத்தில் சைவ சமயம் கைகோர்த்து வளர்ந்தது என்பது வரலாற்று வல்லுநர்களின் கருத்து. இவ்வட்டாரத்தில் காணப்படும் சிதைந்த நகரங்களும், கோயில்களும் இதர சமயச் சின்னங்களுமே இதற்குச் சான்று. உலகப் பாரம்பரியச் சின்னங்களாக (World Hertiage Monuments) ஐக்கிய நாட்டுச் சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

பர்மியர்களிடையே விஷ்ணு வழிபாடு பரவலாகக் காணப்படுகிறது. பல கல்வெட்டுகளில் அதற்கான ஆதாரங்கள் உள்ளன. பர்மாவின் பழங்கால தலைநகரமான புரோம் வைணவ வழிபாட்டின் மையமாகத் திகழ்கிறது. புரோம் நகருக்கு "புகநாம்யோம்" என்ற பர்மியப் பெயரும் உண்டு. இதற்கு பொருள் "விஷ்ணுபுரம்" என்றாகும்.

இன்றும் கூட தாய்லாந்து மன்னர்கள் ராமா என்ற அரச பரம்பரைப் பெயரைக் கொண்டுள்ளனர். இராமாயணக் கதை அரச மாளிகையின் சுவர்களை அலங்கரிக்கின்றன. தசரா போன்ற இந்து விழாக்கள் இன்றும் அங்கு அனுசரிக்கப்படுகின்றன.தாய்லாந்து மக்கள் மகா விஷ்ணுவை "பிரா நாராயண்" என்ற பெயரில் வழிபடுகின்றனர். சயாமிய இலக்கியங்களில் இராமாயணத்துக்கும் மகாபாரத்துக்கும் பெரும் பங்கு உள்ளது. இன்றும் கூட தாய்லாந்து மன்னருக்கு முடிசூட்டும் போது திவ்ய பிரபந்தம் போன்ற இந்து மந்திரங்கள் ஓதப்படுகின்றன.

ஜாவாவில் இரண்டாம் நூற்றாண்டிலிருந்து இந்தியர்கள் குடியேறினர். வைணவ சமயத்தின் தாக்கத்தை ஜாவா தீவின் மத்திய பகுதியில் அதிகம் பார்க்க முடிகிறது. போரோப்தூருக்குச் செல்வோர் அருகிலுள்ள சண்டி பாயோன் கோயிலில் பல அழகிய இந்து விக்கிரங்களைக் காண முடியும். ஜாவாவின் ஆகப் பெரிய இந்து கோயில் பெரம்பனான். பத்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இதில் இராமாயணத்தைச் சித்தரிக்கும் பல சிற்பங்கள் உள்ளன. சுமத்ராவின் ஆகப் பழைமையான சாம்ராஜ்யம் ஸ்ரீ விஜயா. நான்காவது நூற்றாண்டு வாக்கில் அது தோற்றுவிக்கப்பட்டது.

மத்திய ஜாவாவில் பெரம்பனான் என்ற இடத்தில் மூன்று பிரகாரங்களுடன் அமைத்த மிகப்பெரிய சிவன் கோவில் ஒன்று இன்றும் உள்ளது.இது கி.பி. 929-ல் கட்டப்பட்டது.இக்கோயிலை இந்தோனீசியர்கள் "சிவ திஜாண்டி" என்று குறிப்பிடுகின்றனர். ஜோக் ஜகார்த்தாவில் (கி.பி. 775 - 782) அமைந்துள்ள போராப்புதூர் ஆலயம் பல சதுர மைல் கொண்டது. விஷ்ணு ஆலயத்தில் சிவன், திருமால், அம்பாள், விநாயகர் சிலைகள் உள்ளன. இங்கு பிரம்மா, சிவன், விஷ்ணு என மும்மூர்த்தி வணங்கப்படுகின்றர். துர்க்கா தேவிக்குத் தனிக்கோவில் இருக்கின்றது.

பாலித் தீவு இன்றும் இந்து ராஜ்யமாகவே இருந்து வருகிறது.

சீனாவிலும் இந்து சமயத்தின் தாக்கங்கள் இருந்திருக்கின்றன. அங்கு தென்கிழக்குச் சீனப் பகுதிகளில் இந்து சமுதாயம் இன்றும் இருக்கிறது. இந்து சமயத்தின் யோகம், வர்மக் கலைகள் போன்றவை சீனப்பண்பாட்டில் ஏற்படுத்திய தாக்கம் அதிகம்.

சீனாவின் "சுன்வுகாங்" என்ற புராண பாத்திரம் அனுமாரைத்தான் உருவகித்தது என்று சொல்வார்களும் உண்டு. சீன அரசியல் மாற்றங்கள் இந்து சமய வளர்ச்சியை அங்கு மட்டுப் படுத்தியது. சீனத்தின் ஒரு பகுதியான திபெத்தில் இந்து சமயம் அதிகமாகவே இருக்கிறது. புத்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் கூட, இந்துசமய நெறிகளைப் பின்பற்றுவதும் இந்து சமய விழாக்களில் பங்கு கொள்வதும் அங்கு அதிகம்.

ஜப்பான் நாட்டிலும் ஓரளவு இந்து சமயத்தின் தாக்கத்தைக் காண்கிறோம். அதிகம் இல்லையெனினும், அங்குள்ள புடக்ககோ தமகாகோ கோயிலில் விநாயகப் பெருமான் சிலைகள் இருப்பது இந்து சமயத்தின் பரவலைக் காட்டுகிறது. 13 -ம் நூற்றாண்டில் ஸ்ரீ விஜய சாம்ராஜ்யமாக இந்தோனேசியா இருந்தபோது, துமாசிக் என்ற பெயரில் சிங்கப்பூர் விளங்கியது. பரமேசுவரன் ஆட்சியில் இருந்தான்.அப்போது சிங்கப்பூர் ஆற்றின் முகத்துவாரத்தில் இந்து கோயில் ஒன்று இருந்தாகக் கூறப்படுகிறது. 13ம் நூற்றாண்டிலிருந்தே சிங்கப்பூரில் இந்து கோயில் இருந்து இருப்பதை வரலாறு நமக்கு காட்டுகிறது.

# யாமிருக்கப் பயமேன்



சிவபெருமானின் செல்வக்குமரன் முருகன் ஆண்டிக்கோலத்தில் வீற்றிருப்பது பழனிமலை. இம்மலை மதுரையிலிருந்து மேற்கே எழுபது மைல் தொலைவில் உள்ளது பழனிமலையையொட்டி கீழடிவாரத்தில் ஒரு குன்றுள்ளது அக்குன்றிற்கு இடும்பன் மலையென்று பெயர் கைலாயத்தில் நடக்கவிருந்த பார்வதிபரமசிவன் திருக்கல்யாணத்தைக் கண்டுகழிக்கவிரும்பினார் அகத்தியர் எனவே பொதிகைமலையைவிட்டுக்கைலாயம் நோக்கிப் புறப்பட்டார் செல்லும் வழியில் ஆங்காங்கே தங்கிச்சென்றார் அவ்வாறு தங்கிச்சென்ற இடங்களில் பழனியும் ஒன்று. அவர் அங்கு தங்க நேர்ந்த போது தவம் புரிவதற்காக இரண்டு மலைகளை சிருஷ்டித்தார் பிற்காலத்தில் அம்மலைத்தொடருக்கு சிவகிரி எனப்பெயரிட்டனர்

பார்வதி பரமசிவன் திருக்கல்யாணத்தைக்கானஎன்னற்ற முனிவர்களும் தேவர்களும் ரிஷிகளும் வந்திருந்தனர் அதனால் கைலாயமலை பாரம் மிகுதியாகி கைலாயம் தாழ்ந்து தெற்கு உயர்ந்தது பூமியின் பளுவை சமநிலையாக்கிச்சீர்செய்யசிவபெருமான் அகத்தியரை தெற்கே அனுப்பி வைத்தார் அதன்படி அகத்தியர் தன்னிருப்பிடமான தெற்கேயுள்ள பொதிகைமலைசென்று பூமியை சமநிலையக்கினார்.திருக்கல்யாணம் செவ்வனே நடந்தேறியது பார்வதி முதலில் யானைமுகத்தோன் கணேசன் ஆறுமுகத்தோன் முருகனுக்கும் அன்னையானார்

ஒரு நாள் கைலாயத்தில் சிவனும் பார்வதியும் வீற்றிருந்த போது நாரதர் ஒருமாங்கனியுடன் அங்கு வந்தார் அச்சமயம் கணேசனும் முருகனும் அங்கு வந்து சேர்ந்தனர் இருவரும் அந்தக்கனி தனக்குத்தான் வேண்டுமென அடம்பிடித்தனர் இருப்பதோ ஒருகனி அதற்கொரு உபாயத்தைக்கண்டுபிடித்தார் பரமசிவன் இருவரையும் அழைத்து இவ்வுலகை எவர் முதலில் சுற்றி வருகிறார்களோஅவர்களுத்தான் இந்தக்கனி எனநிபந்தனையிட்டார் அதைக்கேட்ட மறுகணமே முருகப்பெருமான் மயில்மீதேறி உலகை வலம்வரப்புறப்பட்டார் ஆனைமுகத்தோன் சற்று நேரம் யோசித்து விட்டு அம்மையப்பனை வலம் வந்து கனியை வேண்டி நின்றார் விநாயகனின் உன்மைத்தத்துவத்தை உணர்ந்த சிவபெருமான் அக்கனியை விநாயகரிடமே கையளித்தார் உலகைச்சுற்றி வந்த முருகப்பெருமானோ அண்ணனின் கையிலிருந்த கனியைக்கண்டதும் பெரும் கோபமுற்றார் பழம் தனக்குத்தான் சேரவேண்டுமென பெற்றோருடன் வாதிட்டார் பெற்றோர் உண்மையை எடுத்துக்கூறியும் அதனை ஏற்க மறுத்து பெற்றோரை விட்டு வெளியேற முயன்றார், பெற்றோர்கள் அவரைத்தடுத்துக்குமரா"பழம் நீ" உனக்கு எதற்கு வேறுபழம் என்று ஆறுதல் அளித்தனர் முருகப்பெருமான் எதையுமே காதில் வாங்கிக்கொள்ளாமல் சிவகிரிக்கு அருகிலுள்ள திருவாவினன்குடியிற்கு வந்து சேர்ந்தார் பலநாட்கள் அங்கு தங்கி இருந்துவிட்டு சிவகிரி வந்து அங்கு நிரந்தரமாகத்தங்கிவிட்டார்.சிவகிரி பின்னாளில் (பழம்நீ) பழனி என்ற பெயரைப் பெற்றது

பொதிகைமலைவந்தடைந்த அகத்தியர் ஒரு நாள் திடீரென்று தான் படைத்த சிவகிரியையும் அதையடுத்த சிறு குன்றையும் பொதிகைமலைக்கே பெயர்த்துக்கொண்டுவரத் திட்டமிட்டார் எனவே இடும்பாசுரனைக் கூப்பிட்டு தான்படைத்த இரண்டு மலைகளையும் பெயர்த்துக்கொண்டு வருமாறு கட்டளையிட்டார் சிவகிரி வந்துசேர்ந்த இடும்பன் ஒரு காவடியின் இருமுனைகளிலும் இரண்டு மலைகளையும் கட்டினான் பின் காவடியைத்தூக்கிய போது அவனால் அசைக்க முடியவில்லை முயன்று தூக்கியதில் சிறு குன்றிருந்த முனை மேலெழும்பியது ஆனால் சிவகிரி அசையவேயில்லை மனம் குழம்பிய நிலையில் உன்மை என்னவென அறிந்து வர மேலே சென்ற இடும்பன் முருகனைக்கண்டான் தன்னைத் தொந்தரவு செய்தமைக்காக கோபம் கொண்டு இடும்பனை வதம் செயதார், இதனை அறிந்து விரைந்த அகத்தியரின் வேண்டுகோளுக்கினங்க இடும்பனை உயிர் மீட்டுக்கொடுத்த பழனியாண்டவர் அத்தோடு இடும்பனுக்கு முதலில் பூஜை நடந்த பின் தனக்குப் பூஜை நடக்குமென்று வாக்களித்தார்

அதன்படி இன்றும் பக்கதர்கள் முதலில் மலையின் நடுவிலுள்ள இடும்பனை வணங்கி அதன் பின் முருகனை வணங்க மலைமேல் செல்கிறார்கள். இடும்பனின் காவடி நினைவாகவே பக்கதர்கள் காவடி எடுப்பதோடு பழனியை அடுத்த சிறு குன்றிற்கு இடும்பன் மலையென்று பெயரிட்டு சிறப்பித்துள்ளனர் யாமிருக்கப்பயமேன் என்ற அருள் வாக்கினை அளித்த முருகப்பெருமான் பழனிமலைமீதிருந்து அருள் பாலித்துக்கொண்டிருக்கின்றார்

சுபம்

**திருமதி கணபதி விஜயலக்ஷ்மி**

# ஹைபர்கணவாய் முதல்
# கொவன்றிகால்வாய் வரை காணபத்தியம்

இந்துப்பண்பாட்டு மரபில் விநாயகர் வழிபாட்டுக்கென்று ஓர் தனி இடம் உண்டு. இற்றைவரை நடைபெற்ற இந்துசயம ஆய்வுகளில் காலத்தால் முற்பட்டதாக கருதப்படும் சிந்துவெளி நாகரிகத்தில் விநாயகர் வழிபாட்டிற்கான சில கூறுகள் இருப்பதாக கருத இடமுண்டுவென ஆய்வாளர்கள் குறிப்படுகின்றனர். மனித-விலங்கு உருக்கலப்பிலான இலட்சனைகள், மற்றும் 'சுவஸ்தி' அடையாளம் முதலியன இதற்கு சான்றாகின்றன. மேலும் ஹைபர் கணவாய் ஊடாக இந்தியாவிற்குள் வந்த ஆரியர்கள் கணபதியை வழிபட்டதற்கான சில சான்றுகளும் உண்டு. இதற்கு இருக்கு வேதத்தில் 'கணபதி' என்ற சொல்லாட்சி வருவதனை நோக்கலாம். இது விநாயகரைக் குறிக்காமல் கணங்களுக்குத் தலைவனாக இருந்த இந்திரனைக் குறிக்கலாம் என்பார் கீராஷ் பாதிரியார். ஆனால் தேவர்கள் அடைமொழியின்றி கணம் என்ற பெயரால் மட்டும் அழைக்கப்படுவதில்லை. அவர்களுள் பதிணெண்வகை கணங்கள் உண்டு.

ஐதரேயப் பிராமணத்தில் 'கணபதி பிரம்மா' என்று கூறப்பட்டுள்ளது. தைத்திரிய ஆரணியத்தில் 'தந்தின்' என்று வருகின்றது. இதற்கு தந்தத்தை உடையவர் என்று பொருள். விநாயகரின் காயத்திரி மந்திரத்திலும் இவ்வாறு வருவதை உற்று நோக்கலாம். மானவ கிருக்கியசாஸ்திரத்தில் நான்கு விநாயகர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்கள் சாலகடங்கர், கூஷ்மான்ட ராஜபுத்திரர், உஸ்மிதர், தேவயஞனர் என்பவர்களாவர்.

இதிகாசங்களில் மகாபாரதத்தை வியாசர் கூற விநாயகர் எழுதியதாக வரலாறு. புராணங்களில் 'பிரம்மகைவர்தன' புராணத்தில் விநாயகர் கிருஷ்ணருடைய அவதாரம் என்று கூறப்பட்டுள்ளது. வராக, வாமன, ஸ்கந்த ,அக்கினி, பத்ம, கருட புராணங்களில் விநாயக வரலாறு விரிவாகக்கூறப்பட்டுள்ளது. மனுஸ்மிருதியில் சூத்திரர்கள் கணபதியை தெய்வமாகக் கொண்டாடினார்கள் என்று அளௗ புயவவல கூறுகின்றார்.

சங்க இலக்கியங்களில் விநாயகர் பற்றிய குறிப்புகள் எதனையும் காண முடியவில்லை. எனினும் நேரடியாக சிவனை குறிக்காததால் சிவவழிபாடு இல்லையென்று கூறமுடியாதது போல விநாயகரை குறிக்கும் சொற்றொடர்கள் இல்லையென்பதனால் விநாயக வழிபாடே இருந்திருக்கமுடியாது எனக்கூறுவது ஏற்புடையதன்று. உரையாசிரியரான இளம்பூனார் தொல்காப்பிய செய்யுள் உரையில் 'தன் தோல் நான்கில்' என்ற செய்யுளை எடுத்துக் காட்டுகிறார். இது நர்த்தன கணபதியைக் குறிப்பதாகும். முத்தொள்ளாயிரக் காப்புச் செய்யுளாக பருதப்பட்ட 'எண்ணிய எண்ணியாங்கு' என்பதும் ஞானாமிருத முகப்பிலும் தண்டியலங்கார பாடலுரையிலும் வீரசோழிய அலங்கார பாடலுரையிலும் வரும் குறிப்புக்கள் காணபத்தியத்தை சுட்டுவதாக அமைகின்றன.

மணிமேகலையில் 'கரகங்கவிழ்த்த காவிரிப்பாவை' என்கின்ற ஒரு அடி காணப்பாடுகின்றது. இது விநாயகர் காகமாக வந்து அகத்தியரின் கமண்டலத்தை தட்டி காவிரி பெருக்கெடுத்த வரலாற்றைச் சுட்டுவதாக அமைந்துள்ளது. .பல்லவர் கால பத்தி இலக்கியங்களில் விநாயகர் பற்றிய செய்தி பலவாக இருப்பதனை அறிய முடிகின்றது. சம்பந்தர் தேவாரங்களில் பிள்ளையார் பற்றிய குறிப்புக்கள் ஐந்து இடங்களில் வந்துள்ளன. சிறுதொண்டர் வாதாபியை வென்று அங்கிருந்து கணபதியைக் கொணர்ந்ததாலேயே வாதாபிகணபதி தமிழ்நாட்டிற்கு வந்ததாக அறிஞர்குழாம் கருதுகின்றனர். சோழர் காலத்தில் நம்பியாண்டார் நம்பிக்கு அருள் செய்ததாகவும், இராஜராஜ சோழன் திருமுறைகளை மீட்டெடுக்க விநாயகர் உதவியதாகவும் வரலாறுகள் குறிப்பிடுகின்றன. கச்சியப்பர் கந்த புராண காப்புச்செய்யுளில் விநாயகரைப்பாடுவதும், இது போல் இலக்கியங்களில் காப்புச் செய்யுள்கள் பாடப்படுவதும் கவனிக்கத்தக்கது. மேலும் அக்கால கல்வெட்டுக்களிலும், சிற்பங்களிலும் விநாயகர்பற்றிய செய்திகள் வருவதனை மிகையாகக் காணலாம்.

தென்கிழக்காசிய நாடுகளில் விநாயக வழிபாட்டின் எச்சங்களை ஆய்வாளர்கள் ஆய்வு செய்து வெளிப்படுத்தி உள்ளனர். சீனா, ஜப்பான், சுமாத்திரா, ஜவா, மலேசியா, மாலைதீவுகள் போன்ற நாடுகளில் இதற்கான ஆதாரங்கள் தெளிவாகக் கிடைத்துள்ளன. விநாயகர் வழிபாடு காணபத்தியம் என்கின்ற தனிக்கூறாக மட்டும் இல்லாமல் இந்து சமயத்தின் அனைத்துக் கூறுகளோடும் கலந்துள்ளது. இவைதாண்டியும் அவைதீக நெறியான பௌத்தத்திலும் 'கணபதிதெய்யோ' எனக்குறிப்பிடப்படுகின்றது. இன்று மேலைத்தேயத்தவர்களால் 'நுடநிாயவெ புழன' என விநாயகர் அறியப்படுகின்றார். ஆகம வழக்கிலும் விநாயக வழிபாட்டிற்கென ஒரு தனியிடம் உண்டு. சுப்பிரபோதாகமம் விநாயகரின் அவதாரத்தை விதந்துரைக்கின்றது.

இத்தனை வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட விநாயகர் வழிபாடானது இன்று ஐரோப்பா கண்டம் எங்கும் வேரூன்றி பரந்துபட்டு விட்டது . இதன் தொடர்ச்சியாய் பெரிய பிரித்தானியாவின் கொவன்றி கால்வாய்யோரமாய் அமைந்த பெரிய பிள்ளையார் கோவிலை நோக்கலாம். இக்கோவிலின் சிறப்பு, முக்கியத்துவம், அமைவிடம் என்பன நிகழ்கால விநாயக வழிபாட்டில் ஒருமையில் கல்லாக அமைவதனை எடுத்து நோக்கலாம்.

'ஆற்றங்கரை யோரத்திலே அரச மர நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்'

என்கின்ற மிகப்பிரபல்யமான பஜனைப் பாடலுக்கமைய விநாயகப்பெருமான் ஆற்றங்கரையோரமாக வீற்றிருந்து இங்கு திருவருள் பாலிக்கின்றார்.

கதிரவன் உதிக்கும் கிழக்குத்திசை பார்த்து இவ்ஆலயத்தின் பிரதான வாசல் அமைந்திருப்பது சிறப்பம்சமாகும். கற்பக்கிரகம் வியாழமட்டம் வரை சுதை கொண்டும் விமானம் மரக்கலைவை கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது. விக்கிரகத்தைப் பொறுத்தவரை அண்ணளவாக ஐந்தடி கொண்ட விநாயகப் பெருமானாக ஆறங்குலப்பீடத்தின் மீது அமர்ந்திருக்கின்றார். இவர் ராஜகளையுடன் சிம்மாசனத்தின் மீது வீற்றிருக்கும் காட்சி பார்க்கும் அடியவர்களின் மனதை ஈர்க்க்கூடியது.

துதிக்கை இடம் சுழியாக இடக்கையில் உள்ள மோதகத்தினைத் தொட்டவாறும், வலதுகை அபய முத்திரையினைக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது. மேற்கரங்களிரண்டும் பாச அங்குசங்களை ஏந்தியுள்ளது. வலதுகால் தொங்கியவாறு செங்கமலத்தின் மீதும், இடதுகால் மடித்த பாவனையிலும் அமர்ந்திருக்கின்றார். பாதத்தின் அடியில் இவருக்குரிய வாகனமாகிய மூஷிகம் அமர்துள்ளது. விநாயக்பெருமானின் மஸ்தகத்தில் லஷ்மியின் திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளமை இவ்விக்கிரகத்தின் தனிச்சிறப்பம்சமாகும்.

விநாயகப்பெருமானை அடுத்து வலப்பறத்தே ஹரனும், இடப்புறத்தே ஹரியும் அர்த்த பிரதானங்களாய் அமைந்திருக்கின்றனர். சிவலிங்கத்திருமேனியின் முன் நந்தியும் பெருமான் அமர்ந்திருக்க கமலாம்பிகா சமேத கைலாசநாதப் பெருமானாய் அருள்பாலிக்கின்றார். பத்மாவதி தாயார் உடனுறையும் பிரசன்ன வெங்கடேஸ்வராய் மகாவிஷ்ணுவும் உள்ளார். கருவறையின் மூன்று கோஷ்டங்களிலும் முறையே வியாக்கியான தட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், சரஸ்வதிதேவி ஆகியோர் வீற்றிருக்கின்றனர். தென்கிழக்கு மூலையை அண்மித்து ஜெயதுர்க்கை என்ற நாமம் பூண்டு விஷ்ணுதுர்க்கை விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. மூலாலயத்தின் அக்கினிமூலையில் பத்மாசனத்தின்மீது வரலக்சுமித்தாயார் அமர்ந்திருக்கின்றார். தொடர்ந்து மேற்குப்புற சன்னிதானத்தில் ஐந்து தலைகொண்ட நாகதம்பிரானும், சீதா, லக்சுமண ஆஞ்சனேயர் சகிதம் கோதண்ட ராமராய் ஸ்ரீராமசபையும், வாயுமூலையில் ஸ்ரீவள்ளி கஜாவல்லி சமேத சுப்பிரமணிய மூர்த்தமாய் பாலகதிர்காம முருகனும் வடதிசையில் 18 படிகள் மீது பந்தலத்து ராஜகுமாரனாய் ஸ்ரீஹரிகரசுதனும், அதனைத்தொடர்ந்து சிவகாமி உடனுறையும் சிதம்பர நடராஜப்பெருமானும்; தேவசபையும், ஈசானமூலையை அடுத்து காவல் தெய்வமாகிய வைரவர் பெருமான், 'சொர்ணஹர்ஷண வைரவர்' என்கின்ற திருநாமம் பூண்டும் திருவருள் பாலிக்கின்றனர். விநாயகப்பெருமானுக்கரிய சண்டேஸ்வர மூர்த்தமாகிய கும்போதர சண்டேஸ்வரர் கோமுகையை அண்மித்துள்ளார். இவரை தரிசிப்பதாலேயே வழிபாட்டின் முழுப்பயனையும் பெறமுடியும்.

பிரதான ஆலயத்துள் அல்லாமல் ஆதித்தியாதி நவக்கிரகங்களுக்கென்று தனிச்சன்னிதானமும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள ஒவ்வொரு இறைத்திருவுள்ளங்களும் தனிப்பட்ட முக்கியத்துவமும், விக்கிரக லட்சணமும் கொண்டவையாகும். இதேபோல் அவற்றிக்கு சூட்டப்பட்ட திருநாமங்களும் அடியவர்களின் அபிலாஷையை பூர்த்தி செய்யக்கூடியவை என்பதை பறை சாற்றும். 'ஸ்ரீசித்தி விநாயகர்' என்பது தனக்கு மேல் தலைவனில்லாது கேட்கும் அனைவற்றையும் தந்து சித்தி பெறச்செய்பவன் என்பதை விளக்கும்.

தொகுத்து நோக்குமிடத்து வேதகாலம் முதல் ஆரம்பமான விநாயக வழிபாடானது கொவன்றி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம் ஆரம்பமானவரை இடைவிடாது காலம்தோறும் சிறப்புப்பெற்று வளர்ந்து வந்ததனைக் காணமுடிகின்றது.

சுபம்

**ஸ்ரீமதி ச.ஸ்ரீகமலேஸ்வரி B A (Hons)**



**உச்சிப்பிள்ளையார் கோயில்**

தென்னிந்திய மாநிலமான தமிழகத்தின்திருச்சி நகரத்தில் உள்ள பிள்ளையார்கோயில் ஆகும். 3 பில்லியன் ஆண்டுகள் பழமை வாய்ந்த பாறையின் உச்சியில் இந்த கோயில் அமைந்துள்ளதால் உச்சிப்பிள்ளையார் கோயில் என்று இதற்கு பெயர் வந்தது. (இப்பாறைக்குமலைக் கோட்டை எனவும் பெயர் உண்டு.

செல்வன். கெதுஷன்.இரவீந்திரன்



## விநாயகர் சதுர்த்தி

ஒரு நாள் பார்வதி தேவி குளிக்கச் சென்றாள். அங்கு காவலுக்கு தனது உதவியாளர்கள் யாரும் இல்லாததால், தன் உடம்பில் இருந்த அழுக்கு மூலம் ஒரு சிறுவனை உருவாக்கி உயிர்கொடுத்து காவலுக்கு நிக்கச்சொன்னார். யாரையும் உள்ளே விடவேண்டாம் எனவும் கட்டளையிட்டார். அப்போது அங்கே வந்த சிவபெருமானை தடுத்தான் அந்தச் சிறுவன். கோபமுற்ற சிவபெருமான் அவன் தலையை துண்டித்தார். பின்னர் பார்வதியின் மைந்தன் என்பதை அறிந்த சிவபெருமான் அச்சமுற்று, தன் பூதகணங்களை அழைத்து அவர்கள் முதலில் பார்க்கும் ஜீவராசியின் தலையை துண்டித்து எடுத்துவருமாறு கூறினார். அவர்கள் முதலில் பார்த்ததோ ஒரு யானையை. சிவபெருமானின் கட்டளைப்படி அந்த யானையின் தலையை துண்டித்து எடுத்துவந்தனர். அதனை சிவபெருமான் அந்த சிறுவனின் உடம்பில் ஒட்டவைத்து மீண்டும் உயிர் கொடுத்தார். அப்போது வெளியே வந்த பார்வதி பிள்ளை யாரு? எனக் கேட்டார். அதுவே அச்சிறுவனுக்கு பெயராகிவிட்டது. அச்சிறுவன் தான் பிள்ளையார்.

செல்வன். மதுஷன்.இரவீந்திரன்

## விஷ்ணுசஹஸ்ரநாமம்



மகாபாரதத்தில் பீஷ்ம பிதாமகர் யுதிஷ்டிரருக்குபோர்க்களத்தில் போதித்த ஆயிரம் திருமாலின் நாமங்கள் கொண்ட ஒரு அத்தியாயம். மகாபாரதம் ஆனுசாஸனிக பர்வத்தில் உள்ள 149-வது அத்தியாயம். 'ஸஹஸ்ரம்' என்றால் ஆயிரம். 'நாமம்' என்றால் பெயர். ஸஹஸ்ரநாமப் பகுதி மட்டும் 'அனுஷ்டுப்' என்ற வடமொழி யாப்புவகையிலுள்ள் 107 சுலோகங்களையும் அவைகளுக்கு முன்னும் பின்னும் ஏறக்குறைய 40 சுலோகங்களையும் கொண்டது. இது இந்து சமயப் பழங்கால நூல்களுக்குள் தலைசிறந்த இறைவணக்கமாக இன்றும் புழங்கப்பட்டு வருகிறது

மகாபாரதம், மற்றும் 18 புராணங்கள், 18 உபபுராணங்கள் இவற்றையெல்லாம் இயற்றிய வியாசருக்கு இந்து மதம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது. ஏனென்றால் அவர் எழுதிய ஒவ்வொரு நூலிலும் பல அரிய பெரிய தோத்திரங்களை அடக்கியுள்ளார். அப்படித்தான் விஷ்ணு ஸஹஸ்ரநாமமும் மகாபாரதத்தின் ஒரு அத்தியாயமாக அடங்கியுள்ளது.இது சத்வகுணம் நிறைந்த பீஷ்மரால் சத்வகுணம் நிறைந்த யுதிஷ்டிரருக்கு போதிக்கப்பட்ட சத்வ வழிபாட்டுக்குகந்த தோத்திரம். உலகத்தில் தர்மத்தைப் பற்றி எல்லாம் தெரிந்தவர்கள் பன்னிருவர் என்று பட்டியலிட்டுக் கூறும் பாகவதம் [1] அப்பட்டியலில் பீஷ்மரைச் சேர்த்திருப்பதிலிருந்து பீஷ்மரின் ஆன்மிகப் பெருமை விளங்கும். அதனாலேயே மகாபாரதப் போருக்குப் பின்

தர்மத்தின் நெளிவு சுளுவுகளைப் பற்றி யுதிஷ்டிரர் கண்ணனிடம் கேட்டபொழுது, 'வா, இதை பீஷ்மரிடமே கேட்டுத் தெரிந்துகொள்வோம்' என்று கண்ணன் அவரை பீஷ்மரிடம் அழைத்துச் செல்கிறார்.

யுதிஷ்டிரரின் ஐயப்பாடுகளை நீக்கும் வகையில் பீஷ்மர் அரசதர்மம், நெருக்கடிநிலைதர்மம், ஆண், பெண் தர்மம், தான தர்மம், வீடுபெறும் தர்மம், ஆக இன்னும் பல தர்மங்களை உபதேசித்தார். நம் முன்னோர்கள் நல்வழி என்று தாம் ஆராய்ந்து உணர்ந்த வழியில் தாமும் சென்று நலம் பெற்றபின் நம்மையும் அதைப் பின்பற்றுமாறு அன்புடன் கட்டளையிட்டுள்ளதை 'அனுசாஸனம்' என்பர். இப்படி அனுசாஸனங்கள் நிறைந்த அனுசாஸனபர்வத்தின் முடிவில், ஒரு சிறந்த அனுசாஸனமாக விஷ்ணு சஹஸ்ரநாமம் இடம் பெறுகிறது. முடிவாக யுதிஷ்டிரர் கேட்கும் கேள்விகள் ஆறு:

1. இறைவனைப் பற்றி விளக்கும் எல்லா நூல்களிலும் கூறப்பட்டுள்ள சிறந்த ஒரே தெய்வம் எது?
2. அதை அடைவதற்குரிய மேலான நிலை எது?
3. எந்த தெய்வத்தை அவரது குணச்சிறப்புகளைப் புகழ்ந்து பாடி மானிடர்கள் நலம் எய்துவார்கள்?
4. எந்த தெய்வத்தை புறத்தே அல்லது மனத்தினாலேயோ வழிபட்டு நலமடைய வேண்டும்?
5. எல்லா வழிபாட்டு நெறிகளிலும் சிறந்த நெறியாகத் தங்கள் விருப்பிற்கும் கருத்திற்கும் ஏற்றது எது?
6. எதனை ஜபித்து மனிதன் பிறப்புக் கட்டிலிருந்து விடுபடுகிறான்?

இவை அத்தனை கேள்விகளுக்கும் ஒரே முடிவான விடையாக பீஷ்மர் விஷ்ணுவின் பெயர்களை **தியானித்தும், துதித்தும், வணங்கியும்**[2] ஒருவன் செய்வதால் எல்லாவித துக்கங்களையும் கடந்துவிடுவான் என்று சொல்லி, விஷ்ணு சஹஸ்ரநாமத்தைச் சொல்கிறார்.ஆக இவ்வழிபாட்டிற்கு மூன்று வித வெளிப்பாடுகள்: அவன் குணங்களையும் உருவங்களையும் மனதிலேயே நிறுத்துவது; அவைகளை பறைசாற்றும் நாமங்களை நாவினால் பாடுவது; சிரம் தாழ்த்தி அவனை வணங்குவது.

விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தைப் போன்ற பழங்கால ஆன்மிக நூல்களிலெல்லாம் 'பலசுருதி' என்றோர் பகுதி தவறாமல் இருக்கும். அப்பகுதியில் இந்த நூலை எப்படியெப்படியெல்லாம் தியானித்தோ படித்தோ ஆண்டவனை அர்ச்சித்தோ செய்தால் இன்னின்ன நற்பயன்கள் கிடைக்கும் என்பதை இனிக்க இனிக்கச் சொல்லப்பட்டிருக்கும். இவ்விதம் விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தைப் படிப்பதால் வரக்கூடிய பயன்கள் இருபது சுலோகங்களில் மகாபாரதத்திலேயே ஸஹஸ்ரநாமத்தின் முடிவில் சொல்லப்பட்டிருக்கின்றன. காலப்போக்கில் இவை தவிர,பத்மபுராணத்திலிருந்தும் பகவத் கீதையிலிருந்தும் சில சுலோகங்கள் இவைகளுடன் சேர்த்துப் படிக்கப்படுகின்றன.

'பலசுருதி' யிலிருந்து சில பகுதிகள்:

- எவன் இதனை (இத்தோத்திரத்தை)தினமும் கேட்கிறானோ, எவன் இதனைக்கொண்டு ஆண்டவனை துதிக்கிறானோ அவன் இம்மையிலும் மறுமையிலும் சிறிதும் கெடுதலை அடையமாட்டான்.

- தருமத்தை விரும்புபவர் தருமத்தையும், பொருளை விரும்புபவர் பொருளையும், காமத்தை விரும்புபவர் காமத்தையும், வம்சம் செழிக்க விரும்புபவர் வம்சச்செழிப்பையும் பெறுவர்.

- உள்ளத்தூய்மையும் புறத்தூய்மையும் கொண்டு பக்தியுடன் புருஷோத்தமனை ஆயிரம் நாமங்களால் துதிப்பவன் நோயால் துன்புறுபவனானால் நோயிலிருந்து விடுபடுகிறான். சிறையில் அடைக்கப்பட்டவன் விடுபடுகிறான். ஆபத்தில் சிக்கியவன் மீள்கிறான். கடப்பதற்கு இயலாத இடையூறுகளை எளிதில் கடந்து விடுகிறான்.

- சிரத்தையும் பக்தியும் கொண்டவனாக இந்த ஸ்தோத்திரத்தைச் சொல்பவன் ஆன்மசுகம், பொறுமை, செல்வம்,மன உறுதி, நினைவாற்றல், புகழ் இவற்றைப் பெறுவான்.

- அறநூல்களில் கூறப்பட்ட அறமுறைகளை வாழ்க்கைமுறையாக ஏற்று வாழ்நாள் முழுதும் கடைப்பிடிப்பதே தருமம். தருமத்தையே தன் வலிவாகக்கொண்டு ஆண்டவன் இவ்வுலகைக் கட்டுப்படுத்துகிறார்.ஆண்டாள் திருப்பாவையில்6 பகவான் கண்ணனிடம் இற்றைக்கும் ஏழெழ் பிறவிக்கும் உன்தன்னொடு உற்றேமே யாவும் உமக்கே நாம ஆட்செய்வோம். மற்ற நம் காமங்கள் மாற்றேளோரெம்பாவாய் என்று வேண்டுகிறாள். பகவான் நாமம் மற்ற ஆசைகளை அழித்து பிறவி பெரும் பயனை அடைய செய்து, எங்கும் திருவருள் பெற்று இன்புற செய்யும். ஒம் நமோ நாராயணாய

கட்டற்ற கலைக்களஞ்சியமான விக்கிப்பீடியாவில் இருந்து.

**திருமதி A கஜேந்தினி**


# இந்துசமய இலக்கிய வரிசையில் சிவாகமங்கள் பெறும் முக்கியத்துவம் - ஓர் அறிமுகநோக்கு

*சு.நவநீதகிருஷ்ணசர்மா*

*B. A.Hons(Sanskrit)(Jaffna), P.G.D. in LIS(Jaffna), M.Phil.(Sanskrit)(Jaffna)*


பல்துறைசார் இலக்கியங்களையும் தன்னகத்தே கொண்டமொழியாக சமஸ்க்ருதம் விளங்குகிறது. இதிலமைந்த இலக்கியங்கள் காலத்தால் அழியாத கருத்துப்பேழைகளாக தொன்று தொட்டு இன்றுவரை பலராலும் போற்றி பேணப்பட்டு வருவனவாக உள்ளன. சமயம், வாழ்வியல், அரசியல், பொருளியல், அறம், கலை தத்துவம் என விரியும் பல்வேறும் விடயங்களையும் உள்ளடக்கிய வடமொழியிலமைந்த பல இலக்கியங்கள் வரலாற்று ரீதியிலும் கூறப்படும் பொருளின் அடிப்படையிலும் வேறு வகைகளிலும் உலகில் தனிச்சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன.

இவை யாவற்றுள்ளும் முதன்மையாக தொன்மை ஏடுகளாக விளங்கும் வேத இலக்கியங்கள் இம்மொழியிலமைந்த இந்து சமய இலக்கிய வரிசையில் முதன்மை பெறுவன. இவற்றிற்கு அடுத்ததாக புராணங்களோடு ஓரளவிற்கு ஒத்த திசையில் வைத்தெண்ணத்தக்க சிவாகமங்கள் சிறப்பிடம் பெறுகின்றன என்றால் அது மிகையாகாது. மேலும் பல்வேறு விடயங்களையும் ஆகமங்கள் விளக்கிக் கூறுவதாலும் அதன் தாக்கத்தின் விளைவாக பிற்கால இலக்கியங்களில் அதற்கு உரைநூல்களும் சார்பு நூல்களும் பத்ததிகளும் தோன்றியமையாலும் பெருமுக்கியத்துவம் பெற்று அவை விளங்கின என்பதை நாம் உணரலாம். ஆலயக்கிரியைகள் யாதாயினுமொரு ஆகமத்தினைப் பின்பற்றி வழிதவறாமுறையில் செய்யப்படவேண்டுமென்பதும் தவறின் அழிவுண்டாகும் என்பதும் மகுடாகமத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.




இவ்வகையில் ஆகமங்கள் எவ்விதம் முக்கியம் பெற்று விளங்கின என்பதை எடுத்துநோக்கின் முதலில் கூறத்தக்கது அதன் தெய்வீக தோற்றமே ஆகும். சிவனின் சத்யோஜாதம் முதலிய ஐந்து திருமுகங்களில் இருந்தும் 28 மூலகமங்களும் தொடர்ந்து 207 உபாகமங்களும் தோன்றியதாக ஆகம அகச்சான்றுகளிலிருந்து அறியப்படும் மரபு காணப்படுறது. எடுத்துக்காட்டாக

சுப்ரபேதாகமத்தின் தந்த்ராவதார விதிபடலத்தில் மூலாகமங்களின் பெயர்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்துகிறது.



இது இறைவனால் வெளிப்படுத்தப்பட்டமையாலும் இறைவனிடமிருந்து வந்தது என்ற பொருளில் "ஆகமம்" என வழங்கப்பட்டது. இத்தெய்வீக தொடர்பினால் இவை மந்திரங்கள் தந்திரங்கள் என்பவற்றின் உற்பத்தி பற்றி பேசும் போது உயர்நிலை பெறுகின்றன. மேலும் இவை சிவசதாசிவமூர்த்தியின் அங்கங்களாகவும் கூறப்படும் காரணத்தாலும தெய்வீக தொடர்புடையவை. சுப்ரபேதாகமம் சிவாகமங்களை சதாசிவமூர்த்தியின் அங்கங்களாக பின்வருமாறு சிறப்பித்துக் கூறுகிறது.



ரிஷிகள் தாமறிந்தவற்றை தாம் வெளிப்படுத்தியதாக கூறாமல் தம் உள்ளத்திருக்கும் இறைவனே எமக்கு உணர்த்தினாள் என கூறுவர். இக்கருத்து அறிவியல் ரீதியில் நோக்கத் தக்கது. எவ்வாறாயினும் தெய்வநூல் என்ற வகையில் இவை முக்கியத்தும் உடையன.


ஆகமங்களின் முக்கியத்துவத்தை நாம் உணந்து கொள்வதற்கு அதனோடு தொடர்பட்டு தோற்றம் ஏனைய நூல்கள் எமக்கு உறுதுணை புரிகின்றன. லுட்சக்கணக்கான பாடல்களை உள்ளடக்கியதாக விளங்கிய மூலாகமங்களின் பாடல் எண்ணிக்கையை சிந்தியாகமம் பின்வருமாறு விளக்கியுள்ளது.



(பக்கம் 64ல் பார்க்கவும்)











कामिकं परार्धसंख्येयं कोटिं वा योगजं भवेत् ॥ 4.
चिन्त्यं शतसहस्रं च कारणं कोटिसंख्यया ।
पंचपंचायुताजीतं दीप्तं कक्षमनी युतम् ॥ 5
सूक्ष्मं च पद्मसंख्यां च सहस्रं शंखसंख्यया ।
अंशुमान्पंचलक्षं च सुप्रभेदं त्रिकोटिकम् ॥ 6
तत्संख्या विजयं प्रोक्तं निश्वासं कोटिसंख्यया ।
स्वायंभुवं सार्धकोटिं चायुतसंख्यमथानिलम् ॥ 7

இம்மூலாகமங்களுக்கு 207 உபாகமங்களும், பதினெட்டு பத்ததிகளும் காணப்படுகின்றன. மூலாகமங்களிலும் உபாகமங்களிலுமுள்ள ஞான பாதக்கருத்துக்கள் சிலவற்றை விளக்கியும் தொகுத்தும் எழுதப்பட்டவை அஷ்டபிரகரண நூல்கள் இவற்றுள் போஜதேவரால் தத்துவப்பிரகாசிகையும் சத்யோசோதிசிவாச்சாரியரால் தத்துவசங்க்ரகம் தத்துவத்தரய நிர்ணயம், மோட்சகாரிகை, பரமோட்சநிராசகாரிகை என்பனவும் ஸ்ரீகண்டரால் இரத்தினத்திரயம் என்ற நூலும் பட்டராம கண்டரால் நாதகாரிகை என்பனவும் எழுதப்பட்டன. இவை ஞானபாதகருத்துக்கள் எவ்விதம் சிறப்பிடம் பெற்றிருந்தன என்பதை எமக்குணர்த்தும்

மேலும் ஆகமங்களுக்கு எழுதப்பட ஏராளமான உரை நூல்களும் இவை பெருமுக்கியத்துவமுடையன என்பதைக் காட்டுகிறன. சத்யோசோதிசிவாச்சாரியர் பட்டநாராயணகண்டர் பட்டராமகண்டர் அகோரசிவாச்சாரியார் உமாபதிசிவாச்சாரியார் ஞானப்பிரகாசர் முதலியோர் ஆகமங்களில் சிலவற்றிற்கும் பலவற்றிற்கும் உரை எழுதி வியாக்கியானம் செய்து உள்ளனர். இவை மூலம் ஆகமமரபுகள் தொடர்ச்சியாக பேணப்படுவதற்கு பாய்ப்புக்கள் ஏற்படாயிற்று.

சிவாகமங்கள் சமயரீதியில் பெரு முக்கியத்துவமுடையன. ஆலய வழிபாட்டின் ஆதார நூல்களாக சிவாபமங்கள் முதன்மை பெறுவன. ஆகமங்களின் கிரியாபாதம், கர்ஷணம் ப்ரதிஷ்டை உற்சவம் பிராயச்சித்தம் என்ற வகையில் ஆலய வழிபாட்டை விளக்குகிறது. இவற்றுள் வரும் விடயங்களக ஆலயம் அமைத்தலுக்கான நிலத்தை தெரிவுசெய்தல், ஆலயநிர்மாணம், மண்டபங்கள் பிராகாரங்களின் அமைப்பு, மூர்த்தி பிரதிற்டை, நித்திய நைமித்திகங்கள், மகோத்ஸவழிவிதிகள் செய்யப்படவேண்டிய பிராயச்சித்த வகைகள் என்பன அமைகின்றன. மேலும் செய்யப்படவேண்டிய கிரியைகளுக்குரிய லட்சணங்கள் காலம் தேவையான சமயம் சார் பொருட்கள் கிரியைகளை செய்ய வேண்டிய முறைமைகள் அதனாலேற்படும் பயன்கள் பற்றியும் கூட ஆகமங்கள் விளக்குகின்ற காரணத்தினால் இவை முக்கியம் பெறுகின்றன. மேலும் மாற்றியமைத்திடமுடியாத தொடர்ச்சியான மரபுகளை பேணுவதிலும் சமயத்தை வழிநடத்துவதிலும் இவை பெருந்துணைபுரிவன.

வேறொரு நோக்கில் சிறந்த கலைநூல்கள் என்றவகையில் இவை சிறப்பிடம் பெறுகின்றன. சிற்பக்கலை கட்டிடக்கலை விக்கிரக்கலை என்பன பற்றி மிக விரிவான விளக்கங்கள் ஆகமங்களில் இடம்பெறுகின்றன. ஆலயத்தின் அமைப்புப் பற்றி விபரிக்கையில் அதற்குரிய அளவைகள் ஆலயம் அமைத்தற் கேற்ற பொருட்கள் மண்டபங்களினதும் பிராகாரங்களினதும் அமைப்பு ஆகியன பற்றியும் விளக்கிக் கூறுகின்ற காரணத்தால் இவை கட்டிடக்கலைக்குரிய சிறந்த ஆதாரநூல்களாக

விளங்குகின்றன. ப்ராகாரலஷணம் ஸ்தூலலிங்க லஷணம் என்பன பற்றி விளக்கிக் கூறுமிடத்தில் கட்டிடக்கலை அம்சங்களை நாம் காணலாம். மேலும் சிற்பங்களை அமைக்கும் முறைகளையும் தெய்வதிருவுருவங்களை அமைக்கும் முறைகளையும் ஆகமங்கள் விரிவாக கூறும் காரணத்தால் அவை சிற்பநூல்களாகவும் சிறப்பிடம் பெறுகின்றன. சாமிகாகமத்தில் பிரதிமாலஷணபடலத்தில் விக்கிரக அமைப்பு முறை விளக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கலைகளின் ஆதாரநூல்களாகவும் ஆகமங்கள் சிறப்பிடம் பெறுகின்றன.

தத்துவத் துறைக்கு ஊட்டமளித்த வகையிலும் சிவாகமங்கள் முக்கியத்துவமுடையன. கிரியைகளும் அதற்குரிய தத்துவார்த்தமான விளக்கங்களும் இதில் கூறப்படுகின்றன. லிங்கவழிபாடு முதலில் அருவுருவ உருவ அருவ வழிபாட்டு முறைகள் பற்றியும் இவற்றில் கூறப்படுகின்றன. சிவசின்னங்களை விளக்கி அதனூடாக வெளிப்படும் தத்துவங்களும் விளக்கப்படுகின்றன. ஞானபாதத்தில் முப்பொருள் உண்மை பற்றியும் ஞானம் பெறுவதற்கான வழிகளைப்பற்றியும் விளக்கிக் கூறப்படுகிறது. மேலும் சிவனின் திருவுருவங்கள் உணர்த்தும் தத்துவங்களும் இவற்றில் கூறப்படுகின்றன. இதனால் தத்துவநூல்களான பிற்கால நூல்களுக்கு இவை வழிகாட்டிய சிறப்புடையன.

மேலும் ஆகமங்கள் தனிமனித ஈடேற்றத்திற்கு வழிகாட்டுவன. சைவநாற்பாதம் பற்றியும் யோகசாதனை பற்றியும் இவை விளக்கிக் கூறும் வகையில் வாழ்வை செம்மைப்படுத்தும் ஸ்மிருதி நூல்களை ஒத்தநிலையில் இவை சிறப்பிடம் பெறுகின்றன. ஆலயத்தொண்டு பற்றி சரிபாபாதத்தில் இயமம் நியமம் முதலிய யோகசாதனைகள் பயிற்சி செய்யும் முறைகள் அட்டாங்கயோகம் என்றவகையுள் விளக்கப்படுகின்றன. இதனால் உள்ளத்தூய்மைக்கு யோகபாதமும் உடற்தூய்மைக்கு சரியாபாதமும் வழிகாட்டுகின்றன. இதனூடாக தனிமனித வாழ்வியற் கருத்துக்களைக் கொண்ட நூல் என்றவகையிலும் ஆகமங்கள் முதன்மை உடையன.


ஆகமங்கள் பெரும் கிரியை நூல்களாகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. இவை கிரியைகளை வகைப்படுத்தி விளக்கிக் கூறுவன. பிரதிஷ்டைபற்றி கூறும் போது அதில் நிகழவேண்டிய பதினெண் கிரியைகளையும் வரிசைப்படுத்தி விளக்கிக் கூறும் போது அவற்றை சிவாகமங்கள் மிருத்சங்க்ரகணம் அங்குரார்ப்பணம் ரத்னநியாசம் நயனோன்மீலனம் பிரதிமாசுத்தி, கிராமப்ரதஷிணம். ஜலாதிவாசம், ரஷாபந்தனம், வாஸ்துபூஜை, பஞ்சகவீயம், மண்டபசம்ஸ்காரம் சயனம் ஹோமம் ஸ்தாபனம் அஷ்டபந்தனம் மந்திரம் நாமகரணம் விவாகம் என்றவாறு விரித்துரைக்கின்றன. இக்கிரியைகள் பற்றி வழிகாட்ட எழுந்த பதினெண்பத்திநூல்களும் கிரியைமரபில் சிவாகமங்களின் சிறப்பிடத்தை எமக்கு உணர்த்தும்.

தனியே சமய நோக்கிலன்றி சிறந்த பொருளியற் சிந்தனைகளும் சோதிடம் மருத்தும் பற்றிய சிந்தனைகளும் ஆகமங்களில் கூறப்படும் காரணத்தால் அவை அறிவியல் நூல்களாகவும் சிறப்பிடம் பெறுகின்றன. நகர கிராம நிர்மானம் அதற்குரிய வழிவகைகள் கிரியைகளுக்குரிய திரவியங்களை ஒதுக்கீடு செய்து பங்கிடுதல் கிராமம் அல்லது நகரத்தை வாஸ்துமுறைப்படி அமைக்கும் விதம், கிராமத்தில் ஆலயம், மருத்துவசாலை, கல்விக்கூடம் முதலியன அமைய வேண்டிய இடம் ஆகியவற்றை ஆகமங்களின் பொருளியற் சிந்தனைகளாக நாம் கருதலாம். எந்த ஒரு செயலுக்கும் முன்பாக அதற்குரிய காலத்தை வரையறுக்கும் சிவாகமங்கள் சகுனம்,திக்கு முதலியன பற்றியும் நட்சத்திரங்களின் உத்தம மத்திம அதம பலன்கள் கிரியைகள் உயர்பலனை தருவதற்கு ஏற்ற சுபகாலங்கள் முதலிய பல சோதிடவிடயங்களையும் கூறுகின்றன.

சமூகமேம்பாட்டிற்கு வழிகாட்டும் நூல்கள் என்றவகையிலும் ஆகமங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. தனிமனித ஈடேற்றத்துக்குரிய தீக்ஷை முதலியவற்றை மட்டுமன்றி பெருவிழாக்களையும் பல்வேறு தரத்தாருக்குமுரிய ஒழுங்கங்களையும் வலியுறுத்துவதால் சமூகமாற்றமும் சமூக ஒற்றுமையும் ஏற்பட வழிகோலுகிறது. இச்சமூக மேம்பாட்டிற்கு வழிகாட்டும் நூல்கள் என்ற வகையில் ஆகமங்கள் சிறப்பிடம் பெறுகின்றன.

.இன்றைய இணையச்சூழலில் ஆகமங்களின் சிறப்பிடத்தை நாம் அறிந்து கொள்வதற்கு உதவும் மற்றோர் அம்சம் பெருகிவரும் ஆகம ஆராய்ச்சிகளும், அவற்றை அச்சிற்பதிக்கும் முயற்சிகளுமாகும். புதுச்சேரியிலுள்ள பிரெஞ்ச் ஆராய்ச்சி நிறுவனம். இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டுவருகிறது. அருகிவரும் ஆகமபிரதிகளை சேகரித்தலும் பதிப்பிதலும் பிரதான பணிகளாக இடம் பெறுகின்றன




இவ்வாறு தொகுத்து நோக்கின் சிவாகமங்கள் அறிவின் கருவூலங்களாகவும் சிற்பநூல்களாகவும் ஆலய பிரமாண நூல்களாகவும் கிரியை நூல்களாகவும் சைவசித்தாந்த செம்பொருளை விரித்துரைக்கும் நூல்களாக அமைந்து ஆன்மீக ஈடேற்றம் பெற உதவும் வகையில் சிறப்பிடம் பெற்று விளங்குவதை நாம் அவதானிக்கலாம்

# தமிழை வளர்ப்போம்

